விலை ரூபா 20.00


பயங்கர விபத்து
பக்கம் 09


முதல்வராக அகிலேஷ்
பக்கம் 11


மக்களைத் துரத்தும் வெள்ளைவான்
பக்கம் 17


இலங்கைக்கு அடுத்த அடி
பக்கம் 25

www.onlineuthayan.com

பக்கங்கள்: 28

# உதயன்

சுடர் 27 கதிர் 111

வள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 03 வெள்ளிக்கிழமை (16/03/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

# மேனனைச் சந்திக்க மறுத்து ஜெயலலிதா திடீர் அதிரடி

## பேச்சில் பேசி பயனில்லை எனவும் சீற்றம்

கொழும்பு, மார்ச் 16

ஜெனிவாவில் இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவந்திருக்கும் பிரேரணை தொடர்பில் கலந்தாலோசிப்பதற்கு நேரம் ஒதுக்குமாறு இந்திய தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் விடுத்த அவசரவேண்டுகோளை தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா நேற்றுத் திட்டவட்டமாக நிராகரித்துவிட்டார்.

இலங்கை அரசுக்கு எதிரான பிரேரணையை ஆதரிக்குமாறு தமிழ்நாட்டில் ஏகோபித்த குரலில் அரசியல் கட்சிகள் வலியுறுத்திவரும் தற்போதைய சூழ்நிலையில், சிவ்சங்கர் மேனனை சந்திக்க ஜெயலலிதா மறுத்திருப்பது மத்திய காங்கிரஸ் அரசுக்குப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

"ஜெயலலிதாவை சந்திப்பதற்குச் சிவ்சங்கர் மேனன் இரண்டு தடவைகள் சந்தர்ப்பம் கேட்டார். அவர் அவசரமாக சென்னை வருவதற்கும் ஏற்பாடானது. ஆனால், மத்திய அரசின் அமைச்சர்களுடனோ, உயர்மட்ட 27



## இந்தியாவிடம் மன்னிப்புக் கோரிய இலங்கைத் தூதர்

கொழும்பு, மார்ச் 16

விடுதலைப்புலிகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் குழுக்கள் இந்தியாவிலும் உள்ளன என்று விமர்சித்திருந்த இலங்கைத் தூதர் பிரசாத் காரியவசத்திற்கு இந்திய வெளிவிவகார இணைச் செயலர் அழைப்பாணை அனுப்பியிருந்தார். இந்த அழைப்பாணையைத் தொடர்ந்து நேற்று டில்லி சவுத் பிளாக்கில் உள்ள அலுவலகத்தில் காரியவசம் நேரில் ஆஜராகி மன்னிப்புக் கோரியுள்ளார்.

விடுதலைப்புலிகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் பல குழுக்கள் உலகம் முழுவதும் உள்ளன. அதுபோன்றவை இந்தியாவிலும் உள்ளன என்று 'இந்தியன் எக்ஸ் பிரஸ்' 27

## வடக்குக்கு மேலே சூரியன்

ஏப்ரல் மாத முதல் இரு வாரங்களிலும் சூரியன் இலங்கைக்கு மேலே உச்சம் கொடுக்கவுள்ளது. இதனால் அக்காலப் பகுதியில் வெப்ப நிலையும் அதிகரித்துக் காணப்படும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. ஏப்ரல் 5ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை இலங்கைக்கு மேலே சஞ்சரிக்கும் சூரியன் 13 ஆம் திகதி நண்பகல் 12. 11 மணிக்கு முல்லைத்தீவு, முள்ளியவளைக்கு மேலே உச்சம் கொடுக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பஸ் பெயர்ப் பலகை இனி 3 மொழிகளிலும்

அனைத்து மாகாணங்களிலும் சேவையில் ஈடுபட்டுள்ள பயணிகள் பஸ்களில் பெயர்ப்பலகையை சரியாகப் பொருத்த நடவடிக்கை எடுக்குமாறு மாகாண போக்குவரத்து அதிகார சபையிடம் தனியார் போக்குவரத்து அமைச்சு கோரியுள்ளது. இதன் போது சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகளில் பஸ்ஸின் சேவை இடம் குறித்த பெயர்ப்பலகை முறையாகப் பொருத்தப்பட வேண்டும் என அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. இத்திட்டத்தை ஏப்ரல் 13ஆம் திகதிக்கு முன்னர் செயற்படுத்துமாறு மனித உரிமை ஆணைக்குழு அறிவித்துள்ளதாக அமைச்சின் செயலாளர் விக்டர் சமரவீர தெரிவித்துள்ளார். மனித உரிமை ஆணைக்குழுவில் செய்யப்பட்ட முறைப்பாடு ஒன்றுக்கு அமைய குறித்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

## டக்ளஸுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை கைதுசெய்யுமாறு கோரி; சென்னை மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு விசாரணை 2 வாரங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு எதிராக, இன்டர்போல் எனப்படும் சர்வதேச காவல்துறையினர் பிடிவிராந்து பிறப்பிக்க, இந்திய உள்துறை அமைச்சு நடவடிக்கை எடுக்குமாறு நீதிமன்றம் பணிக்க வேண்டும் என்று கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. சென்னையில் உள்ள சட்டத்தரணி ஏ.புகழேந்தி இந்த மனுவை தாக்கல் செய்திருந்தார். இது நேற்றுமுன்தினம் புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. மனுவை விசாரணை செய்த நீதிபதி, வழக்கை மீண்டும் இரண்டு வாரங்களின் பின்னர் விசாரணை செய்வதாக அறிவித்தார்.

## ஓட்டோ சாரதி விளக்கமறியலில்

தாய்லாந்துப் பெண் ஒருவரை பலாத்காரமாக ஓட்டோவில் கடத்திச் செல்ல முயற்சித்த சந்தேகநபரை எதிர்வரும் மார்ச் 20ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. புறக்கோட்டை பகுதியில் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்ட ஜே.ஆர்.நிஷாந்த என்ற சந்தேகநபரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். கொழும்பு பிரதான நீதிவான் ரஷ்மி சிங்கப்புலி சந்தேகநபரை எதிர்வரும் 20ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# 'தண்டிக்கப்படாத போர்க் குற்றங்கள்' சனல் - 4 ஆவணப்படம் வெளிவந்தது

## இணையத்தில் மட்டும் 50,000 பேர் பார்வை

யாழ்ப்பாணம், மார்ச் 16

மிகுந்த பரபரப்புடன் எதிர்பார்க்கப்பட்ட 'சனல்-4' தொலைக்காட்சியின் 'சிறிலங்காவின் கொலைக்களங்கள்' ஆவணப்படத்தின் இரண்டாவது பாகம் நேற்று அதிகாலை இலங்கை நேரப்படி 4.25 மணிக்கு ஒளிபரப்பாகியது. பிரிட்டன் மற்றும் அயர்லாந்து நாடுகளுக்கான அலைவரிசையில் மட்டுமே அது ஒளிபரப்பானபோதும் நேற்றுப் பகல் இணையத் தளத்தில் அது வெளியிடப்பட்டது.

நேற்றிரவு வரையான சுமார் 20 மணி நேரத்தில் மட்டும் 50,000 பேர் வரையிலானோர் யூ-ரியூப் இணையத் தளத்தில் இந்த ஆவணப்படத்தைப் பார்வையிட்டுள்ளனர். 'சிறிலங்காவின் கொலைக்களங்கள் - தண்டிக்கப்படாத போர்க் குற்றங்கள்' என்ற தலைப்பில் இந்த ஆவணப்படம் தயாரிக்கப்பட்டுள் 27

# அமைச்சுப் பதவிகளை ராஜினாமா செய்வோம்

## மத்திய அரசுக்கு கருணாநிதி எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 16

இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா கொண்டுவந்துள்ள பிரேரணையை இந்தியா ஆதரிக்காவிட்டால், மத்திய அமைச்சரவையில் இருந்து விலகுவோம் என தி.மு.க. எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஜெனிவாவில் கொண்டுவரப்பட்டுள்ள இலங்கைக்கு எதிரான பிரேரணையை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்று மத்திய அரசில் அங்கம் வகிக்கும் தி.மு.க. கோரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பாக நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி தெரிவித்தவை 25

# ஐ.நா. முறையாகச் செயற்படத் தவறின் இலங்கை பொறுப்புக் கூறாமல் தப்பிவிடும்

## சமரசிங்கவின் கூற்று அப்பட்டமான பொய் என்கிறது கூட்டமைப்பு

கொழும்பு, மார்ச் 16

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் ஐ.நா. மனித உரிமைகள் சபை சரியாகச் செயற்படத் தவறின் பொறுப்புக்கூறும் கடமையிலிருந்து இலங்கை அரசு இலகுவாகத் தப்பிவிடும் என்று தெரிவித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜெனிவாவில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்த கருத்து அப்பட்டமான பொய்யென்றும் இக்கூற்று சர்வதேசத்தைப் பிழையாக வழி நடத்துக்கிறது என்றும் தெரிவித்துள்ளது.

ஜெனிவாவில் மஹிந்த சமரசிங்க ஆற்றிய உரை தொடர்பில் தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு அரசினால் தீர்வு வழங்கப்படும் என்றும், மனித உரிமைகள் பாதுகாக்கப்படும் என்றும் இலங்கை அரசு இதுவரை காலமும் சர்வதேசத்திற்கு வழங்கிவந்த உறுதிமொழிகள் அனைத்தையும் அது மீறிவிட்டது. 27

# தேர்தல் ஒத்திவைப்பு 19 ஆம் திகதியே முடிவு

யாழ்ப்பாணம், மார்ச் 16

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபைகளுக்கான தேர்தலை ஒத்திவைக்கக் கோரும் மனு மீதான தீர்ப்பு எதிர்வரும் 19ஆம் திகதி திங்கட்கிழமை வழங்கப்படும் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

முல்லைத்தீவைச் சேர்ந்த 7 பேரால் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு மீதான விசாரணை நீதியரசர் சிறீஸ்கந்தராசா முன்னிலையில் நேற்று பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

தேர்தலை ஒத்தி வைப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தது.

மனுதாரர்கள் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணியான பாலித்த குமாரசிங்க வாதாடினார். எதிர்மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணிகள் ஷிரான் கொரேயா மற்றும் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் வாதாடினர். 26

# மன்மோகன் சிங்கின் உருவப்பொம்மை எரிப்பு

திருவில்லிபுத்தூர், மார்ச்16

இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஆதரிக்கக் கோரி திருவில்லிப் புத்தூரில் நேற்றுமுன்தினம் பிரதமர் மன்மோகன்சிங்கின் உருவப்பொம்மை எரிக்கப்பட்டது. இதன் போது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பேரவை உறுப்பினர் கைது செய்யப்பட்டார்.

ஜெனிவாவில் நடைபெறும் ஐ.நா. கூட்டத்தில் இலங்கை மீது மனித உரிமை மீறல் தீர்மானத்தை அமெரிக்கா கொண்டு வந்துள்ளது. இந் தத்தீர்மானத்தை ஆதரிக்க வேண்டும் என்று தி.மு.க., அ.தி.மு.க., கம்யூனிஸ்ட் உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும் வலியுறுத்தி வருகின்றன.

இந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை நாடாளுமன்றத்தில் பேசிய மத்திய அமைச் 28

# வடக்கின் வைத்தியசாலைப் பணிகள் இன்று முதல் முற்றாக முடங்கும் அபாயம்

## சுகாதார அமைச்சு - மருத்துவ உதவியாளர்கள் பேச்சு தோல்வியில் முடிந்ததன் எதிரொலி

யாழ்ப்பாணம், மார்ச் 16

சுகாதார அமைச்சுடன் மருத்துவவியல் தொழில் வல்லுநர்கள் ஒன்றியத்தினர் நேற்றுமாலை நடத்திய பேச்சு தோல்வியில் முடிவடைந்தது. இதனால் இன்றுமுதல் நாடெங்கும் வைத்தியசாலைப் பணிகள் முற்றாக முடங்கும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

நான்கு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நாடளாவிய ரீதியில் மருத்துவ உதவியாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டம் ஒன்றை கடந்த செவ்வாய்க்கிழமை முதல் மேற்கொண்டு வருகின்றனர். இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தில் வைத்தியசாலையின் மருந்தாளர்கள், ஆய்வுகூட உத்தியோகத்தர்கள், எக்ஸ்றே கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்கள் போன்றோரும் குதித்துள்ளதால் நோயாளர்கள் உரிய 27

# யாழ். நகருக்கு அடுத்தபடியாக சாவகச்சேரியும் விரைவில் உயரும்

## சரவணபவன் எம்.பி புகழாரம்



யாழ்ப்பாணம், மார்ச் 16

சாவகச்சேரி நகர சபையும், சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் சங்கமும் பரஸ்பர புரிந்துணர்வுடன் செயற்படுவதால் இந்த நகரம் துரித கதியில் எழுச்சி பெறும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. இதனை முன்னுதாரணமாகக் கொண்டு ஏனைய நகர சபைகளும், பிரதேச சபைகளும் செயற்பட்டு நமது பிரதேசத்தை மீண்டும் கட்டி எழுப்ப வேண்டும் இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

நேற்று சாவகச்சேரி நகர சபை மண்டபத்தில் இடம் பெற்ற கலந்துரையாடல் ஒன்றின் போதே அவர் இந்தப் பாராட்டுதலையும் வேண்டுகோளையும் வெளிப்படுத்தினார்.

சாவகச்சேரி நகரசபைத் தலைவர் தேவசகாயம் பிள்ளை தலைமையில் சாவகச்சேரி நகரை அபிவிருத்தி செய்யும் வகையில் மேற்கொள்ளப்படவுள்ள நவீன கடைத்தொகுதி மற்றும் உட்கட்டமைப்பு நடவடிக்கைகள் தொடர்பாகக் கலந்துரையாடல் ஒன்று நேற்று இடம் பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரணபவன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன் போது அவர் தெரிவித்த விடயங்கள் வருமாறு:

ஏனைய இடங்களில் காணப்படாத ஒற்றுமையும் பரஸ்பர புரிந்துணர்வும் சாவகச்சேரி நகரசபையில் காணப்படுகின்றன.

நகர சபையும், வர்த்தகர் சங்கமும் ஒன்று சேர்ந்து செயற்படுகின்றன. போட்டியின்றி பரஸ்பர புரிந்துணர்வுடன் திட்டமிட்டு செயற்படுகின்றனர். எனவே வட மாகாணத்தில் யாழ்ப்பாணத்துக்கு அடுத்த சிறந்த நகரமாகக் கூடிய நிலையைச் சாவகச்சேரி விரைவில் அடையும் என்பதில் சந்தேகம் இல்லை. இங்கு செயற்படுத்தப்படும் அபிவிருத்திப் பணிகள் சிறப்பானவை. அவை இன்னும் தூரநோக்குடன் செயற்படுத்தப்பட வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் என்னாலான சகல உதவிகளையும் வழங்குவேன் - என்று கூறினார்.

இந்தக் கலந்துரையாடலில் கேணல் ரொஷான், நகர அபிவிருத்திச் சபைப் பணிப்பாளர் இராசநாயகம், பிரதேச செயலாளர் திருமதி சாந்தசீலன், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் வி.சிறீபிரகாஷ் தலைமையிலான வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சாவகச்சேரி நகரில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக இதன் போது ஆராயப்பட்டன.

சாவகச்சேரி நகரசபை, சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் என்பன நகர அபிவிருத்தி அதிகார பிராந்தியப் பணிப்பாளருடன் இணைந்து கூட்டாகத் தயாரிக்கப்பட்ட நவீன கடைத் தொகுதி கட்டடத்தின் மாதிரி வரைபடமும் அங்கு பரிசீலிக்கப்பட்டது.

சகல வசதிகளுடன் இரண்டு மாடிக் கட்டடமாக அமைக்கப்படவுள்ள இக் கடைத் தொகுதியில் வர்த்தகர்களுக்கும் நுகர்வோர்களுக்கும் தேவையான சகல வசதிகளும் உள்ளடக்கப்படவுள்ளன.

கலந்துரையாடலின் பின் நாடாளுமன்ற உறுப்பினர், நகரசபைத் தலைவர், யாழ். நகர் சங்கப் பிரதிநிதிகள், நகரசபை அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள், நகரசபை அதிகாரிகள் ஆகியோர் நவீன கடைத் தொகுதி அமைக்கப்படவுள்ள இடத்தை நேரடியாகச் சென்று பார்வையிட்டனர். (ங-02)

# எதிர்க்கட்சித் தலைவர் ரணில் இன்று யாழ்ப்பாணம் வருகிறார்

கொழும்பு, மார்ச் 16

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தருகிறார். இன்று மாலை யாழ்ப்பாணம் வரும் அவர், நாளை நடைபெறும் பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொள்வதுடன் மக்கள் சந்திப்புக்களிலும் ஈடுபடவுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, தேசிய அமைப்பாளர் தயா கமகே, நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜயலத் ஜயவர்த்தன, டி.எம்.சுவாமிநாதன் உட்பட பலரும் வருகை தரவுள்ளனர்.

இன்று காலை கிளிநொச்சிக்குப் பயணம் செய்யும் ரணில் விக்கிரமசிங்க அங்கிருந்து மாலை யாழ்ப்பாணம் வருவார். நாளை சனிக்கிழமை காலை முதல் மாலை வரை பல்வேறு இடங்களிலும் மக்கள் சந்திப்புக்களில் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழுவினர் கலந்து கொள்வார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதற்கான ஏற்பாட்டினை கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் ஏற்பாடு செய்துள்ளார்.

நாளை காலை சாவகச்சேரி, கச்சாய், நெல்லியடி, பருத்தித்துறை ஆகிய பகுதிகளில் மக்களைச் சந்திக்கவுள்ள ரணில் விக்கிரமசிங்க பிற்பகல் வல்வெட்டித்துறைக்கும் பயணம் செய்வார். செல்வச் சந்நிதி ஆலயத்துக்கு நண்பகல் செல்லும் ரணில் தலைமையிலான குழுவினர் விசேட பூசை வழிபாடுகளிலும் ஈடுபடுவர். நீர்வேலி மாதர் சங்கம் ஏற்பாடு செய்துள்ள கூட்டத்திலும் இவர் பங்கேற்பார். சுன்னாகம், வலிகாமம் வடக்கு மற்றும் மாதகல், மூளாய், அராலி ஆகிய பகுதிகளில் இடம்பெறும் கூட்டங்களிலும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பங்கேற்கவுள்ளார்.

யாழ்ப்பாணப் பயணத்தை முடித்துக்கொண்டு ரணில் விக்கிரமசிங்க நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவு மாவட்டத்துக்குப் பயணம் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது அங்கும் மக்கள் சந்திப்புக்களில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் தலைமையிலான குழுவினர் ஈடுபடவுள்ளனர். (த-சி)

# இரண்டாம் வருட பாடத் தெரிவில் பிரச்சினை கலைப்பீட மாணவர்கள் வகுப்புப் புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 16

தரப் புள்ளிச் சராசரியில் (ஜி.பி.ஏ) ஐப் பற்றித் தெரிந்தும் பல மாணவர்களுக்கு சிறப்புக் க்லைமாணிப் பாடத் தெரிவுக்கு அனுமதி வழங்கப்படவில்லை ஏன்று கூறி அதனை நிவர்த்தி செய்யும் படிகோரி நேற்றுமுன்தினம் தொடக்கம் கலைப்பீட மாணவர்கள் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர். இதன் பின்னர் கலைப்பீடாதிபதிக்கும், மாணவர் பிரதிநிதிகளுக்கும் இடையே சந்திப்பு ஒன்று இடம் பெற்றது. இதன்போது யாழ். பல்கலைக்கழக இரண்டாம் வருட சிறப்புக் கலைப் பாடத் தெரிவில் ஏற்பட்ட பிரச்சினை பற்றி மாணவப் பிரதிநிதிகளுக்கு கலைப்பீடாதிபதி தெளிவுபடுத்தியுள்ளார்.

''பீடாதிபதி தெரிவித்துள்ள விளக்கங்கள் தொடர்பில் பரிசீலித்த பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பாக சக மாணவர்களுடன் கலந்துரையாடப்படும், அதன்பின்னர் பகிஷ்கரிப்பைத் தொடர்வதா இடை நிறுத்துவதா என்று தீர்மானிக்கப்படும். இன்று யாழ். பல்கலைக்கழக துணைவேந்தரையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளோம்'' என்று மாணவப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக கலைப்பீடாதிபதி என்.ஞானக்குமரன் தெரிவித்தவை வருமாறு-

சிறப்புக் கலைமாணித் தெரிவில் தரப்புள்ளிச் சராசரி (ஜி.பி.ஏ) அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், குறிப்பிட்ட 40 பேருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படவுள்ளதாகவும் அதனைத் தகுதியுள்ள ஏனையவர்களுக்கும் வழங்குமாறு மாணவர்கள் கோரியுள்ளனர்.

உண்மையில் தரப்புள்ளிச் சராசரி மாற்றி அமைக்கப்பட்டதே தவிர புள்ளியிடல் முறையில் மாற்றம் கொண்டுவரப்படவில்லை. கடந்த வருடம் தரப்புள்ளிச் சராசரி 2.7 ஆக இருந்தது. இந்த முறை அது 3 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. அதனால் 2.7 ஆக இருந்த போதும் அதற்கான புள்ளிகள் 60 இருந்தது. இந்த முறை 3 ஆக இருக்கிறபோதும் அதற்கான புள்ளிகளும் 60 ஆகவே உள்ளது. அதில் எந்த மாற்றமும் இல்லை. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சட்டங்களின்படி சகல பல்கலைக்கழகங்களிலும் இந்த மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளது. எனவே புள்ளியிடலில் மாற்றம் ஏற்பட்டதாகக் கூறுவது தவறு.

யாழ். பல்கலைக்கழகத்தில்உள்ளஆளணி வளம்உட்பட ஏனைய வளங்களினது அளவுக்கேற்பவே சிறப்புக் கலைமாணித் தெரிவுக்கான மாணவர்களின் எண்ணிக்கையைத் தீர்மானிக்கமுடியும்.

போதுமான வளங்கள் இல்லாத நிலையில் அதிக மாணவர்களைத் தெரிவு செய்ய முடியாது. அவ்வாறு தெரிவு செய்யப்படும்பட்சத்தில் சிறப்புக் கலைமாணிக் கற்கையின் போதும், விரிவுரையின்போதும் சிறந்த பயனை அடைய முடியாது. அதிக மாணவர்களை இதனுள் உள்வாங்கும் போது மாணவர்களின் தரம் பாதிக்கப்படலாம். அதனை ஏற்க முடியாது.

சில துறைகளுக்கு விரிவுரையாளர்கள் உள்ள போதும் அதற்கேற்ப மாணவர்கள் அத்துறைக்குத் தெரிவு செய்யப்படுவதில்லை. சில குறிப்பிட்ட துறைகளுக்கு மட்டும் அதிக மாணவர்கள் சிறப்புக் கலை மாணிக்கான அனுமதியைக் கேட்கிறார்கள்.

பொருளியல் பிரிவுக்கு அதிக மாணவர்களை உட்படுத்தி பயிற்றுவிக்க தாம் தயார் என்று அப்பிரிவினர் தெரிவித்ததையடுத்து அந்தத் துறைக்கு மேலதிக மாணவர்கள் இணைக்கப்படவுள்ளனர். இவை பற்றி மாணவர்களுக்கு தெரியப்படுத்தியுள்ளோம் -என்றார்.

(ங-4)

# சுன்னாகம் கூட்டுறவுச் சங்க பணியாளர் பணி பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 16

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் தமக்கு இதுவரை வழங்கப்படாத கடந்த மூன்று மாதச் சம்பளக் கொடுப்பனவை வழங்கக் கோரிப் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளனர் என எச்சரித்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் தெரிவித்ததாவது:-

கடந்த டிசெம்பர், ஜனவரி, பெப்ரவரி மாதங்களுக்கான மாதாந்தச் சம்பளக் கொடுப்பனவு இதுவரை சங்கத்தால் வழங்கப்படவில்லை.

இந்தக் கொடுப்பனவை வழங்குவதாக சங்க நிர்வாகம் மாதாந்தம் உறுதியளித்தும் அதை வழங்குவதற்கு நிதி வசதி இல்லாமையில் பெரும் சிரமப்பட்டு வருகின்றது.

நேற்று 15ஆம் திகதி இந்தக் கொடுப்பனவு வழங்கப்படுவதாக உறுதியழிக்கப்பட்டது. எனினும் நேற்று பிற்பகல் வரை கொடுப்பனவு கிடைக்கவில்லை.

மூன்று மாதங்களுக்கான சம்பளக் கொடுப்பனவு வழங்கப்படாதமையால் தாம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளோம்.

இது தொடர்பாக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் கவனத்துக்கும் கொண்டு வந்தோம் எனினும் உரிய நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

கொடுப்பனவு இதுவரை வழங்கப்படாததை அடுத்து நாம் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடத் தீர்மானித்துள்ளோம் - என்று பணியாளர்கள் குறிப்பிட்டனர்.

சங்கத்தின் நிதி நெருக்கடி நிலையே சம்பளம் வழங்கப்படாமைக்கான காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

(த-7)

# அமெ. எதிர்ப்புப் போராட்டம் கடும் அதிருப்தியில் ஒபாமா

வாஷிங்ரன், மார்ச் 16

இலங்கை அரசின் முழு ஆதரவில் இடம்பெற்று வரும் அமெரிக்க எதிர்ப்புப் போராட்டங்கள் தொடர்பாக ஒபாமா நிர்வாகம் கடும் கடுப்படைந்துள்ளதுடன், இதுகுறித்து தீவிர கரிசனை செலுத்தி வருகிறது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கையில் இடம்பெற்று வரும் அமெரிக்க எதிர்ப்புப் போராட்டங்களை அமெரிக்க வெளிவிவகார அமைச்சு தீவிரமாக எடுத்துக் கொண்டுள்ளது.

அரச தலைவர்களும், சக்தி வாய்ந்த அமைச்சர்களும் அமெரிக்க எதிர்ப்புப் போராட்டங்களுக்கு வெளிப்படையாகவே தலைமை தாங்குவது குறித்து அமெரிக்கா உன்னிப்பாக அவதானித்து வருகிறது.

அத்துடன், அமெரிக்கத் தயாரிப்பு பொருள்களைப் புறக்கணிக்குமாறு அமைச்சர் விமல் வீரவன்ஸ விடுத்துள்ள அழைப்புத் தொடர்பான செய்திகளுக்கு அமெரிக்க ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுத்துள்ளன.

அதேவேளை, ஜெனிவாவுக்கான அமெரிக்கத் தூதுவர் எலின் டோனஹே, ஏ.பி. செய்தி நிறுவனத்துக்கு அளித்துள்ள செவ்வியில், ஜெனிவாப் பிரேரணை இலங்கைக்கு எதிர்மறையாகவே பிரதிபலிக்கிறது எனவும், பற்களாலும் நகங்களாலும் அதை எதிர்த்துப் போரிடுகிறது எனவும் கூறியுள்ளார்.

ஏற்கனவே, மஹிந்த அரசு அமெரிக்க எதிர்ப்பு அணியில் உள்ள சீனா, ரஷ்யா, கியூபா, வெலிசுவேலா, லிபியா, ஈரான், சிரியா போன்ற நாடுகளுடன் கடந்த பல ஆண்டுகளாக கொண்டுள்ள உறவுகள் குறித்து அமெரிக்கா ஆழ்ந்த அதிருப்தி கொண்டிருந்தது என்றும் கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (த-சி)

# ஐ.நா. அதிகாரிகள் நாட்டுக்குள்

அரசுக்கு அறிவிக்காமல் இலங்கை வந்துள்ள ஐ.நாவுடன் சம்பந்தப்பட்ட முக்கிய அதிகாரிகள் நால்வரிடம் இரகசியப் பேச்சுகளை மேற்கொண்டுள்ள பிரதான எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இருவர் நாட்டுக்கு எதிரான முக்கிய சில தகவல்களை அவர்களிடம் வழங்கியுள்ளனர் எனத் தகவல் கிடைத்துள்ளது என்று அரசு தெரிவித்துள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலே பிரதியமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன இத்தகவலை வெளியிட்டார். (த-சி)

# நல்லூரில் இசைவிழா

யாழ்ப்பாணம், மார்ச் 16

நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் இசைவிழா இன்றுமுதல் தொடர்ந்து 3 தினங்கள் இளங்கலைஞர் மன்றக் கலாமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முதல் நாளான இன்று பிற்பகல் 3 மணிமுதல் நிகழ்வுகள் இடம்பெறும். இதில் மங்கள இசை, திருமுறைக் கச்சேரி, குழு இசை, தாள வாத்தியக் கச்சேரி, தகஞ்சிற் கச்சேரி, நடன நிகழ்ச்சி என்பன இடம்பெறும். அதனைத் தொடர்ந்து நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் நிகழ்வுகள் இடம் பெறும். இதில் சற்குரு ஸ்ரீ தியாகராஜா சுவாமிகளின் 165 ஆவது ஆராதனை விழா, பூஜை வழிபாடு, நாதாஞ்சலி, சற்குரு ஸ்ரீ தியாகராஜா சுவாமிகள் சுருதிகள் இசை அர்ச்சனை, பண்ணிசை அரங்கு, குழு இசை, வாகன இசை, இசையரங்கு, இசைக்கச்சேரி, நாட்டியாஞ்சலி என்பன காலை, மாலை நிகழ்வுகளாக இடம்பெறும். நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மங்கல இசை, குழு இசை, வாத்திய இசை, வயலின் இசைக்கச்சேரி, அரிச்சந்திரமயான காண்டம் எனும் இசை நாடகம் என்பன இடம்பெறும். (ம-14)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் மழுப்பல்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில், இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவந்துள்ள பிரேரணை குறித்து இப்போதைக்கு ஆழமாகச் சொல்ல இந்தியா விரும்பவில்லை. இது தொடர்பாக நாம் எடுக்கும் முடிவு இரு நாடுகளுக்கும்-இந்தியாவுக்கும் இலங்கைக்கும்-இடையில் கருத்து வேறுபாட்டை உண்டாக்குவதாகவும், பரஸ்பர நம்பிக்கையை சிதறடிப்பதாகவும் அமையக் கூடாது. இலங்கைத் தமிழர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் மத்திய அரசு இந்த விவகாரத்தில் செயற்படும்.

இவ்வாறு இந்திய நாடாளுமன்றத்தில் புதனன்று சப்புக்கொட்டினார் அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா.

அமெரிக்கா சமர்ப்பித்துள்ள பிரேரணை குறித்து நாம் நிதானமாகவே தீர்மானிக்க வேண்டும். இலங்கையுடன் எமக்குள்ள வரலாறு பூர்வமான உறவும் நட்பும் பாதிக்கப்படும் விதத்தில் எந்த முடிவையும் மேற்கொள்ளக் கூடாது. -

அது மட்டுமன்றி இலங்கையில் நடைபெற்றுவரும் அமைதிப் பேச்சுக்களும் பாதிக்கப்பட்டுப் பிரச்சினை மேலும் பெரிதாகி விடக் கூடாது. கசப்பு உணர்வு அதிகரிக்க வாய்ப்பளிக்கக் கூடாது - என்றும் அவர் கிரந்தம் வாசித்தார்.

அது மட்டுமன்றி, அமெரிக்காவின் தீர்மானம் குறித்த இந்தியாவின் நிலைப்பாடு என்னவென்று இனிமேல் தான் இறுதி முடிவு எடுக்கப்படும். அது நாடாளுமன்றத்துக்குத் தெரியப்படுத்தப்படும்-என்று தென்னிந்திய அரசியல் தலைவர்களின் தலைகள் மீது இரும்புக் கம்பியால் ஓங்கி அடித்தார். அத்தோடு புதுடில்லி நாடாளுமன்றத்தில் களேபரம் ஓய்ந்தது.

கடந்த அண்மைக் கால வரலாற்றில் - குறிப்பாக இந்திரா காந்தி அரசாங்கத்தின் காலம் தொடக்கம், ரஜீவ் காந்தி, வி.பி.சிங், சந்திரசேகர், நரசிம்மராவ், வாஜ்பாய், மன்மோகன் சிங் காலம் வரை, இந்திய அரசுகள் இலங்கைத் தமிழர் பிரச்சினையை தமது நாட்டின் பிராந்திய, தேசிய நலன்களுக்கான காய் நகர்த்தல்களுக்கே பயன்படுத்தி வந்தன. ரஜீவ் - ஜே.ஆர் ஒப்பந்தமும் அந்த வகையினதே என்பதனைச் சொல்லித் தெரியவேண்டியதில்லை.

ஆகையால், தென்னிந்தியா ஒருசேரக்குரல் கொடுத்தாலும் எந்த வகையான, கனதியான, நெருக்குதல் கொடுத்தாலும் மன்மோகன் (சோனியா) அரசு, இலங்கைக் குரிய தனது மிக நெருங்கிய அரவணைப்பைக் கழற்றவோ தளர்த்தவோ முன்வராது என்பது எல்லோராலும் எதிர்பார்க்கப்பட்ட ஒன்றே.

இலங்கைத் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளுக்கான போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருவதில், இலங்கை அரசுக்கு தன்னுடன் சேர்ந்து தோள் கொடுத்த அமெரிக்காவின் முகத்துக்காகவேனும் மனித உரிமைகள் பேரவைக்கு அடுத்த வாரத்தில் அது சமர்ப்பிக்கும் இலங்கைக்கு எதிரான பிரேரணையை இந்தியா ஆதரிக்க மாட்டாது என்பது அநேகமாக நிச்சயம். அந்தளவுக்குச் சீனா பக்கம் சாயும் ஒரு வகை மயக்க மாத்திரை இலங்கையிடம் உண்டு என்ற அச்சம், இந்திய அரச உயர் மட்டங்களில் உண்டு. அதற்கான சமன்பாடு ஏற்கனவே நிலைநிறுத்தப்பட்டு விட்டது என்றால் அது தப்பன்று.

மேலும், இறுதிப் போரின்போது இலங்கை அரசின் வெற்றிக்கு இந்தியாவும் பெரும் கனத்துடன், உதவியமை குறித்த தற்காலிக இரகசியம் இப்போதுசர்வதேசப் பரகசியமாகிவிட்டது. அதனால் இந்தியத் தமிழ் மக்கள் மத்தியில் அது ஆறாத, ஆற்ற முடியாத ரணமாக ஆழப் பதிந்துள்ளது. அதனை ஆற்ற வேண்டும் என்பதில் புதுடில்லி ஆட்சியாளர்களுக்கு எள்ளளவுகரிசனைதானும் இல்லை என்பதனை அமைச்சர் கிருஷ்ணாவின் நாடாளுமன்ற உரை அம்பலப்படுத்துகிறது.

தர்மபுத்திரன் சகோதரர்களுக்கும் துரியோதனன் பக்கத்தினருக்கும் இடையில் நடைபெற்ற போரின்போது தர்மத்தின் பக்கம் நின்ற கிருஷ்ணனை விட இப்போதுள்ள இந்தியாவின் காங்கிரஸ் ஆட்சியின் வெளி விவகார அமைச்சர் கிருஷ்ணா (அதாவது புதுடில்லி அரசு) முற்றிலும் மாறுபட்டவர், வேறுபட்டவர்; பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவாது பாவப்பட்டவர்களுக்கு உதவுபவராகவே விளங்குவார் என்பதில் சந்தேகமுற எதுவும் இல்லை.

'பாவத்'தின் பக்கம் நிற்கும் இந்தியாவின் பிராந்திய நலன் நாடிய நிலைப்பாடு ஒருபுறமிருக்க -

இறுதிப் போர் வேளையில், இந்தியாவுடன் சேர்ந்து இயங்கி, அதனை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு இலங்கைக்குக் கைகொடுத்த, பேருதவி புரிந்த அமெரிக்காவின் பிரபல ராஜதந்திரி, தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான உதவிச் செயலாளர் ரொபேட் ஓ பிளேக் -

இலங்கை அரசு, அதன் மீதான போர்க் குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்காவிடில் இலங்கையில் மீண்டும் மோதல்கள் உருவாகும் ஆபத்து உண்டு என்று எச்சரித்துக் கருத்து வெளியிட்டுள்ளார்.

✸ பொறுப்புக் கூறல் மற்றும் நல்லிணக்கம் என்பன இலங்கையின் நலன்களுக்கு அவசியமானவை. அவற்றின் மூலம் மட்டுமே, அந்நாட்டில் உண்மையான அமைதியையும் பாதுகாப்பையும் அடைய முடியும். இல்லையேல் சொந்தச் சமூகத்தினரின் கோபத்தினால், அதிருப்தியினால் புதிய வன்முறைகள் வெடிக்கலாம், அதிகரிக்கலாம். உலகில் நிகழ்ந்த பல உள்நாட்டு மோதல்கள் இந்த அனுபவத்தையே தந்துள்ளன.

✸ நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறுதலுக்கு பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கத் தவறுமிடத்து, கிளர்ச்சிகள் மீளத் தோற்றம் பெறுவதே அனுபவமாகவுள்ளது. இலங்கையில் இதே போன்ற நிலைமை தோன்றுவதை நாம் பார்க்க நேரக்கூடும்.

✸ வடக்கிலுள்ள தமிழ் மக்கள் தாம் தொடர்ந்தும் இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ளதாகவே உணர்கிறார்கள்.

✸ அங்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தி அதிகாரங்களைப் பகிர்ந்து, தமிழ் மக்கள் தமது பகுதியில் மேலும் கட்டுப்பாட்டைப் பெற்றுக் கொள்வதற்கு வழி செய்ய வேண்டும் - என்றும் அவர் சரியாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிளேக் - அமெரிக்கா - சொல்வது தவறானது. மனித உரிமைகள் பேரவையில் அந்த நாடு கொண்டுவந்துள்ள பிரேரணைக்கு எதிராக இலங்கை அரசு தீவிரமாக செயற்படுவதால் தன்னைத் தோற்கடிக்கும் நச்சு நோக்குடன் அது செயற்படுவதாக கொழும்பு பிரசாரம் செய்யும் என்று எதிர்பார்க்கலாம்.

எனவே இலங்கை அரசு பிளேக்கின் கருத்தைக் கவனத்தில் கொள்ளுமா என்பது சந்தேகமே.

இலங்கை மீதான தனது சண்டித் தனத்தைக் கட்டவிழ்த்து விடுவதற்கு முத்தாய்ப்பாகவே அமெரிக்கா இவ்வாறு கூறுகிறது. அதனைத் தடுப்பதற்கு உலக நாடுகள் உதவ வேண்டும் என்று தட்டைப் பக்கம் மாற்றிப் போட்டு, தனது இப்போதைய வழித் தடத்திலேயே செயற்படும் என்று கொள்ளலாம்; என எதிர்பார்க்கலாம்.

# நீதியைப் பகிரும் மனோநிலை இலங்கைக்கு அவசியம் தேவை

## ஹவார்ட் பல்கலை மனோதத்துவ நிபுணர் தெரிவிப்பு

''நீண்டகால சண்டையிலிருந்து மீட்சிபெற்றுவரும் ஒரு நாட்டின் அரசுக்கு நீதியைப் பகிர்ந்துகொள்ளும் மனோநிலையே தேவை. வன்முறைக்கான தலைவர்களை விசாரணைக்கு உட்படுத்துதல், கடந்தகால வன்முறைகளை ஓரங்கட்டுதல், பாரிய மன்னிப்பு வழங்கல் திட்டத்தை அமுல்படுத்தல் மூலம் ஓர் இணக்கப்பாட்டுக்கு வழிசமைக்கலாம்''

கொழும்பு, மார்ச் 16

இலங்கையில் நடைபெற்ற இரத்தத்தை உறைய வைக்கும் சிவில் யுத்தத்தின்போது இரு தரப்புகளாலும் இழைக்கப்பட்ட அட்டூழியங்கள் அனைத்தும் விசாரணைக்குட்படுத்தப்படும் என எவராலும் எதிர்பார்க்க முடியாது. இவற்றில் ஒரு லட்சம் பேர் வரை மடிந்திருக்கின்றனர் என சிலர் கணிப்பீடு செய்துள்ளனர்.

- இவ்வாறு ஹவார்ட் பல்கலைக் கழக மனோ தத்துவ நிபுணர் ஸ்டீபன் பிங்கர், தமது சமீபத்திய ஆய்வு நூலில் குறிப்பிட்டுள்ளார்.

காலத்தின் கட்டாயத்தால் வீழ்ச்சியடைந்த வன்முறைகள் குறித்து அவர் இதில் விவரித்துள்ளார். 'எமது இயற்கையின் சிறந்த தேவதைகள்' ('The Better Angels of Nature') என இந்நூலுக்குத் தலைப்பிட்டுள்ளனர்.

இலங்கை குறித்து அவர் குறிப்பிடுகையில், ''சிவில் யுத்த காலத்தில் இருதரப்புகளாலும் இழைக்கப்பட்ட குற்றங்கள் அனைத்தையும் விசாரணைக்கு உட்படுத்த முடியும் என்பதற்கிணங்க இது சாத்தியப்படாததொன்று. அரசு படையினரும், பிரிவினைவாத தமிழ்ப் புலிகளும் இழைத்துள்ள போர்க்குற்றங்கள் மீதான விசாரணைகளும் பல தசாப்தங்களுக்கு நீடிக்கும்'' எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

''நீண்டகால சண்டையிலிருந்து மீட்சிபெற்றுவரும் ஒரு நாட்டின் அரசுக்கு நீதியைப் பகிர்ந்துகொள்ளும் மனோநிலையே தேவை. இது ஓர் அடையாள அறிகுறியாகவும் இருக்கலாம். வன்முறைக்கான தலைவர்களை விசாரணைக்கு உட்படுத்துதல், கடந்தகால வன்முறைகளை ஓரங்கட்டுதல், பாரிய மன்னிப்பு வழங்கல் திட்டத்தை அமுல்படுத்தல் ஆகியவற்றால் ஓர் இணக்கப்பாட்டுக்கு வழிசமைக்கலாம்'' என்றும் பிங்கர் விளக்கமளித்துள்ளார்.

''அதேவேளை, தென்னாபிரிக்காவும் இந்த அணுகுமுறையில் வெற்றிகண்டுள்ளது. உண்மையைச் சொல்வதற்கான வாய்ப்புகளை அரசால் அளிக்கமுடியும். இவற்றால் வன்முறைகளைக் கட்டவிழ்த்தோரும் பகிரங்கமாகவே தமது தவறுகளை ஒத்துக்கொள்ளவேண்டிய சூழ்நிலை உருவாகும். முறையான நீதி அல்லது நீதியே இல்லாதவாறு அரைகுறை நீதியோடுகூடிய காரியங்கள் தவிர்க்கப்படவேண்டும். இதற்கு சமரச, சமத்துவக் காரியங்கள் அனுகூலமாக அமையும்'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த அணுகுமுறை, நீதியை மீள நிலைநாட்டுவதற்கான வழியாகும். பழிவாங்கல் நடவடிக்கைகளுக்கான நிர்ப்பந்தங்களை வெகுவாகக் குறைத்துவிடும். வன்முறைகள் மீளத் தலையெடுப்பதிலிருந்தும் பாதுகாத்துக் கொள்ளலாம். சிவில் யுத்தங்களுக்குப் பின்னர் நீதிக்கான ஆவலை அடக்கக்கூடாது. நீதிக்கான ஆர்வம் நசுக்கப்படுவதால், நீதி நிறுவனங்களான பொலிஸினதும், சிறைச்சாலையினதும் முறைமையிலும் பாதிப்பு ஏற்படும். இவற்றிலுள்ளவர்களும் தீமைகளுக்கு சூத்திரதாரிகளாகி விடுவர் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

1957ஆம் ஆண்டு முதல் இடம்பெற்றுவந்துள்ள 11 சிவில் யுத்தங்களை ஸ்டிபன் பிங்கர் தமது ஆய்வுக்கு உட்படுத்தி வந்துள்ளார். இதில் அவர் சிவில் யுத்தங்களிலிருந்து விடுபட்ட நாடுகளில் நல்லிணக்கப்பாட்டுக்கான நடவடிக்கைகளில் ஈடுபடாத நாடுகளில் அவ்வப்போது வன்முறைகள் தலைதூக்கி வருகின்றன எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

மீட்சிபெற்ற நாடுகளில் மூன்றில் இரண்டு சதவீத நாடுகள் நல்லிணக்கப்பாடுகளில் அதீத அக்கறை செலுத்துகின்றன. அவற்றில் மேலும் சண்டை நீடிக்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். (த-சி)

# செயற்றிறன் இல்லாத அரச ஊழியரை உடன் வீட்டுக்கு அனுப்ப வேண்டும்

## அமைச்சர் சரத் அமுனுகம ஆவேசம்

இலங்கையில் அரச பணிகள் அனைத்தும் செயற்றிறன் அற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. எனவே இதற்குப் பொறுப்பான அனைத்து அரச ஊழியர்களும் உடனடியாகப் பணி நீக்கம் செய்யப்பட வேண்டும் - இவ்வாறு ஆவேசத்துடன் தெரிவித்துள்ளார் அமைச்சர் சரத் அமுனுகம.

வேலை வாய்ப்பற்ற பட்டதாரிகளுக்குத் தொழில் வாய்ப்புக்களை வழங்கும் செயற்திட்டம் ஒன்றின் கீழ் அமைச்சரின் தலைமையில் 85 பட்டதாரிகளுக்கு நியமனக்கடிதங்களை வழங்கி, உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன் போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரச சேவைகள் பலவும் தற்போது மிகவும் கீழ் மட்ட நிலைக்கு இழிந்து, சரிந்து போயுள்ளன. ஒவ்வொரு துறைசார்ந்த கருமங்கள் தொடர்பாகவும், தேவையற்ற விதத்தில் பெருந்தொகையான உத்தியோகத்தர் பட்டாளம் ஒன்று நியமனம் செய்யப்படுகிறது. ஒரு சிறிய கருமத்தை நிறைவேற்றிக் கொள்வதற்குக் கூட ஏராளமான உத்தியோகத்தர்களிடம் சென்று அனுமதி பெற வேண்டியுள்ள நிலைமை உள்ளது. ஆனால் எவரும் எதற்கு எடுத்தாலும் "தெரியாது", "இல்லை" என்று மட்டுமே உச்சரிக்கும் அதிகாரிகளாக இருக்கின்றனர். இதனால் அரச பணிகள் சீரழிவு நிலையை அடைந்துள்ளன.

இந்த நாட்டில் உள்ள அரச சேவையாளர்களில் உயர்வான சிந்தனை ஏற்படாத வரை எமது நாட்டை முன்னேற்றுவது என்பது பகற் கனவாகவே இருக்கும்.

பெரும்பாலும் அரச சேவையாளர்கள் அலட்சியமாகச் செயற்படுவதன் காரணமாகவே இன்று இந்த நாட்டின் நிர்வாகம், இயலாமையால் முடங்கிப் போயுள்ளது. நாட்டைப் பீடித்துள்ள பயங்கரமான புற்று நோய்க் கட்டியாக அரச பணியாளர்களின் அசமந்தத்தைக் குறிப்பிடலாம்.

சிறப்பான அரச சேவை அமையாதுவிடில் வெகுவிரைவில் இந்த நாடும் பாரதூரமான பொருளாதாரச் சரிவை எதிர்கொள்ள வேண்டி நேரும்.

எமது நாட்டில் முதலீடுகளை மேற்கொள்ள ஆர்வம் காட்டும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு, ஒத்துழைப்பு வழங்காது முட்டுக்கட்டைகளைப் போடுவதுடன், நாட்டின் அபிவிருத்திக்கு ஒத்துழைக்காத அனைத்து அரச ஊழியர்களும் நீக்கப்பட்டு, உயரிய சிந்தனைகளுடன் கடமையாற்றக் கூடிய அர்ப்பணிப்பான ஊழியர்களின் பங்களிப்பே இன்று இந்த நாட்டுக்குத் தேவைப்படுகின்றது - என்றார் அமைச்சர் சரத் அமுனுகம.

(ஙு-22)

# இலங்கையில் வடக்கு மாகாணம்; தங்கி வாழ்வோர் கூடிய பிரதேசம்

## வாழ்வியல் புள்ளி விவரக் குறிப்பில் கணிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 16

இலங்கையிலே தங்கி வாழ்வோர் கூடிய பிரதேசமாக வடமாகாணம் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கையின் தங்கிவாழ்வோர் வீதம் 48 ஆகக் காணப்படுகின்றபோதும், வடமாகாணத்தில் கணிப்பீடு செய்யும் போது தங்கி வாழ்வோர் வீதம் 61:6 ஆகக் காணப்படுகின்றது என்று அரச புள்ளி விவரவியல் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள வடமாகாண வாழ்வியல் புள்ளி விவரக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய சராசரி தங்கி வாழ்வோர் வீதம் 61.6 ஆகக் காணப்படுகின்றது.

யாழ். மாவட்டத்தில் தங்கி வாழ்வோர் வீதம் 61.5 ஆகவும், மன்னார் மாவட்டத்தில் தங்கி வாழ்வோர்வீதம் 59.1 ஆகவும், வவுனியா மாவட்டத்தில் தங்கி வாழ்வோர் வீதம் 56 ஆகவும், முல்லைத்தீவு மாவட்டத்தில் தங்கி வாழ்வோர் வீதம் 64.7 ஆகவும், கிளிநொச்சியில் தங்கி வாழ்வோர் வீதம் 71 ஆகவும் காணப்படுகின்றது.

தங்கி வாழ்வோர் வீதம் கணிக்கப்படும் பொழுது, சிறுவர்கள் மற்றும் முதியோர்களும் இதில் தங்கி வாழ்பவர்களாகவே கணிக்கப்படுவர்.

இதனை விட வட மாகாணத்தைப் பொறுத்தவரையில் அங்கவீனர்கள், வேலையற்று இருப்போர் அதிக எண்ணிக்கையில் இருப்பதால் அவர்களும் தங்கி வாழ்வோராகவே கணக்கெடுக்கப்படுவர்.

வடமாகாணத்தின் உழைக்கும் வர்க்கத்தினர் வெளிநாடு சென்றுள்ளமையால் வடமாகாணத்தின் தங்கி வாழ்வோர் தொகை அதிகரிப்பதற்கும் ஒரு காரணமாகியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம-5)

# சிவபுரத்து மக்களை வெளியேற்ற நடவடிக்கை

கிளிநொச்சி,மார்ச்16

இந்திய வீட்டுத்திட்டம் மூலம் பயனாளிகளாகத் தெரிவு செய்யப்பட்ட சிவபுரம் கிராமங்களைச் சேர்ந்த குடும்பங்களை, சொந்தக் காணிகள் இல்லை எனக் காரணம் கட்டி அங்கிருந்து வெளியேற்ற முயற்சிகள் இடம்பெற்று வருவதாக பாதிப்படைந்த சிவபுரம் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இந்தக் கிராமத்தில் போரினால் இடம்பெயர்ந்த குடும்பங்கள் வன்செயல்களால் பாதிப்படைந்து நலிவுற்ற குடும்பங்கள் என காணிகள் வழங்கி குடியமர்த்தப்பட்டன

இந்தக் காணிகள் தனியாரின் காணிகள் என்பதால் தற்போது நிரந்தர வீடுகளையோ தற்காலிக வீடுகளையோ அமைப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்திய வீட்டுத்திட்டப் பயனாளிகள் பெயர்ப்பட்டியலில் குறித்த கிராமத்தின் குடும்பங்களில் பெயர் விவரங் கள் வந்துள்ள போதும் அதனைப்பெற முடியாது உள்ளனர்.

இந்தக் காணிகளில் குடியமர்ந்தவர்கள் அன்றாட வாழ்வை நடத்த குடியமர்ந்த காணிகளில் குழாய் கிணறுகளையும், பயன்தரு மரங்களையும் நட்டு, தற்காலிகமாகக் கொட்டில்களை அமைத்து குடியமர்ந்துள்ளனர்.

இந்த நிலையில் அரச சார்பற்ற நிறுவனங்களும் இந்தக் கிராமத்துக்கு உதவித் திட்டங்களை வழங்க முன் வந்துள்ளன.

எனினும் நிரந்தர காணிகள் இல்லை எனக் காரணம் காட்டி அங்கிருந்து அவர் களை வெளியேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பாதிப்படைந்த மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

(எ-14,426)

## பராமரிப்பில்லாத காணிகளால் மக்களுக்கு இடையூறுகள்

முல்லைத்தீவு,மார்ச்16

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள அநேக காணிகள் பராமரிப்பின்றி இருப்பதால் குடியமர்ந்த மக்கள் இடையூறுகளை எதிர்கொள்கின்றனர்.

இங்குள்ள மக்கள் குடியமராத வீடுகள் அழிந்த நிலையில் உள்ளன. காணிகள், மரங்கள் வளர்ந்து காடுகள் போன்று காணப்படுகின்றன.

இதனால் கட்டாக்காலிகளும், காட்டு மிருகங்களும் சுதந்திரமாக உலாவுவ துடன் மக்களின் பயிர்களுக்கும், குடிமனைகளுக்கும் அழிவுகளையும் ஏற்படுத்துகின்றன.

மேலும் நுளம்புகளும் பெருகுவதற்கான வாய்ப்பும் இங்கு காணப்படுகின்றது. பாம்பு போன்ற விஷ ஜந்துக்களும் பெருகிக் காணப்படுகின்றன. இதனால் மக்கள் அச்சத்துடனேயே பொழுதைக் கழிக்கின்றனர்.

கோழிகளைக்கூட வளர்க்க முடியாத நிலையுள்ளதாக இங்கு வசிக்கும் மக்கள் தெரிவிக்கின்றனர். (க-500)

## பாடசாலைகள் அபிவிருத்தி


அக்கராயன், மார்ச் 16

கிளிநொச்சி கல்வி வலயத்தில் 1000 பாடசாலைத் திட்டத்தின் கீழ் அக்கராயன் மகா வித்தியாலயம், உருத்திரபுரம் மகா வித்தியாலயம் என்பன அபிவிருத்தி காணவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உருத்திரபுரம் மகா வித்தியாலயத்தில் 40 மில்லியன் ரூபா செலவில் வேலைகள் இடம்பெறவுள்ளன. இதே போன்று அக்கராயன் மகா வித்தியாலயத்தின் பௌதிக வளங்கள் அதிகரிக்கப்படவுள்ளன.

இதேவேளை அக்கராயன் பகுதியில் குடி தண்ணீர் விநியோகத்திற்கான ஆய்வு கள் விரைவில் இடம் பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

(க-18)



துணுக்காய் விநாயகபுரம் அ.த.க.பாடசாலைக்கு கிருபா லேணர்ஸ் நிறுவன அதிபர் கிருபாகரன் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான கழுத்துப் பட்டிகளை வழங்குகின்றார். (415)

## மல்லாவி வைத்தியசாலையில் நோயாளர் திடீர் அதிகரிப்பு

துணுக்காய், மார்ச் 16

மல்லாவி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளர்களின் எண்ணிக்கையில் திடீர் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

தற்போது நிலவும் கடும் வரட்சி காரணமாக மக்கள் பல்வேறு நோய்களுக்கும் ஆளாகியுள்ளமையே இதற்கு முக்கிய காரணமாகும்.

சிறுவர்கள் நுரையீரல் தொடர்பான நோய்களுக்கு ஆளாகி வருகின்றனர். மேலும் ஒரு வகைக் காய்ச்சல் மற்றும் சளி தொடர்பான நோய்களும் மக்களைப் பீடித்துள்ளன.

இதனால் இங்குள்ள நோயாளர் விடுதியில் இடமில்லாததால் நோயாளர்கள் தரையில் படுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை இந்தப் பகுதியில் மக்கள் மீள் குடியமர்ந்து 3 ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில் மல்லாவி வைத்தியசாலைக்குத் தேவையான கட்டட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

அத்துடன் சத்திர சிகிச்சைக்கான ஆய்வு கூட வசதிகள் என்பனவும் ஏற்படுத்தப்படவில்லை. மேலும் இவற்றுக்கான ஆளணி இல்லாமை பெரிய குறையாக உள்ளது.

நீரிழிவு நோயாளர்களின் இரத்தத்தை ஆய்வு செய்வதற்குரிய ஆளணியினரும் இங்கில்லை. இதனால் நீரிழிவு நோயாளர்கள் வவுனியா, கிளிநொச்சி ஆகிய இடங்களை நாட வேண்டியுள்ளது.

(க-415)

## வேறுபட்ட கட்டணங்கள்

முல்லைத்தீவு, மார்ச்16

முல்லைத்தீவில் தனியார் பேருந்துக் கட்டணங்களில் வேறுபாடுகள் நிலவுவதாக பயணிகள் தெரிவிக்கின்றனர்.

புதிய பேருந்துக் கட்டணங்கள் தொடர்பான அறிவுறுத்தல்கள் பஸ்களில் ஒட்டப்பட்டால் இவ்வாறான சிரமங்கள் ஏற்படாதெனவும் அவர்கள் கூறுகின்றனர்.

எனவே தனியார் பஸ் சங்கத்தினர் இது தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-500)

## புறக்கணிக்கப்படுவதாக ஒட்டுசுட்டானில் கவலை

முல்லைத்தீவு,மார்ச்16

ஒட்டுசுட்டான் பிரதேச மக்கள் பல்வேறு வகையிலும் தாம் புறக்கணிக்கப்படுவதாகக் கவலை வெளியிட்டுள்ளனர்.

குறிப்பாக மின்சார வசதி இதுவரை தமக்கு ஏற்படுத்தாமை தொடர்பாக அவர்கள் அதிகளவில் விசனம் தெரிவிக்கின்றனர்.

தமக்கு விரைவில் மின்சாரம் வழங்கப்படுமென பல தரப்பினராலும், உறுதிமொழி வழங்கப்பட்ட போதிலும் அது காற்றில் பறந்து விட்டதாக இவர்கள் தெரிவிக்கின்றனர்.

மின்சாரம் இல்லாததால் சிறுகைத்தொழில் புரிவோர், மாணவர்கள், பாடசாலைகள், அலுவலகங்கள் எனப் பல தரப்பினரும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். அத்துடன் இந்தப் பகுதி மக்களுக்கு நிரந்தர வீட்டுத் திட்டம், சமுர்த்தி முத்திரை வழங்குதல் ஆகியவற்றிலும் பாரபட்சம் காட்டப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-500)

## உலக அபிவிருத்தி வங்கியின் அதிகாரிகள் வவுனியா வருகை

வவுனியா, மார்ச் 16

வவுனியாவுக்கு வருகை தந்த உலக அபிவிருத்தி வங்கியின் உயர் அதிகாரிகள் கொண்ட குழு இங்கு நடைபெறும் வேலைத் திட்டங்கள் தொடர் பாக ஆராய்ந்துள்ளது.

நேற்று முன்தினம் வவுனியாவுக்கு வருகை தந்த இந்தக் குழுவினர் வவுனியா பிரதேச சபைத் தலைவர் க.சிவலிங்கத்தைச் சந்தித்துக் கலந்துரையாடினர். இதில் பிரதேச சபைச் செயலாளர் ஆர்.அறிவரசன் மற்றும் உறுப்பினர்கள், தொழில் நுட்ப அலுவலர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது பிரதேச சபையால் மேற்கொள்ளப்படும் நெல்சிப் வேலைத் திட்டம் தொடர்பாக ஆராய்ந்ததுடன், அந்த வேலைத் திட்டங்களைத் தொடர்ந்து முன்னெடுக்க தாம் உதவி செய்வதாகவும் தெரிவித்தனர்.

இதன் பின்னர் இந்தக் குழுவினர் நெல்சிப் வேலைத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் வீதிப் புனரமைப்புப் பணிகளையும் நேரில் சென்று பார்வையிட்டனர்.

(எ-400)

## இப்படியும் நடந்தது

முல்லைத்தீவு,மார்ச் 16

ஜெனிவாத் தீர்மானத்துக்கு எதிராகக் குரல் கொடுக்க அழைத்துச் செல்லப்பட்ட முன்னாள் முக்கியஸ்தர் ஒருவர் 'துண்டைக் காணோம் துணியைக்காணோமென' மிரட்சியுடன் அவசரமாக நாடு திரும்பியுள்ளார்.

இறுதிப் போரின் போது முக்கியமான கொலைக் களமாக விளங்கிய இடத்தைச் சேர்ந்த இந்த நாடாண்டவர், ஜெனிவாத் தீர்மானத்துக்கு எதிராகக் குரல் கொடுப்பதற்காக அரசின் ஏற்பாட்டில் ஜெனிவாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

அரச செலவில் மகிழ்ச்சியாகப் பொழுதைக் கழிப்பதற்கு எண்ணியவருக்கு அங்கு அதிர்ச்சியே காத்திருந்தது.

இவர் தங்கியிருந்த ஹோட்டலில் திடீரெனத் திரண்ட நூற்றுக்கணக்கான புலம்பெயர் உறவுகள் கேள்விக் கணைகளால் இவரைத் துளைத்தெடுத்ததோடு, வாய் திறக்காமல் உடனடியாக ஊர் திரும்புமாறு அன்புக் கட்டளையும் இட்டனர்.

மிரண்டுபோன இவர், அடுத்தநாளே எவரிடமும் சொல்லிக்கொள்ளாமல் நாடு திரும்பியுள்ளார்.

தற்போது இவரது ஜெனிவாப் பயணம் தொடர்பாகக் கேட்பவர்களிடம் நான் புலம்பெயர் உறவுகளைச் சந்தித்துக் கலந்துரையாடினேன். மிகவும் பிரயோசனமாக இருந்தது, எனக் கூறுவதாகவும் தெரியவருகின்றது. (க)

## நிதி சேகரிப்பு

வவுனியா, மார்ச் 16

மன்னார் மறைமாவட்டம் வறிய மாணவர்களின் , பெற்றோரை இழந்த சிறுவர்களின் கல்வி நடவடிக்கையை நோக்கமாகக் கொண்டு நிதி சேகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது.

''தவக்காலக் காணிக்கை ஒப்புரவின் ஒன்றிப்பு'' என்ற மகுட வாக்கியத்தின் அடிப்படையில் இந்த நிதி சேகரிப்பு இடம்பெறுகின்றது. உண்டியல்கள் மூலம் மாணவர்களிடம் நிதி சேகரிக்கும் நடவடிக்கை தற்போது வவுனியாவில் இடம் பெற்று வருகின்றது. (எ-400)

## வீண்பொழுதைக் கழிக்கும் பாடசாலை செல்லாத பிள்ளைகள்

முல்லைத்தீவு,மார்ச்16

முல்லைத்தீவு மாவட்டத்தில் பாடசாலைக்குச் செல்லாத அநேக பிள்ளைகள் வீட்டில் வீண்பொழுதைக் கழிப்பதாக கூறப்படுகின்றது.

வறுமை, குடும்பச் சுமை ஆகியன இதற்கான பிரதான காரணங்களாகக் கூறப்படுகின்றன.

வறுமை, குடும்பச் சுமை ஆகியன இதற்கான பிரதான காரணங்களாகக் கூறப்படுகின்றன

மேலும் பாடசாலைக்குச் செல்லாத சிறுவர்கள் சிலர் மது பாவனையில் ஈடுபடுவதையும், பாலியல் துஷ்பிரயோக நடவடிக்கைகளில் தொடர்புகொண்டிருப்பதையும் அவதானிக்க முடிகின்றது.

பெற்றோர்களின் அக்கறையின்மையும் முக்கிய காரணமாகவுள்ளது.

இது தொடர்பாகக் கல்விச் சமூகத்தினர் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். பாடசாலைகளுக்குப் பிள்ளைகளைத் தவறாது அனுப்பி வைக்குமாறும் இவர்கள் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர். சிலர் இதனைச் செவிமடுத்து தமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புகின்றனர். ஆனால் பலர் உதாசீனம் செய்கின்றனர்.

எவ்வாறெனினும் பாடசாலை செல்ல வேண்டிய பிள்ளைகளை உடன் அனுப்ப வேண்டியது அவர்களது பெற்றோர்களின் தலையாய கடமையெனவேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (க-500)

## கிளைக்கு மின்சாரம்

துணுக்காய், மார்ச் 16

வவுனிக்குளம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினரால் அனிஞ்சியன் குளத்தில் அமைந்துள்ள கிளைக்கு மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்தக் கிளை மின்சாரமின்றி இருளில் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் இயங்குவதாக செய்தி வெளியானதை அடுத்து இந்த நடவடிக்கை துரிதமாக இடம்பெற்று வருகின்றது.

செய்தி வெளியானதை அடுத்து இரண்டு லாந்தர்கள் இந்தக் கிளைக்கு வழங்கப்பட்டன. தற்போது மின்சாரம் கிடைக்க விருப்பதையிட்டு பாவனையாளர்களும் கிளை ஊழியர்களும் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளனர். (க-415)

# உயர்ந்த வருமானம் தரும் ஒன்றாக அச்சுவேலி கைத்தொழில் பேட்டை

## ஏற்ற வகையில் திட்டங்கள் வரைபு

யாழ்ப்பாணம்,மார்ச்16

அச்சுவேலி கைத்தொழில் பேட்டை எமது பிரதேச மக்களின் வருமானத்தை அதிகரிக்கும் ஒன்றாக மட்டுமல்ல சிறந்த கைத்தொழிற் போட்டையாகவும் அமையும் வகையில் திட்டங்கள் வரையப்பட்டுள்ளது.

பாரம்பரிய கைத்தொழில் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வீ. சிவஞானசோதி இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் கைத்தொழில் பேட்டையின் திட்டங்கள் எதிர்கால செயற்பாடுகள் குறித்த கலந்துரையாடல் நடைபெற்றது.

இதனை ஆரம்பித்து வைத்துப் பேசிய அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி மேற் கண்டவாறு தெரிவித்தார்.

> சுமார் 65 திட்டங்களை உள்ளடக்கிய இதன் முன்னேற்றம்தான் எமது முன்னேற்றமாக இருக்கும். இதன் வேலைத் திட்டங்கள் படிப்படியாக இடம் பெற்று வருகின்றன.

இந்த விடயங்கள் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சுமார் 65 திட்டங்களை உள்ளடக்கிய இதன் முன்னேற்றம்தான் எமது முன்னேற்றமாக இருக்கும். இதன் வேலைத் திட்டங்கள் படிப்படியாக இடம் பெற்று வருகின்றன. உட்கட்டுமானப் பணிகள் முடிவடைந்துள்ளன. 1971 ஆம் ஆண்டில் 65 ஏக்கர் நிலப்பரப்பில் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டத்தில் 25 ஏக்கரில் இயந்திய அரசின் உதவியுடன் திட்டங்கள் செயற்படுத்தப்படும். இந்திய அரசு இந்தத் திட்டத்திற்கு 174மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.

மின்சாரம், தண்ணீர் போன்ற வசதிகள் அனைத்தும் ஏற்படுத்தப்படும். வீதிகள் நிர்மாணிக்கப்படும். யூநொப் நிறுவனத்தின் முன்னெடுப்புடன் பல திட்டங்கள் நிறைவேற்றப் படவுள்ளன.

தொழில் துறை தொடர்பான எதிர்கால வளங்கள் தேவைகள் குறித்து கலந்துரையாடுவதன் மூலம் சிறப்பான வளர்ச்சியை எட்டக் கூடியதாக இருக்கும் என்பதால் துறை சார்ந்த வல்லுநர்களின் ஆலோசனைகள் இதன் எதிர்காலத்துக்கு முக்கியம்.- என்றார்.

யாழ். இந்திய பதில் தூதுவர் ஸ்ரீகாந்த கைத்தொழில் அதிகார சபையின் பொது முகாமையாளர் ஜஸ்மின் மன்னப்பெருமா, யூநொப்ஸ் திட்ட அலுவலர் காந்தா அத்துகொறல ஆகியோரும் உரையாற்றினர். (ம-7)

# படரும் பாதீனியத்தால் பாதிக்கும் விவசாயம்



யாழ்ப்பாணம், மார்ச் 16

கோப்பாய் இராச வீதியில் உள்ள விவசாய நிலங்களில் பல்கிப் பெருகிக் காணப்படும் பாதீனியச் செடியால் விவசாய செய்கை பாதிக்கப்படும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் உள்ள விவசாய நிலங்களைப் பாதீனியக் களைகள் முற்றுகையிட்டு விளை பயிர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தி வருவதாகக் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருட இறுதியில் இந்த பகுதியில் உள்ள விவசாய நிலங்களில் இந்தப் பாதினியம் பிடுங்கி அழிக்கப்பட்டது. ஆனால் இந்தப் பாதீனியம் மீண்டும் சடுசடுவென பெருகி விவசாய நிலங்களை முற்றுகையிட்டுள்ளது. குறிப்பாக இந்தப் பகுதியில் உள்ள விவசாய நிலங்களில் கோவா பயிர்ச் செய்கையில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டியுள்ளனர். இந்த கோவா பயிர்களும் விவசாய நிலங்களில் நல்ல நிலையில் காணப்படுகின்றன.

சில விவசாய நிலங்களில் இந்த கோவா பயிரை சுற்றி பாதீனிய செடிகள் முற்றுகையிட்டும் காணப்படுகின்றன.

இதே சமயம் வலிகிழக்கு பிரதேசத்தில் பல்வேறு பகுதிகளிலும் இந்த பாதீனிய களைகளின் பெருக்கம் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

குறிப்பாக இந்தப் பகுதி விவசாய நிலங்கள் மற்றும் பொது இடங்கள் குடியிருப்பு இல்லாத வெறும் காணிகள் பேன்றவற்றில் இந்த பாதீனிய செடிகள் காடுபோல் வளர்ந்து காணப்படுகின்றன.

இந்த செடிகள் தற்போது பூத்த நிலையில் உள்ளதால் அவை தற்போது அழிக்கப்பட்டாலும் கூட மீண்டும் மழை பெய்தவுடன் பெருகி வளரலாம் என்று விவசாயிள் தெரிவித்தனர்.

வருடா வருடம் இந்த செடிகள் அழிக்கப்பட்டாலும் கூட அவை மழை பெய்தவுடன் மீண்டும் படர்ந்து வளர்ந்து விடுகின்றன.

இந்த செடிகளை அழிப்பதற்கு அதிக நிதி செலவழிக்கப்பட்டும்கூட அவற்றை முற்றாக அழிக்க முடியாது இருப்பதாக விவசாய திணைக்கள அதிகாரி ஒருவர் கூறினார்.

பொதுமக்கள், விவசாயிகள் இந்த செடிகளை கண்டவுடன் உடன் பிடுங்கி அழிப்பதற்கு அதிக அக்கறை காட்டவில்லை என்றும் அவர் மேலும் கூறினார். (ம-17)

# குடும்பப் பெண் கொலை: பிணை கோரும் கணவன்

மீசாலையில் குடும்பப் பெண் கொலை வழக்கின் முதலாவது சந்தேக நபரான கனடாவிலிருந்து வந்திருந்த பெண்ணின் கணவர் பிணைகோரி யாழ். மேல்நீதிமன்றில் சட்டத்தரணி ஊடாக மனுத்தாக்கல் செய்துள்ளார்.

மீசாலையில் கடந்த வருடம் மார்ச் 06 ஆம் திகதி குடும்பப் பெண்ணான குகதாஸ் சாந்தினி (வயது-39) என்பவர் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

இவரைக் கடத்திக் கொலை செய்தனர் என்ற குற்றச் சாட்டில் பெண்ணின் கணவர் உட்பட 6 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். ஐந்து சந்தேக நபர்களில் இளம் பெண் உட்பட நான்கு பேரும் யாழ்.மேல் நீதிமன்றால் ஏற்கனவே பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

> ஐந்து சந்தேக நபர்களில் 4 பேர் பிணையில் ஏற்கனவே விடுவிப்பு.

இந்த நிலையிலேயே முதலாவது சந்தேக நபரான செல்லத்துரை குகதாஸ் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில் பிணைகோரி சட்டத்தரணி சர்மினி விக்கினேஸ்வரன் ஊடாக மனுத்தாக்கல் செய்துள்ளார். (ம-4)

# அராலி- அச்சுவேலி வீதி அகலிப்பு

அளவெட்டி,மார்ச் 16

அராலியிலிருந்து, விளான், அம்பனை, தெல்லிப்பழை, கட்டுவன் ஊடாக அச்சுவேலிக்குச் செல்லும் பிரதானவீதியை அகலிப்புச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் மதகுகள், பாலங்கள் என்பன உடைத்து அகலிப்புச் செய்யப்பட்டு திருத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இதற்காக வீதி ஓரம் நின்ற மரங்கள் கனரக வாகன மூலம் கிளறியும் வெட்டியும் வீதி ஓரம் போடப்பட்டுள்ளன.

இந்த நிலையில் குறிப்பிட்ட இடங்களில் பெரும் பள்ளங்கள் காணப்படுகின்றன.

இதற்கு வீதிச் சமிக்கைகள், மஞ்சள் கறுப்புக் கலந்த பட்டிகளாலும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த வீதியில் உள்ள பாலம், மதகு வேலைக்காக தோண்டப்பட்ட குழிகள் அரையும் குறையுமாக வேலைகள் முடிந்தும் முடியாததுமாகக் காணப்படும் நிலையில் இந்த வீதியில் இரவு வேளையில் பயணிக்கும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். குறிப்பிட்ட இடங்களுக்கு அருகில் எந்த விதமான வெளிச்சங்களும் இல்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனால் விபத்துகள் ஏற்படும் நிலைமை உள்ளதாகவும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. (ம-36)

### சுமங்கலி விடுதி வழக்கு மே மாதத்துக்கு

யாழ்.சுமங்கலி விடுதியில் விபசாரம் செய்தனர் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டவர்கள் மற்றும் அதன் உரிமையாளர்கள் மீதான வழக்கு மே மாதம் 15 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. செவ்வாய்க்கிழமை யாழ். நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் இந்தவழக்குவிசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன்போது சம்பவம் தொடர்பாக குற்றப்பத்திரம் தாக்கல் செய்வதற்கு யாழ். பொலிஸார் கால அவகாசம் கோரியதால் அது ஒத்திவைக்கப்பட்டது.

அன்றையதினம் விபசாரத்தில் ஈடுபட்டனர் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட 3 ஆண்களும் 3 யுவதிகளும் மற்றும் விடுதி உரிமையாளர், உதவியாளர் இருவருமாக 8 பேரும் மன்றில் முன்னிலையாகியிருந்தனர். நீதிமன்றில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் கையெழுத்திடும்படி உத்தரவிடப்பட்டிருந்தது. அது தற்போதுநீக்கப்பட்டுள்ளது. (ம-4)

# கால்நடை உணவு வகைகளை நியாயமாக விநியோகிக்குக

## சமாசம் மூலம் கொள்வனவு செய்ய அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 15

கால்நடை கூட்டுறவு சங்கங்கள் கால்நடைகளுக்குரிய மாஸ், மருந்து ஆகியவற்றை சமாசத்தின் மூலம் கொள்வனவு செய்து நியாயமான விலைகளில் பொதுமக்களுக்கு விநியோகிக்க வேண்டும் என்று யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே. அருந்தவநாதன் தெரிவித்தார்.

கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கங்களின் சமாச வருடாந்த பொதுக் கூட்டம் திருநெல்வேலியில் உள்ள தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது. அந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கொழும்பிலிருந்து கொள்வனவு செய்யும் கால்நடைகளுக்குரிய உணவு, மருந்து வகைகள் தனியாரிடமிருந்து பெற்றுக் கொள்ளும் விலைகளிலும் பார்க்க குறைந்த விலையிலும் தரமானதாகவும் சமாசத்தின் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

கூட்டுறவு சங்கங்களில் கொள்வனவு செய்யும் பசுப் பாலை, முன்பள்ளிகள், சமூர்த்தி சங்கங்கள் ஆகியவற்றுக்கு விற்பனை செய்யும் நிலையில் மீதி பாலை தனியாருக்கு விற்பனை செய்யக்கூடாது. அதனை யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பனை செய்ய வேண்டும்.- என்றார். (ம-13)

# சுன்னாகம் ரயில் நிலைய கட்டடங்களில் தங்கியிருப்போரை வெளியேறுமாறு உத்தரவு

யாழ்ப்பாணம், மார்ச் 16

சுன்னாகம் ரயில் நிலைய விடுதி கட்டடங்கள் மற்றும் அதனை அண்டிய ரயில் பாதைகளில் தங்கியிருக்கும் மக்களை உடனடியாக அந்த இடத்திலிருந்து வெளியேறுமாறு ரயில்வே திணைக்களம் கேட்டுள்ளது.

இந்த ரயில் நிலைய வளாகப் பகுதியை துப்புரவு செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கு முன்னோடியாக ரயில் நிலைய வளாகம் மற்றும் ரயில் நிலைய விடுதிக் கட்டடங்கள் ரயில் பாதைகள் என்பன வெறுமையாக்கப்படவுள்ளன.

தற்போது இந்த ரயில் நிலையத்திலும் நிலைய விடுதி ரயில் பாதைகளில் மக்கள் தங்கியுள்ளனர். இவர்கள் வெளியேறியதையடுத்தே அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

சுன்னாகம் ரயில் நிலையத்தில் இருந்தும் ரயில் பாதைகளை துப்புரவு செய்வதற்கான பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

> மக்கள் வெளியேறிய விடுதிக் கட்டடங்களில் ரயில் நிலைய புனரமைப்பு பணியில் ஈடுபடும் தொழிலாளர்களை தங்க வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மக்கள் வெளியேறிய விடுதி கட்டடங்களில் ரயில் நிலைய புனரமைப்பு பணியில் ஈடுபடும் தொழிலாளர்களை தங்கவைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மக்கள் வெளியேறிச் சென்ற விடுதிகளை ரயில்வே திணைக்களம் உத்தியோக பூர்வமாகப் பெறுப் பேற்றும் உள்ளன என்று ரயில் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, யாழ். ரயில் நிலைய வாளாகத்தில் செயற்பட்டு வந்த கள்ளுத் தவறணை அங்கிருந்து அகற்றப்பட்டுள்ளது.

இந்தக் கள்ளுத் தவறணை முன் அனுமதி இன்றி கடந்த சில வருடங்களாக இந்த வளாகப் பகுதியில் செய்பட்டு வந்தது.

தற்போது இந்த கள்ளுத் தவறணையை உடனடியாக அகற்றுமாறு ரயில்வே திணைக்களம் பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தை கேட்டது. இதனை அடுத்து இந்த கள்ளுத் தவறணை கடந்த வாரத்தில் மூடப்பட்டு வேறு இடத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளது.- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-17)

# வெட்டி விற்கப்படும் எமது மண்

## பள்ளமான காணிகளில் போட்டு நிரவலாம் என்றும் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம்,மார்ச் 16

யாழ். குடாநாட்டு பிரதான வீதிகளில் வீதி அகலிப்புக்கென வெட்டப்படும் மண் பொது மக்கள் சிலருக்கு விற்கப்படுவது குறித்து விசனம் தெரிவிக்கப்படுகிறது.

பருத்தித்துறை வீதி, இராசவீதி, கே.கே.எஸ்.வீதி போன்றவற்றின் அகலிப் புனர்நிர்மாணப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த வீதி அகலிப்பு பணியின் போது வீதி ஓரப் பகுதி பைக்கோவால் வெட்டப்பட்டு பின்னர் வெட்டப்பட்ட இடத்துக்கு கிறசர் மண் பரவி சீர்செய்யப்படுகின்றது.

இவ்வாறு வெட்டப்படும் வீதி ஓர மண் பின்னர் கனரக வாகனம் மூலம் ஏற்றப்பட்டு பொதுமக்கள் சிலருக்கு விற்கப்படுகின்றது.

இவ்வாறு வெட்டப்படும் ஒரு லோட் மண் 3 ஆயிரத்து 500 ரூபா முதல் 4 ஆயிரத்து 500 ரூபா வரைக்கும் விற்கப்படுகின்றது.

> இவ்வாறு வெட்டப்படும் ஒரு லோட் மண் 3 ஆயிரத்து 500 ரூபா முதல் 4 ஆயிரத்து 500 ரூபா வரைக்கும் விற்கப்படுகின்றது.

தென்பகுதி தனியார் ஒப்பந்தகாரரால் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த குடாநாட்டு வீதி அகலிப்பு புனரமைப்பு பணிகளின் போது வீதியில் வெட்டப்படும் மண் பின்னர் விற்கப்படுவதற்கு யார் அனுமதி கொடுத்தார்கள் என்று மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இப்படிப்பட்ட மண் வியாபாரத்துக்கு வீதி புனரமைப்பு சம்பந்தமான திணைக்களம் மற்றும் பிரதேச சபை போன்றவற்றின் அதிகாரிகள் மௌனம் காத்தும் வருகின்றமை குறித்தும் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக குடாநாட்டின் அநேகமான குறுக்கு வீதிகள், ஒழுங்கைகள் மற்றும் பொது இடங்கள் என்பன புனரமைப்பு இன்றிக் காணப்படுகின்றன.

மாரி காலத்தில் மக்கள் போக்குவரத்து மேற்கொள்ள முடியாத அளவுக்கு இந்தப் பகுதிகள் தாழ்ந்து வெள்ளக் காடாக காட்சியளிக்கின்றன.

இவ்வாறு வீதிகளின் அகலிப்பின் போது அள்ளப்படும் மண்ணை குறித்த தாழ்ந்த இடங்களில் கொட்டி அவற்றை சீர் செய்வதற்கு அதிகாரிகள் தவறிவிட்டனர் என்று மக்கள் கவலைப்பட்டனர்.


சம்பந்தப்பட்ட வீதி புனரமைப்பில் ஈடுபடும் இந்த ஒப்பந்தகாரர்கள் அள்ளப்படும் மண்ணைக் கூட விட்டுவைக்கவில்லை அதையும் மக்களுக்கு விலை பேசி விற்று வருகின்றனர்.

இவ்வாறான மண் வியாபாரத்தைத் தடுத்து நிறுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குடாநாட்டின் தாழ்ந்த பிரதேசங்களை இனம் கண்டு இந்த மண்ணைக் கொண்டு அவற்றைச் சீர் செய்வதற்கும் இந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எமது பிரதேச வீதியோர மண்ணையே வெட்டி பின்னர் அதை எமது மக்களுக்கே விற்று பணம் கறக்கும் நடவடிக்கையை தடுத்து நிறுத்த உரியவர்கள் முன்வர வேண்டும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம-17)

# கால்வாயின் மூடிகள் சேதம் போக்குவரத்தில் நெருக்கடி



யாழ்ப்பாணம், மார்ச் 16

யாழ். நகரில் கஸ்தூரியார் வீதியில் மாக்பெட் எரிபொருள் விற்பனை நிலையத்துக்கு முன்பாகவுள்ள கழிவு நீர் ஓடும் கால்வாயின் மூடிகள் திறந்தும் சேதமடைந்த நிலையிலும் காணப்படுகின்றன.

கால்வாய் துப்புரவுக்காக மூடிகள் கடந்த சில நாள்களாகத் திறந்து விடப்பட்ட நிலையில் உள்ளதால் போக்குவரத்து செய்யும் மக்கள் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர். இதேவேளை சில மூடிகள் சேதமடைந்தும் காணப்படுகின்றன.

எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு எரிபொருளுக்கு வரும் வாகனங்கள் இந்த கால்வாய் மூடியின் பாதுகாப்பின்மையால் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றன.

> எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு எரிபொருளுக்கு வரும் வாகனங்கள் இந்த கால்வாய் மூடியின் பாது காப்பின்மையால் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றன.

யாழ். மாநகர சபையால் அண்மையில் இந்தக் கால்வாயின் சேதப்பட்ட மூடிகள் சீர் செய்யப்பட்ட போதும் மீண்டும் அந்த மூடிகள் பழுதடைந்து காணப்படு கின்றன.

நகரின் முக்கிய சந்தியில் காணப்படும் இந்த கால்வாயின் மேல்தள மூடிகளை சீர்படுத்தி அமைப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-17)

### தென்மராட்சி கல்வி அலுவலகம்

# 2 ஆவது மாடிக் கட்டம் இனி எப்போது பணிகள்?

சாவகச்சேரியில் உள்ள தென்மராட்சி கல்வி வலய மாடிக் கட்டடத்தின் இரண்டாம் கட்டப் பணிகள் எப்போது ஆரம்பமாகும் என்று அலுவலர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். இந்தக் கட்டடத்தின் தளவேலைகள் முடிவுற்ற நிலையில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிய வலயக் கல்வி அலுவலகம் தற்போது அங்கு மாற்றப்பட்டு இயங்கி வருகிறது.

வலயக் கல்விப் பணிப்பாளருக்கு தனியாக அறை அமைக்கப்பட்டுள்ள போதிலும் 6 பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கணக்காளர் போன்ற அலுவலர்களுடன் ஏனைய அலுவலர்கள் இந்த அலுவலகத்தில் பெரும் நெருக்கடிக்கு மத்தியில் பணியாற்றுகின்றனர்.

தற்போதைய அலுவலகக் கட்டடத்தில் போதிய இடமில்லாததால் உதவிக் கல்விப் பணிப்பாளர்களும் ஆசிரிய ஆலோசகர்களும் வெளி விறாந்தையில் உள்ள மேசையில் தமது கடமைகளைச் செய்து வருகின்றனர். இரண்டாம் கட்ட (மாடி) வேலைகள் விரைவில் செய்து முடிக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டு 16 மாதங்கள் கடந்த நிலையில் இதுவரை இரண்டாம் கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை.

இந்த விடயத்தில் மாகாண கல்வித் திணைக்களத்தினர் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு விரைவில் வலயக் கல்வி அலுவலகத்தின் மாடிக் கட்டட வேலைகளை விரைவில் ஆரம்பிப்பார்களா என்று கேட்கப்பட்டுள்ளது. (ம-9)

# போக்குவரத்து சபை பஸ்களில் தீவுப் பகுதிக்கான தபால் பொதி

## பிரதம தபாலக வாகனம் பழுதடைந்தமையே காரணம்

தீவுப் பகுதிக்கான தபால் பொதிகள் மீண்டும் போக்குவரத்து சபையின் பஸ்கள் மூலம் தபாலக பணியாளர்களால் எடுத்துச் செல்லப்படுகின்றன.

முன்னர் யாழ்.பிரதம தபாலக வாகனம் மூலம் இந்த தபால் பொதிகள் தினமும் குறிகாட்டுவான் துறை முகம் வரைக்கும் எடுத்துச் செல்லப்பட்டன.

தற்போது இந்தத் தபாலக வாகனம் பழுதடைந்துள்ளதால் தபால் பொதிகள் எடுத்துச் செல்வது பாதிக்கப்பட்டது.

இதனை அடுத்து தீவுப் பகுதிக்கான தபால்கள், போக்குவரத்து சபை பஸ்கள் மூலம் கொண்டு செல்லப்பட்டுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (ம-17)

# பருத்தித்துறை நீதிமன்றுக்கு ஒரு தொகுதி தளபாடங்கள்

வடமராட்சி, மார்ச் 16

பருத்தித்துறை மாவட்ட நீதிவான் நீதிமன்றத்துக்கு மேலும் ஒரு தொகுதி தளபாடங்கள் வந்து சேர்ந்துள்ளன.

இந்த நீதிமன்றத் தொகுதி 70 லட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டு சில மாதங்களுக்கு முன்னர் இயங்கத் தொடங்கியது. நீதிமன்றம் இயங்கத் தொடங்கிய போதும் முதற்கட்டமாக வந்து சேர்ந்த புதிய தளபாடங்கள் பயன்பாட்டுக்கு போதுமானதாக இருக்கவில்லை.

இது தொடர்பாக பருத்தித்துறை மாவட்ட நீதிபதியும், பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்கமும் நீதிச் சேவை ஆணைக்குழுவின் கவனத்திற்குகொண்டு வந்ததைத் தொடர்ந்து இரண்டாம் கட்டமாக ஒரு தொகுதி தளபாடங்கள் வந்து சேர்ந்துள்ளன.

இரண்டாம் கட்டமாக வந்து சேர்ந்த இந்தத் தளபாடங்கள் நீதிமன்றத்தின் களஞ்சியம், பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்க நூலகம், இலவச சட்ட உதவி நிலையம் ஆகியவற்றுக்கு பகிர்ந்து வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை பருத்தித்துறை சட்டத் தரணிகள் சங்க நூலகம், சட்ட உதவி நிலையம் ஆகியவற்றுக்கு கேபிள் தொலைபேசி இணைப்புக்களும் வழங்கப்பட்டுள்ளன.

சட்டத்தரணிகள் சங்க நூலகம், சட்ட உதவி நிலையம் ஆகியன பருத்தித்துறை நீதிமன்ற வளாகத்தில் முன்னர் இருந்த அதே இடத்தில் தொடர்ந்து இயங்கி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ங-8)

# கொலை வழக்கு விசாரணை தொகுப்புரைக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 16

கரணவாய் கொலை வழக்கு சம்பந்தமான விசாரணைகள் தொகுப்புரைக்காக எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

இந்த வழக்கு யாழ். மேல் நீதிமன்றில் நீதிபதி ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே சாட்சியத்தின் பின்னர் ஒத்தி வைக்கப்பட்டது.

2002 ஆம் ஆண்டு மார்ச் 25 ஆம் திகதி கரணவாயில் அதே இடத்தைச் சேர்ந்த மாணிக்கம் தவராஜா என்பவரைக் கொலை செய்த குற்றச்சாட்டில் அதே இடத்தைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டனர்.

செல்வரத்தினம் சுவேந்திரன், சண்முகம் சதீஸ்கரன் ஆகியோரே இவ்வாறு சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

அரச தரப்பு சாட்சியம் முடிவடைந்ததையடுத்து எதிரி தரப்பு விளக்கம் நீதி மன்றினால் கோரப்பட்டது.

கொலைக் குற்றம் சாட்டப்பட்ட முதன்மை நபரான சுவேந்திரன் சாட்சியமளித்தார். அவரது சார்பில் சட்டத்தரணி என்.ஸ்ரீ காந்தா மன்றில் சாட்சியை நெறிப்படுத்தினார்.

குற்றம் சாட்டப்பட்டவர் கூறியதாவது: இறந்தவரும் வேறு சிலரும் முன்னர் எனது வீட்டுக்கு வந்து எனது பெற்றோரையும், வீட்டிலிருந்த ஏனையவர்களையும் தாக்கியமை தொடர்பில் முறைப்பாடு செய்வதற்காக அடுத்த நாள் காலை பொலிஸுக்குச் சென்றிருந்தேன்.

எனது முறைப்பாட்டை எடுக்காமல் அறையொன்றினுள் தள்ளிப் பூட்டினார்கள். பின்னர் தொலைக்காட்சியில் சித்திரவதைக் காட்சிகளைப் போட்டுக் காண்பித்தனர்.

இறந்தவரைக் கொலை செய்தது நான்தான் என்று ஒப்புக் கொள்ளுமாறு வற்புறுத்தினார்கள். கொலை செய்யப் பயன்படுத்திய கத்தியைத் தருமாறு கேட்டு நிர்ப்பந்தித்தார்கள். அடித்துத் தொல்லை கொடுத்தார்கள். அதனால் பொலிஸாருடன் சென்று எனது மாமனார் வீட்டிலிருந்த சிறிய கத்தியொன்றை எடுத்துக் கொடுத்தேன்.

சம்பவ தினத்தன்று நாள் முழுவதும் தடுத்து வைக்கப்பட்ட நான் மறுநாள் பருத்தித்துறை நீதிவானிடம் முன்னிலைப்படுத்தப்பட்டேன். அங்கு குற்ற ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றை நீதிவானுக்கு அளிக்குமாறு பொலிஸார் நிர்ப்பந்தித்ததனால் எனது வாக்குமூலம் 3 நாள்களின் பின்னர் நீதிவான் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டது.

தமக்கு ஒத்துழைக்காவிட்டால் எனது பெற்றோரைக் கைது செய்து பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் களுத்துறைக்கு அனுப்பி விடுவோம் என்று பொலிஸார் என்னைப் பயமுறுத்தினர். - என்று கூறினார்.

முதலாம் அரச சட்டவாதி வி. திருக்குமரன் குறுக்கு விசாரணை செய்தார். தொடர்ந்து இரண்டாம் எதிரியின் சட்டத்தரணி எஸ்.வரதராஜாவால் அவர் மேலும் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

முதலாம் எதிரியின் சாட்சியத்தைத் தொடர்ந்து இரண்டாம் எதிரியைச் சாட்சியமளிக்க அழைக்கவில்லை என்றும் சட்டத்தரணி எஸ். வரதராஜா மன்றில் தெரிவித்தார். அதனையடுத்து இரு தரப்பினரதும் தொகுப்புரைக்காக வழக்கு எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (ம-4)

# 90 வீதமான நிவாரணம் நிறைவு

யாழ்ப்பாணம், மார்ச் 16

யாழ். மாவட்டத்தில் கடந்த மூன்று மாதங்களுக்குமான சமுர்த்தி நிவாரணம் 90 வீதம் வரையிலான பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு விட்டதாக மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே அருந்தவநாதன் தெரிவித்தார்.

கடந்த ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களுக்கான சமுர்த்தி நிவாரணம் ஒரே தடவையில் பயனாளிகளுக்கு சங்க கிளைகள் ஊடாக விநியோகிக்கப்பட்டது. நேற்றுடன் இந்த நிவாரண விநியோகப் பணிகள் முடிவுற்றுள்ளன. இதுவரையும் கிட்டத் தட்ட 90 வீதம் வரையிலான பயனாளிகள் இந்த நிவாரணத்தை பெற்றுள்ளனர்.

விநியோகத்தில் எந்தவித முறைப்பாடும் கிடைக்கவில்லை. பயனாளிகளும் சிரமம் இன்றியும் பொருள்களின் தரம் அதன் மாதிரிகளைப் பார்வையிட்டுப் பெற் றுள்ளனர்.

நிவாரண விநியோகம் நேற்று டன் முடிவுற்றுள்ளதால் இந்த நிவாரணத்தை பெறத் தவறியோருக்கு பிறிதொரு தினத்தில் அதை விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.- என்றார். (ம-17)

# மக்களாட்சியை ஏற்படுத்த அனைவரும் ஒன்றிணைக

## ஹற்றனில் ரணில் அழைப்பு



கண்டி, மார்ச் 16

மக்கள் வறுமையிலிருந்து விடுதலை பெற்று மக்களாட்சியை ஏற்படுத்துவதற்குச் சகலரும் ஒன்றுபட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஹற்றன் நகரில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை நடைபெற்ற எதிர்க்கட்சிகளின் கண்டனக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய அரசு வெளிநாட்டு வங்கிகளிடமிருந்து பெருந்தொகையான கடனைப் பெற்று இந்த நாட்டைச் சீரழித்து வருகின்றது. இந்த வெளிநாட்டு வங்கிகளிடமிருந்து அரசு கடனாகப் பெற்ற 76,000 மில்லியன் ரூபாவைத் திருப்பிச் செலுத்தமுடியாத நிலையிலுள்ளது. நாட்டின் அபிவிருத்திக்காக பெறப்பட்டதாகக் கூறப்படுகின்ற இந்தக் கடனின் ஒரு தொகை தனிப்பட்டவர்களின் நல னுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளன.

> நாட்டு மக்கள் மத்தியில் பசியும் பட்டினியும் ஏற்பட்டு வாழமுடியாத நிலைமை ஏற்படும்.

இந்த நிலையில் வாங்கிய கடனை மீள வழங்க முடியாத நிலையில் அரசு இருப்பதால் இந்தக் கடனைச் செலுத்த வேண்டிய பொறுப்பு சாதாரண மக்களுக்கு இன்று ஏற்பட்டுள்ளது.

எரிபொருள்களின் விலையும் மின்சாரத்துக்கான கட்டணமும் அதிகரிக்கப்பட்டுள்ளன. ஆனால் தொழிலாளர்களுக்கான சம்பள அதிகரிப்பு மேற்கொள்ளப்படவில்லை. இவ்வாறானதொரு நிலையில் நாட்டு மக்கள் எவ்வாறு நிம்மதியாக வாழ முடியும்?

ஹற்றன் - டிக்கோயா நகரசபைப் பிரதேசத்தில் ஜனாதிபதியினதும் ஆறுமுகன் தொண்டமானினதும் பதாகைகள் பொருத்தப்பட்டு 'என்றும் நாங்கள் உங்களுடன்' என்று வாசகம் எழுதப்பட்டுள்ளது. இப்போது இந்த வாசகத்தை மாற்றி ஊழலும் மோசடியும் உங்கள் வசம் என்று எழுத வேண்டும். அரசு தனது நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

இந்த நாட்டு மக்கள் மத்தியில் பசியும் பட்டினியும் ஏற்பட்டு வாழமுடியாத நிலைமை ஏற்படும். எனவே நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து மக்களாட்சியை ஏற்படுத்த வேண்டும் - என்றார். (ச)

# மட்டக்களப்பில் மாபெரும் கண்காட்சி

மட்டக்களப்பு, மார்ச் 16

திவிநெகும திட்டத்தின் கீழ் குடிசைக் கைத்தொழிலை ஊக்குவிக்கும் முகமாக மாபெரும் கண்காட்சி எதிர்வரும் 31ஆம் திகதியும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதியும் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெறவுள்ளது.

மட்டக்களப்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள இக்கண்காட்சியில் கிராமிய ரீதியில் குடிசைக் கைத்தொழிலை மேம்படுத்தும் வகையில் அக் கைத்தொழிலை மேற்கொள்பவர்கள், அதனை மேற்கொள்ளவுள்ளவர்கள், அது தொடர்பில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருபவர்களுக்குத் தேவையான வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்படும் என்று மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

நிதி நிறுவனங்கள், தொழிற்பயிற்சி, இயந்திர சாதன மற்றும் கைத்தொழில் ஆகியவற்றின் நிறுவனங்கள் உட்பட சுமார் 23 நிறுவனங்கள் தமது காட்சிக்கூடங்களை அமைக்கவுள்ளன என்று அவர் தெரிவித்தார்.

இந்தக் கண்காட்சி மூலம் தலா ஒரு பிரதேச செயலகத்திலிருந்து சுமார் 500 பேர் வரை பயன்பெறும் வகையிலான வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று அவர் கூறினார்.

5 அமைச்சுக்கள் இணைந்து இக்கண்காட்சியை நடத்தவுள்ளன எனவும் இக்கண்காட்சி மூலம் குடிசைக் கைத்தொழிலாளர்கள் மற்றும் சிறுகைத்தொழிலாளர்கள் அதிக நன்மையடைய முடியும் என்று அவர் தெரிவித்தார்.

இந்தக் கண்காட்சியின் போது குடிசைக் கைத்தொழிலை மேற்கொள்பவர்களுக்குத் தேவையான நவீன இயந்திரங்கள் அறிமுகம் செய்து வைக்கப்படவுள்ளன. அத்துடன், அவற்றுக்கான பயிற்சி பெறும் வழிகள் தொடர்பிலும் விளக்க மளிக்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளார். சிறியளவில் குடிசைக் கைத்தொழிலை மேற்கொள்பவர்களுக்கு 10,000 ரூபா பெறுமதியான இயந்திரம் அல்லது பணம் வழங்கி வைக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# குற்றச் செய்திகள்

பொத்துவில், மார்ச் 16


சட்டவிரோதமாக தென்னங்கள்ளு மற்றும் மதுபானம் விற்பனை செய்த 7 பேருக்கு ஒரு லட்சத்து ஐயாயிரம் ரூபாவை அபராதமாகச் செலுத்துமாறு பொத்துவில் நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஐ.என்.றிஸ்வான் நேற்றுமுன்தினம் புதன்கிழமை உத்தரவிட்டார்.

கடந்தவாரம் சட்டவிரோத மதுபானம் விற்பனை செய்பவர்களைக் கைதுசெய்யும் நடவடிக்கையை திருக்கோவில் பொலிஸார் மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில், விநாயகபுரம் ஆகிய பிரதேசங்களில் வீடுகளில் சட்டவிரோதமாகத் தென்னங்கள்ளு, மதுபானம் விற்பனை செய்த 7 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு பொத்துவில் நீதி மன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர். இந்த நபர்கள் நேற்றுமுன்தினம் பொத்துவில் நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலையானபோதே, தலா ஒவ்வொருவருக்கும் 15,000 ரூபா வீதம் அபராதம் விதித்து நீதிவான் தீர்ப்பளித்தார். (ச)

* * *

ஒரு கிராம் கஞ்சா வைத்திருந்த ஒருவருக்கு 9,000 ரூபா அபராதம் செலுத்துமாறு பொத்துவில் நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஐ.என்.றிஸ்வான் நேற்றுமுன்தினம் புதன்கிழமை உத்தரவிட்டார். அம்பாறை மாவட்டத்தின் தம்பிலுவில் பிரதேசத்தில் நபர் ஒருவர் ஒரு கிராம் கஞ்சா வைத்திருப்பதாகப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து கடந்த 28ஆம் திகதி இந்த நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். இது தொடர்பான விசாரணை நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டபோது, இந்த நபர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து நீதிவான் அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். (ச)




அம்பாறை மாவட்டத்தில் பெரும் போக நெல் அறுவடை இடம்பெற்று வரும் நிலையில், நெல்லுக்குப் போதிய விலையுயர்வு கிடைக்காமையால் அறுவடை செய்த நெல்லை வெயிலில் உலர்த்தி சேமித்து வைப்பதில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். இந்த நெல்லை பிரதான வீதிகளிலும் பரப்பி உலரவிட்டுள்ளனர். (ச-30)

# ஆலயத்தில் விக்கிரகங்கள் திருட்டு

மட்டக்களப்பு, மார்ச் 16

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரைப் பிரதேசத்திலுள்ள பால்சேனை பெரிய சுவாமி ஆலயத்தில் இருந்த பெறுமதி வாய்ந்த விஷ்ணு மற்றும் நாக சுவாமி விக்கிரகங்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு திருடப்பட்டுள்ளதாக வாகரைப் பொலிஸில் ஆலய நிர்வாகத்தினர் முறைப்பாடு செய்துள்ளனர்.

சம்பவ தினத்தன்று பகல் ஆலய பூசகர் வழமை போன்று ஆலயத்தில் பூசை வழிபாடுகளை முடித்துவிட்டு வீடு திரும்பியதாகவும் நேற்று முன்தினம் இரவு விக்கிரகங்கள் திருடப்பட்டுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# மட்பாண்டப் பொருள்களை விற்பனை செய்வதில் அவதி



மட்டக்களப்பு மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் மட்பாண்டப் பொருள்களை விற்பனை செய்யமுடியாமல் உற்பத்தியாளர்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

களிமண்ணைக்கொண்டு தயாரிக்கின்ற சட்டி, பானை, குடங்கள் உட்பட பல்வேறு பாவனைப் பொருள் கள் தயாரிக்கப்படுகின்றன. ஆனால் உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்கு உரிய சந்தை வாய்ப்பின்மையால் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர் (ச)

# கஞ்சாவுடன் சாரதி கைது

சம்மாந்துறை, மார்ச் 16

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மல்வத்தை சந்தியில் நேற்று அதிகாலை 19 கிலோகிராம் நிறையுடைய கஞ்சா பொதிகளைக் கடத்திச்சென்ற காரொன்றை பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர். காரின் சாரதியையும் கைது செய்துள்ளனர்.

சம்மாந்துறை பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலைத்தொடர்ந்து பொலிஸ் பொறுப்பதிகாரி எஸ்.எல். சம்சுதீன் தலைமையிலான பொலிஸ் குழுவினரால் இக் கஞ்சா பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தக் கஞ்சா பொதிகள் தனமல்வில பிரதேசத்திலிருந்து கல்முனை பிரதேசத்துக்கு கொண்டுவரப்பட்டதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். இந்தசம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# நாட்டை அடிமைப்படுத்துவதே வல்லரசு நாடுகளின் செயற்பாடு

## கல்முனை முதல்வர் தெரிவிப்பு

அம்பாறை, மார்ச் 16

நாட்டை அடிமைப்படுத்தும் நோக்குடன் வல்லரசு நாடுகள் செயற்பட்டு வருகின்றன. இந்த இக்கட்டான சந்தர்ப்பத்தில் நாம் நாட்டுப்பற்றுமிக்கவர்களாகத் திகழ வேண்டும் என்று கல்முனை மாநகர முதல்வர் முஹமட் சிராஸ் மீரா சாகிப் தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்துள்ள பிரேரணை தொடர்பாக கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

முப்பது வருட கால போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு இன்று நாட்டு மக்களனைவரும் சுதந்திரக் காற்றை சுவாசித்து நிம்மதியுடன் வாழும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் நாட்டுக்குக் களங்கம் ஏற்படுத்தவும் நாட்டை அடிமைப் படுத்தவும் நோக்காகக் கொண்டு வல்லரசு நாடுகள் ஜெனிவா மனித உரிமைப் பேரவையில் பொய்க்குற்றச் சாட்டுக்களைச் சுமத்தி களமிறங்கி நிற்கின்றன.

எனவே இது நம் தாய் நாடு என்ற வகையிலும் நாம் இலங்கை நபர்கள் என்பதாலும் தாய் நாட்டுக்கெதிரான சதிகளுக்கு ஒரு போதும் துணை போகக் கூடாது.

இந்த இக்கட்டான கால கட்டத்தில் நாம் நாட்டுப்பற்றுடன் ஒற்றுமையான ஆதரவை அரசுக்கு வழங்க வேண்டும்- என்றார். (ச-30)

# டெங்குநோய் அபாயம்

மேல் மாகாணத்தில் இந்த வருடத்தில் மாத்திரம் டெங்குக் காய்ச்சலினால் 7 பேர் உயிரிழந்துள்ளதாக மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதுவரை 4000 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக மேல்மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் அமல் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

டெங்குக் காய்ச்சலினால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ள போதிலும், நோய்த் தாக்கத்துக்கு இலக்காகும் நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச)

## எமது பங்களிப்பு என்ன...?

"மிகச் சிறியோராகிய இவர்களுள் ஒருவருக்கு நீங்கள் எதையெல்லாம் செய்யவில்லையோ அதை எனக்கும் செய்யவில்லை" (மத் 25:45)

ஓர் ஊரில் ஓர் அரசர் இருந்தார். அவரின் அரண்மனையில் விசாரணை நடந்தது. அதாவது, ஒரு விவசாயி "என்னுடைய வயலில் ஆடுகள் வந்து மேய்ந்து எனது பயிர்களை அழித்துவிட்டன. நிறையப் பணத்தை நான் அதற்காகச் செலவிட்டேன் எல்லாம் போய்விட்டன. இதற்கு நீங்கள் என்ன தீர்ப்பு வழங்குகிறீர்கள்?" எனக் கேட்டார். அதற்கு ஆட்டுக்குச் சொந்தக்காரரை அழைத்து விசாரித்த பின், அவருக்கு அரசரால் வழங்கப்பட்ட தீர்ப்பு யாதெனில், உங்களுடைய ஆடுகள் எல்லாவற்றையும் அந்த விவசாயிடம் ஒருவருடத்துக்கு ஒப்படைக்க வேண்டும். அவை போடும் குட்டிகள், பால், எரு ஆகியவற்றை விவசாயி எடுத்துக் கொள்ளட்டும் என்பதாகும். தீர்ப்பு என்பது நடைமுறையில் உள்ள ஒன்றாகும். அதில் குற்றம் செய்பவர் தண்டனைத் தீர்ப்பைப் பெறுகின்றார்.




இறை அரசைக் கட்டியெழுப்ப இறைமகன் இயேசு, இந்த உலகில் மனிதகுலம் எவ்வாறு வாழவேண்டும் என்பதனை வாழ்ந்து காட்டியதுடன் அதனையே பின்பற்றி வாழவேண்டுமென வழிகள் பலவும் காட்டியுள்ளார்- அதாவது அவருடைய அன்புச் செயல்கள், இரக்க செயல்கள், பசியாய், தாகமாய், அந்நியனாய், இன்னும் ஆடையின்றியும், நோயினாலும், சிறை வாழ்வாலும் துன் பப்படுகிறவர்களுக்கு ஆறுதல் அளித்து அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதுமே அவருடைய விருப்பமும், நோக்கமும் ஆகும். இவற்றிலிருந்து விலகு வோருக்கு இயேசு இறுதிநாளில் வழங்கும் தீர்ப்பு "சபிக்கப்பட்டவர்களே என்னிடமிருந்து அகன்று போங்கள்" என்பதாகும்.

உதவிகள் தேவைப்படுவோர் மத்தியில் எமது பங்களிப்பு தான் என்ன? கண்டும் காணாதவர் போல் செல்கின்றோம். சுயநலமா, பிறர்நலமா எம்மில் மிளிர்கிறது? இந்த உலகில் நாம் தேடிக்கொள்ளும் சொத்துக்கள் யாவும் எமக்கு நிலையானவை என எண்ணுகின்றோம்.

மாறாக நிலையற்ற இவ்வுலக வாழ்க்கைக்காக வாழாது இறை இயேசு விரும்பும் நிலையான வாழ்வுக்காக வாழ்வோம். அன்பு, பகிர்தல், தியாகம், மன்னிப்பு போன்ற பண்புகளை எமது அணிகலன்களாக்குவோம்.

திருமதி செல்வராணி ஞானரட்ணம், யா/சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாலயம்


## கார் வாடகைக்கு



திருமண வைபவங்களுக்கான கார் வாடகைக்கு விடப்படும்.

எம்மிடம் திருமண வைபவங்களுக்கான புதியரக குளிரூட்டப்பட்ட வெள்ளை நிற சொகுசுக் கார் வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 0772284235

(சி/9166)(7,12)



## வேலைக்கு ஆள்கள் தேவை

பிரபல காப்புறுதி கம்பனி ஒன்றுக்கு விற்பனை ஆலோசகர்கள், அணித்தலைவர்கள் ஆகிய பதவிகளுக்கு ஆண், பெண் இருபாலாரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

O/L தகைமை போதுமானதாகக் கருதப்படுகின்றது. நீங்கள் நினைப்பதற்கு மேல் உழைக்க அரியவாய்ப்பு. தவறவிடாதீர்கள்.

"நம்பி வாருங்கள் வெற்றி நிச்சயம்"

தொடர்புகளுக்கு :
077 8959103,077 4767320


## மரண அறிவித்தல்



### செல்வி ஜெயசோதி சின்னத்தம்பி

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், மகாஜனக் கல்லூரியடி, அம்பனையை வசிப்பிடமாகவும் ஏழாலை மேற்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி ஜெயசோதி சின்னத்தம்பி நேற்று (15.03.2012) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - தங்கப் பொன்னு தம்பதியரின் இளைய மகளும், செல்வராணி (மலேசியா), சிவநேசன் (மலேசியா), சற்குணசிங்கம் (அப்பு - சிறிநதியா நகைமாடம் முன்னாள் ஊழியர் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற நவரட்ணம் மற்றும் மேரி (மலேசியா), இரங்கநாயகி (ராதா) ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற மோகன் (மலேசியா) மற்றும் உஷா (சிங்கப்பூர்), குமார் (லண்டன்), கண்ணன், ராஜன், ரவி (மலேசியா), தர்ஷிகா ஆகியோரின் சிறியதாயும் நிஷாந்த் (HI TECH PHONE SHOP, Chunnakam), சுரேன் (SLRCS, முல்லைத்தீவு), நிரோஷன் (மாணவன்- யாழ். தொழிநுட்பவியற் கல்லூரி) ஆகியோரின் மாமியும், சானுஜனின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.03.2012) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"லக்சுமி வாசா",
ஏழாலை மேற்கு,
ஏழாலை.

தகவல்:
குடும்பத்தினர்.

### சைக்கிள் திருட்டு

நெல்லியடி லக்சுமி தியேட்டர் ஒழுங்கையில் உள்ள வீடொன்றில் பட்டப் பகல் நேரம் பெண்களுக்கான சைக்கிள் ஒன்று பூட்டு உடைக்கப்பட்டு திருடப்பட்டுள்ளது.

குறித்த பெண் குறிப்பிட்ட வீட்டின் முற்றத்தில் சைக்கிளை விட்டுப் பூட்டி பஸ்ஸில் செல்வதுண்டு. சம்பவ தினத்தன்றும் சைக்கிளை விட்டுப் பூட்டிவிட்டுச்சென்றுதிரும்பி வந்து பார்த்தபோது பூட்டியிருந்த சைக்கிள் திருடப்பட்டிருந்தது தெரிய வந்தது. (ம-8)

## வாராந்த நிகழ்வுகள்

வடமராட்சி, மார்ச் 16

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்தி வரும் வாராந்த ஆன்மிக நிகழ்வுகளின் வரிசையில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு 'வயலின் இசை' நடை பெறும்.

வயலின் வித்துவான் அ.ஜெயராமன் குழுவினர் வயலின் இசையை நிகழ்த்துவார்கள். (ம-8)

* * *

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் சுற்றாடலில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் நடைபெற்று வரும் வாராந்த நிகழ்வு வரிசையில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு 'மகாபாரதம்' தொடர் சொற்பொழிவு இடம்பெறும். இந்தச் சொற்பொழிவை பண்டிதர் பொன். சுகந்தன் நிகழ்த்துவார். (ம-8)


## லொறி விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Mitsubishi Canter No 43 xxxx லொறி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0778210166, 0779994912



## கணித வழிகாட்டல் கருத்தரங்கு

O/L, தரம் - 10 மாணவர்கள் கலந்து கொள்ளலாம்.

ஆசிரியர் - தலைநகர் பிரபல ஆசிரியர் S.K தளையரட்ணம் (B.V.I.School)

காலம் : ஞாயிறு (18.03.2012)

கருத்தரங்கு நடைபெறும் இடங்கள்


சூரியன் அக்கடமி - பண்டத்தரிப்பு
புவியியல் கல்லூரி - மூளாய்
தொடர்புகளுக்கு - 077 6775422,

விளைல்ஸ் - சுன்னாகம்
தொடர்புகளுக்கு - 077 6671023
ஆசிரியரின் தொடர்பு இலக்கம்
071 4106605



## இயேசு ஜீவிக்கிறார்

34 வது வருட சுவிசேஷ மாநாடு



## ஆசீர்வாத பெருவிழா!

தெய்வத்தின் திருப்பாதத்தில்

இம்முறை **யாழ்ப்பாணம் நகரசபை மைதானத்தில்**
(துரையப்பா மைதானம் அருகில்) (M.C GROUND)

காலம்:- **16, 17, 18 மார்ச் 2012** மாலை **5.00** மணி

செய்தி:- **M.R. இராஜேந்திரம்** அவர்கள் **C.V. இராஜேந்திரம்** அவர்கள்

அன்பின் வாசகர்களே! வானத்தையும் பூமியையும் படைத்த தெய்வம் மனித அவதாரம் எடுத்து, பிரம்ம புத்திரனாக, ஆண்டவராகிய இயேசு எனும் நாமத்தில் இரட்சகராக, மானிடனைத் தேடி பூமிக்கு வந்தார். இன்றும் அவர் ஜீவிப்பதினால் அந்த தெய்வம் உங்களை அரவணைக்க ஆவலோடு இருக்கிறார். எனவே சமாதானமற்ற உள்ளங்களுக்கு சமாதானத்தை அருளவும், தீராத நோய்கள், துன்பம், கண்ணீர் நிறைந்த வாழ்விலிருந்தும், இருள், பில்லிசூனியம், மாந்திரீகக் கட்டு, பிசாசின்பிடி, தீமையான பாவக் கட்டுகளிலிருந்தும் விடுதலை தரவும், நிம்மதி, ஆறுதல் அளிக்கவும் உங்களைத் தேடுகிறார். அவர் நாமத்தினால் மட்டுமே மனுக்குலத்திற்கு விடுதலை இருப்பதினால் ஜாதி, மத, இன, பாகுபாடின்றி உங்கள் வாழ்வு சுபீட்சம் அடைய அனைவரையும், அன்புடன் அழைக்கிறோம்.
இதுவே உங்கள் அற்புதத்தின், அதிசயத்தின் நாட்கள்! தெய்வீக சுகமளிக்கும் நாட்களை நழுவவிடாதீர்கள்.
தேவ கிருபை, அருள் பெற வாரீர்.

மைதானத்திலிருந்து பஸ் சேவை இலவசமாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

**34 வது வேதாகம கருத்தரங்கு!** பிரவேசம் இலவசம்!

காலம் -மார்ச் 13 முதல் 17ம் திகதி வரை நேரம் -காலை 9.00 - 1.00

இடம் -A.O.G. சபை, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்

For Information:- Jesus Lives Evangelical International Ministry
T.P. 2522608, Fax - 2525695, Web- jesuslivesk.com
Jaffna Contact- Rev. Rajasooriyar 0777238300, 0779946524, 0758487994, 0755048503


## மரண அறிவித்தல்

### ஈஸ்வரநாயகி வேல்முருகானந்தன்



கொல்லங்கலட்டி தெல்லிப்பழையைப்பிறப்பிடமாகவும் தொட்டிலடி சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட ஈஸ்வரநாயகி வேல்முருகானந்தன் (15. 03. 2012 ) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராஜகுணநாயகம்- புவனேஸ்வரி தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான அப்புத்துரை - தேவநாயகி தம்ப தியரின் மருமகளும் வேல் முருகானந் தனின் (முகாமையாளர் தெ.ப.நோ. கூ.சங்கம்) அன்பு மனைவியும், ஜெகநாதன், ஜெகநாயகி காலஞ்சென்ற விஜயநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஸ்ரீ ஜெயராஜா, ஜோக லக்சுமியின் மைத் துனியும் துவாரகன் ( யூனியன்ஸ் அசூரன்ஸ்) துஸ்யந்தி, கபிலன், விஸ்னு, மதுரா, அபிநயா, பிரி யங்கா ஆகியோரின் அன்புத்தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.03.2012) வெள்ளிக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் 2.00 மணியளவில் தகனக் கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தொட்டிலடி, சங்கானை. (15712) (7-12) குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் வீட்டுக்கிருந்திய அழைப்பும்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 15 ★ 11 ★ 1946 |  | 15 ★ 02 ★ 2012 |


### அமரர் பொன்னு செல்லத்துரை

எமது குடும்பத்தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (16.03.2012) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் அனைவரும் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கேவில்,
முள்ளியான் (C/9165)(6-7-8) குடும்பத்தினர்

# சுவிற்சர்லாந்தில் பயங்கர விபத்து



பெல்ஜியத்தில் இருந்து சுவிற்சர்லாந்துக்குச் சுற்றுலா சென்றிருந்த பாடசாலை மாணவர்களது பஸ் நேற்று முன்தினம் திரும்பி வரும் வழியில், நெடுஞ்சாலையில் விபத்துக்குள்ளாகியது.

ஜெனிவா,மார்ச்16

சுவிற்சர்லாந்துக்குச் சுற்றுலா சென்றிருந்த பெல்ஜியத்தைச் சேர்ந்த பஸ் திரும்பி வரும் வழியில் விபத்துக்குள்ளானதில் 28 பேர் பரிதாபமாக மரணமடைந்துள்ளனர். இவர்களுக்கு சுவிற்சர்லாந்து நாடாளுமன்றத்தில் நேற்று மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

பெல்ஜியத்தில் இருந்து சுவிற்சர்லாந்துக்குச் சுற்றுலா சென்றிருந்த பாடசாலை மாணவர்கள் அடங்கிய பஸ் நேற்று முன்தினம் திரும்பி வரும் வழியில், நெடுஞ்சாலையில் விபத்துக்குள்ளாகியது.

இந்த விபத்தில் 22 பள்ளிச் சிறுவர்கள், 4 ஆசிரியர்கள், 2 சாரதிகள் என மொத்தம் 28 பேர் பரிதாபமாக மரணமடைந்துள்ளனர்.

குறித்த பஸ்ஸில் மொத்தம் 52 பேர் பயணித்தனர் . விபத்தில் பெரும்பாலானோர் காயமடைந்துள்ளனர். பஸ்ஸின் இரு சாரதிகளும் சம்பவ இடத்திலேயே மரணித்துள்ளனர். விபத்து நிகழ்ந்த இடத்தில் 200க்கும் அதிகமான அவசரகால மீட்புப் பணியாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

மேலும் 12 முதலுதவிச் சிகிச்சை வாகனங்கள், 3 அவசரகால உலங்கு வானூர்திகளும் மீட்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டன.

இதேவேளை பெல்ஜியத்திலுள்ள குறித்த பாடசாலைக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

விபத்தில் மரண மடைந்த காயமுற்ற பிள்ளைகளின் பெற்றோர்கள் பெல்ஜியத்திலிருந்து இரு இராணுவ விமானங்கள் மூலம் சுவிற்சர்லாந்துக்கு அழைத்து வருவதற்கான முயற்சிகளையும் பெல்ஜியம் அரசு மேற்கொண்டுள்ளது. (ந)

## மீண்டும் சுனாமி



டோக்கியோ,மார்ச்16

ஜப்பானையே உலுக்கிய சுனாமி ஏற்பட்டு ஓராண்டு நிறைவடைந்துள்ள நிலையில், நேற்று மீண்டும் சுனாமி ஏற்பட்டதால் மக்கள் அதிர்ச்சியில் உறைந்துள்ளனர்.

ஜப்பானின் வடபகுதியில் உள் ஹொக்காய்டோ தீவின் கடற்கரை நகரான குஷிரோ நகருக்குத் தென் பகுதியில் நேற்று 6.8 ரிச்டர் புள்ளி அளவில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. இதையடுத்து கடலில் 50 சென்ரிமீற்றர் உயரத்துக்கு மிகச் சிறிய அளவில்சுனாமியும் உருவானது. இந்த நிலநடுக்கத்தால் சேதம் ஏதும் ஏற்படவில்லை எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## 670 மரண தண்டனை

தெஹ்ரான்,மார்ச்16

ஈரானில் கடந்த 2011 ஆம் ஆண்டில் மட்டும் 670 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. இதில், டிசெம்பரில் மட்டும் 421 பேருக்கு இந்தத் தண்டனை நிறைவேறியுள்ளது.இந்தத் தகவல் ஜெனிவாவில் நடைபெறும் ஐ.நா. சபை மனித உரிமைகள் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

இவர்களில் பெரும்பாலானோர் போதைப் பொருள் சம்பந்தமான வழக்குகளிலும், 20 சதவீதம் பேர் இஸ்லாம் மதத்துக்கு விரோதமான செயல்களிலும் குற்றஞ் சாட்டப்பட்டவர்களாவர். (ந)

## நிஜாத்துக்கு நெருக்கடி



தெஹ்ரான்,மார்ச்16

ஈரானின் பொருளாதாரத்தை சீர்குலைத்துவிட்டார் எனக்கூறி அந்தநாட்டு நாடாளுமன்றத்தில் அதிபர் முகமது அகமது நிஜாத் மீது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கேள்விக் கணைகளைத் தொடுத்துள்ளனர்.

ஈரான் நாடாளுமன்றக் கூட்டம் தெஹ்ரானில் கூடியது. இதில்முதல்நாள் கூட்டத்தில் கன்சர்வேடிவ் கட்சியின் தலைவர் அலிமொதாஹரி , 10 கேள்விகளை முன்வைத்து வாசித்தார். அதில் நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைக்கும் வகையில் ஆட்சி நடத்தியது, தலைமை மத குருவின் வழிகாட்டுதலைப் பின்பற்றாதது உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகள் குறித்துப் பேசினார்.

இதனால் அதிபர் முகமது அகமது நிஜாத் , நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியினரால் கடும் நெருக்கடிக்கு ஆளானார்.



இந்தோனேஷிய தலைநகர் ஜகார்த்தாவில் பெற்றோல் விலை உயர்வைக் கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் பொலிஸாரால் தாக்கப்படுகின்றனர்.

## அச்சுப் பதிப்பு நிறுத்தம்

244 வருடங்கள் தொடர்ச்சியாக ஆங்கில மொழியில் ‘என்சைக்ளோபீடியாவை’ வெளியிடும் ஒரே நிறுவனம் பிரிட்டானிக்கா.

244 வருடங்களாக அச்சுப்பதிப்பை வெளியிட்டு வந்த ‘என்சைக்ளோபீடியா’ நிறுவனம் தற்போது அதை நிறுத்துவதாக அறிவித்துள்ளது.

உலகின் பழைமையானதும் 1766 முதல் 2010 வரை 244 வருடங்கள் தொடர்ச்சியாக ஆங்கில மொழியில் என்சைக்ளோபீடியாவை வெளியிடும் ஒரே நிறுவனமுமான பிரிட்டானிக்கா 1950 முதல் 1960 வரை மிகவும் பிரபலமான கலைக்களஞ்சிய நூலாக சிறப்புப் பெற்றிருந்தது.

அந்தக் காலப்பகுதியில் இந்த நூலை வைத்திருப்பவர்கள் பெருமைக்குரியவர்களாகக் கருதப்பட்டனர்.

தற்போது இணையத்தின் அசுர வளர்ச்சி மற்றும் விக்கிப்பீடியா போன்ற தளங்களின் வருகையால் பிரிட்டானிக்கா கலைக்களஞ்சியத்தின் விற்பனை குறைந்துள்ளது.

இதனால் 2010 ஆம் ஆண்டு வெளிவந்த பதிப்பே இதன் இறுதி அச்சுப் பதிப்பெனத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் பிரிட்டானிக்கா கலைக்களஞ்சியத்தின் இணையப் பதிப்பு தொடர்ந்து வெளிவரும் எனவும் கல்வி தொடர்பான தயாரிப்புக்களில் கவனம் செலுத்த இருப்பதாகவும் இந்த நிறுவனத்தின் அதிபர் தெரிவித்துள்ளார். (ந)

## 110 ஆக உயர்ந்தது இறப்பு

டாக்கா,மார்ச்16

பங்களாதேஷில், நேற்று முன்தினம் நிகழ்ந்த படகு விபத்தில், உயிரிழந்தோரின் எண்ணிக்கை 110 ஆக அதிகரித்துள்ளது. மேலும் இறப்பு எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது.

பங்களாதேஷ், தலைநகர் டாக்காவின் தெற்கில், மேக்னா ஆற்றில் கடந்த திங்கட்கிழமை அதிகாலையில், 300 பயணிகளுடன் சென்றுகொண்டிருந்த படகு ஒன்று, மற்றொரு படகு ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகி கடலில் மூழ்கியது.

இதில், நேற்றுவரை பல சடலங்கள் ஆற்றில் இருந்து மீட்கப்பட்டன. இதன்படி உயிரிழந்தோர் எண்ணிக்கை 110 ஆக அதிகரித்துள்ளது. 30 பேர் ஏற்கனவே உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.



300 பயணிகளுடன் சென்றுகொண்டிருந்த படகு ஒன்று, மற்றொரு படகு ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகி கடலில் மூழ் கியது.

இதேவேளை காணாமல் போனோரைத் தேடும் பணி தொடர்ந்தும் இடம்பெற்று வருகிறது. இந்த விபத்தில், இரு குடும்பத்தில் உள்ள அனைவரும் இறந்து விட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. அவர்களில் நான்கு குழந்தைகளும் உள்ளடங்குகின்றனர்.

## இத்லிப் நகர் சிரிய படை வசம்

சிரியாவில் அரச எதிர்ப்புப் படையின் கட்டுப்பாட்டில் இருந்த இத்லிப் பகுதியை அந்தநாட்டு இராணுவம் முழுமையாகக் கைப்பற்றியுள்ளது.

இரு தரப்புக்கும் இடையில் கடந்த நான்கு நாள்களாக நடந்த கடுமையான மோதலைத் தொடர்ந்து அரச படை அந்தப் பகுதியைக் கைப்பற்றியது.

இதனிடையே சிரிய அரச படையிடம் கைதான எதிர்ப்பாளர்கள் மீது பல்வேறுபட்ட துன்புறுத்தல்கள் நிகழ்த்தப்பட்ட தகவல் கிடைத்துள்ளது என சர்வதேச மன்னிப்புச் சபை நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

சிரியாவில் இருந்து தப்பி ஜோர்தானுக்கு வந்த அகதிகளின் மூலமே இந்தத் தகவல்கள் திரட்டப்பட்டதாக மன்னிப்புச் சபை கூறியுள்ளது.

## தேர்தல் திகதி அறிவிப்பு

சிரிய நாடாளுமன்றத் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி எதிர்வரும் மே மாதம் 7 ஆம் திகதி தேர்தல் நடைபெறும் என்று அந்நாட்டின் நாடாளுமன்ற இணையத்தளம் அறிவித்துள்ளது. எனினும் இந்த அரசியல் சீர்திருத்தத்துக்கு ஜனாதிபதி பஷர் அல் அசாத்துக்கு எதிராகப் போராடும் எதிர்ப்பாளர்கள் ஆதரவளிக்கவில்லை. ஜனாதிபதி தனது அதிகாரங்களை கையளிக்க வேண்டும் என எதிர்ப்பாளர்கள் தொடர்ந்தும் கோரி வருகின்றனர்.

# லிபியாவில் மனித உரிமை மீறல்

## விசாரணைக்கு ஐ.நா.உத்தரவு

திரிபோலி,மார்ச் 16

லிபியாவில் கடந்தாண்டு ஜனாதிபதி கடாபிக்கு எதிராக இடம்பெற்ற புரட்சியின் போது ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். இது குறித்து விசாரணை நடத்துமாறு ஐ.நா உத்தரவிட்டுள்ளது.

எகிப்தைத் தொடர்ந்து அதன் அண்டை நாடான லிபியாவிலும் கடந்தாண்டு பெப்ரவரி மாதம் முதல் மக்கள் புரட்சி ஏற்பட்டது. இதன் போது ஜனாதிபதி கடாபிக்கும், எதிர்ப்பாளர்களுக்கும் இடையே ஏற்பட்ட கடும் சண்டையில் இரு தரப்பிலும் பல்வேறு மனித உரிமை மீறல்கள் நடத்தப்பட்டதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்தன.

இதனையடுத்து லிபியாவில் நிகழ்ந்த மனித உரிமை மீறல்கள் குறித்து ஐ.நா தரப்பில் சர்வதேச விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இந்தக் குழு தனது அறிக்கையை கடந்த 9ஆம் திகதி வெளியிட்டது. அத்துடன் லிபியாவில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டோரின் பெயர்கள் அடங்கிய இரகசிய அறிக்கை ஒன்றை ஐ.நா.விடம் சமர்ப்பித்தது.



இந்த அறிக்கையில், கடாபி தரப்பு இராணுவத்தால் சர்வதேச அளவில் குற்றங்கள், மனிதாபிமானத்துக்கு எதிரான போர்க் குற்றங்கள் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று கடாபியின் எதிர்த்தரப்பும் (நேட்டோ படை) சர்வதேச சட்டங்களை மீறிய குற்றங்கள், போர்க் குற்றங்களில் ஈடுபட்டன எனவும் கூறப்பட்டுள்ளது.

இந்த நிலையில் விசாரணைக் குழுவின் தலைவரும், கனடா நாட்டு நீதிபதியுமான பலிப் கிர்ஸ்ச் இது குறித்து அளித்த பேட்டியில், நேட்டோவின் உள்நோக்கமில்லாத தாக்குதலில் 60 பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர், 55 பேர் காயம் அடைந்துள்ளனர். அதனால் நேட்டோ தாக்குதல் குறித்து மேலும் விசாரிக்கப்பட வேண்டும் என குழு பரிந்துரைத்துள்ளது- என்றார்.

அறிக்கை குறித்து ஐ.நா செய்தித் தொடர்பாளர் மார்ட்டின் நெசிர்க்கி , லிபிய அதிகாரிகள் மனித உரிமை மீறல் பிரச்சினைகளை கவனிப்பதற்கான ஓர் உறுதியான தளத்தை இந்த அறிக்கையும் அதன் பரிந்துரையும் ஏற்படுத்தித் தந்துள்ளன என்று பொதுச் செயலர் பான் கீ மூன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்- என்றார்.

(ந)

# இனியும் வளர மாட்டேன்



எட்டு அடி 3 அங்குலம் உயரமாக இருந்த கோசெனின் இந்த வளர்ச்சிக்கு பட்யூட்டரி சுரப்பியில் ஏற்பட்டுள்ள கட்டிதான் காரணம்

உலகின் மிக உயரமான மனிதராகக் கின்னஸ் சாதனை படைத்தவரின் வளர்ச்சிக்கு காரணமான கட்டி தற்போது அகற்றப்பட்டுள்ளது. அதனால் இவர் இனி வளர வாய்ப்பில்லை என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டில் உலகின் உயரமான மனிதராக கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பெற்ற துருக்கி நாட்டைச் சேர்ந்த சுல்தான் கோசென். இவர் 'அக்ரோமிகள்' என்ற வளர்ச்சி நோயின் காரணமாக பிறந்தது முதல் இன்றுவரை வளர்ந்து கொண்டே இருந்துள்ளார்.

எட்டு அடி 3 அங்குலம் உயரமாக இருந்த கோசெனின் இந்த வளர்ச்சிக்கு பட்யூட்டரி சுரப்பியில் ஏற்பட்டுள்ள கட்டிதான் காரணம் என்று கண்டறியப்பட்டது.

இதனையடுத்து சுவீடன் நாட்டில் தயாரான ஒரு மருத்துவக் கருவியை அறுவைச் சிகிச்சையின் மூலம் மருத்துவர்கள் கோசெனின் உடம்புக்குள் செலுத்தி பட்யூட்டரி சுரப்பியில் உள்ள கட்டியை அகற்றியுள்ளனர். இதனால் இவர் இனி வளர வாய்ப்பில்லை என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

கோசென் தற்போது வளரவில்லை என்பதை வெர்ஜினியா பல்கலைக்கழக அதிகாரிகளும் உறுதி செய்துள்ளனர். இதனால் இந்தச் சிகிச்சை குறித்த விவரங்களும் கின்னஸ்புத்தகத்தில்இடம் பெற்றுள்ளன எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ந)

# ஆப்கனைவிட்டு கனடாப் படை வெளியேறாது

ஆப்கனில் உள்ள தமது நாட்டுப் படைகளைத் திருப்பி அழைக்கப் போவதில்லை என்று கனடாவின் பாதுகாப்பு அமைச்சர் பீற்றர் மெக்கே,தெரிவித்துள்ளார். ஆப்கானிஸ்தானில் கடந்த மாதம் பல மோசமான சம்பவங்கள் நடந்துள்ளன. ஆப்கானியர்களின் திருமறையைத் தீயிட்டுக் கொளுத்தியதற்காக நேட்டோ படையினரை ஆப்கன் வீரர்கள் சுட்டுக் கொன்றனர். இதற்கு பின்பு ஆப்கானிஸ்தான் பொதுமக்கள் பதினாறு பேரை அமெரிக்க பாதுகாப்புப்படை வீரர் ஒருவர் சுட்டுக் கொன் றுள்ளார். இவ்வாறு ஆப்கானிஸ்தானுக்கும், நேட்டோ படை களுக்கும் இடையே தொடர்ந்து மோதல்கள் நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன. இந்த நிலையில் குறித்து கனடாவின் பாதுகாப்பு அமைச்சர் பீற்றர் மெக்கே மேலும் கூறியதாவது:-

எதிர்வரும் 2014ஆம் ஆண்டு வரை 950 கனடா படை வீரர்கள் ஆப்கன் இராணுவத்துக்கு பயிற்சி அளிப்பர். இவர்கள் காபூலிலும் வேறு இரண்டு இடங்களிலும் தங்கி பயிற்சி அளிக்க உள்ளனர் .

கனடா இராணுவத்தின் பாதுகாப்புஏற்பாடுகளை அதிகரித்தும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மூலமாக ஆப்கானியர்களைத் தாக்குதலில் இருந்து காப்பாற்ற முடிவு செய்துள்ளோம்.

அத்துடன் எமது நாட்டு இராணுவ வீரர்கள் ஆப்கனில் நிரந்தரமாகத் தங்குவதற்கு ஏற்ற சூழ்நிலையையும் ஏற்படுத்தப் போகின்றோம்- என்று தெரிவித்துள்ளார். (ந)


## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில்
03.02.1941

விண்ணில்
08.03.2010



திருமதி ஜெயதேவி வேலாயுதம் (தேவி ரீச்சர்)

திதி: – நவமி (16.03.2012)

அன்பின் சுடராய் பாசத்தின் இருப்பிடமாய்
எம் உள்ளத்தில் வீற்றிருக்கும் அன்புத் தேவியே
ஆண்டு இரண்டு சென்றனவே எமை விட்டு நீர் சென்று
நீங்கள் இல்லாத வாழ்வை நினைத்துப் பார்க்கமுடிகிறதா?
துன்பக் கடலில் மூழ்கியே துவண்டு துடிக்கிறேன் உமை நினைத்து
ஆற்றுவார் யாரப்பா- ஆறுதல் ஏதப்பா என் அன்புத் தெய்வமே
உங்கள் ஆத்மா நிரந்தர சாந்தியடைய
நந்தவனத்து முருகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

'கணபதி', இரும்பு மதவடி,
வதிரி, கரவெட்டி.
021 226 2446 (12691) (2-6-7)

உங்கள் பிரிவுத்துயரில் வாடும்
வேலாயுதம் (கணவர்) மற்றும் குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு
23.10.1952

உதிர்வு
15.02.2012



அமரர் கந்தையா சண்முகராசா

(உரிமையாளர் - அம்பாள் பல்பொருள் வாணிபம், வீரமாகாளி அம்மன் கோயிலடி)

அன்பிலே தெய்வமாய் அறிவிலே ஆசானாய்
பண்புடனே எமை வளர்த்து பார் புகழ வாழ வைத்து
இன்பமுடன் நாம் வாழ எல்லாம் எமக்களித்தாய்
நெஞ்சிருக்கும் வரைக்கும் உம் நினைவாய் வாழ்ந்திடுவோம்.

கடந்த 15.02.2012 சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் இறுதிக்கிரியைகளில் நேரில் வந்து கலந்துகொண்டவர்களுக்கும், தொலைபேசி, தந்தி மூலம் அனுதாபச் செய்தியினைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (16.03.2012) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

34/1, இராமநாதன் வீதி,
கலட்டி, யாழ்ப்பாணம். (ச/9156) (2-6-7)

- குடும்பத்தினர்.

# ஈழத் தமிழரின் நலனில் இந்திய ஆதரவு அவசியம்

## ராமதாஸ் கருத்து



திண்டிவனம், மார்ச் 16
இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியாதான் ஐ.நாவில் கொண்டு வந்திருக்க வேண்டும். இருந்த போதும் அமெரிக்காவே அதனைக் கொண்டு வந்துள்ளது. எனவே இந்தத் தீர்மானத்துக்கு இந்தியா ஆதரவளிக்க வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் தெரிவித்தார்.

இதுகுறித்து திண்டிவனத்தில் செய்தியாளர்களுக்கு நேற்று அவர் அளித்த பேட்டியில் தெரிவித்ததாவது:

இலங்கையில் இறுதிக் கட்டப் போரில் நடைபெற்ற கொடூரங்கள் குறித்தும், பிரபாகரனின் இளைய மகன் பாலச்சந்திரன் மற்றும் தமிழர்கள் சிங்களவர்களால் கொல்லப்பட்டது குறித்தும் பிரிட்டன் தொலைக்காட்சியான சனல் 4 தகவல்களை ஒளி பரப்பியுள்ளது.

அதைப் பார்த்த அதிகமானோர் கதறிக் கொண்டே என்னிடத்தில் தொலைபேசியில் பேசினார்கள். இது உலகத் தமிழர்கள் அனைவரையும் கண்ணீர் வடிக்கச் செய்துள்ளது.

இந்த நேரத்தில் உரிய நடவடிக்கைகளை எடுக்காமல் முன்னாள் முதலமைச்சரும், தற்போதைய முதலமைச்சரும் நீலிக்கண்ணீர் வடிக்கின்றனர். இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஐ.நா.வில் அமெரிக்காவே கொண்டுவந்துள்ளது. இந்தத் தீர்மானத்தை இந்தியா கொண்டு வந்திருக்க வேண்டும்.

அப்படிச்செய்திருந்தால் இந்தியா உலக அரங்கில் உயர்ந்திருக்கும். இந்தத் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும். இலங்கையில் தமிழர்களும், சிங்களவர்களும் சேர்ந்து வாழ முடியாது என்பது பலமுறை நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே அங்கு கிழக்கு, வடக்குப் பகுதிகளை ஒன்றிணைத்து தனி ஈழம் உருவாக்க வேண்டும். அங்கு நடந்த போர்க் குற்றங்கள் குறித்து பன்னாட்டு விசாரணை நடத்தப்பட வேண்டும். - என்றார் அவர். (வ)

## இந்தியா - வங்கதேசத்துக்கு விரைவில் ரயில் சேவை



இந்தியாவிலிருந்து வங்கதேசத்துக்கு புதிய ரயில் ஒன்றை இந்திய ரயில்வே துறை அறிமுகம் செய்துள்ளது.

இதுகுறித்து ரயில்வே துறை அமைச்சர் தினேஷ் திவேதி தெரிவித்ததாவது:

இந்த புதிய ரயில் திரிபுரா தலைநகர் அகர்தலாலில் இருந்து வங்கதேசத்தில் உள்ள அகுரா நகர்வரை செல்லும். இதன் மூலம் இந்தியா - வங்கதேசம் இடையே பயணிகள் போக்குவரத்தை அதிகப்படுத்துவதோடு இருநாட்டுக்கும் இடையே வர்த்தகத்தை பெருக்கவும் உதவியாக அமையும்- என்றார் அவர்.

## எல்லைப் பாதுகாப்புப் படையினர் மிதிவெடியில் சிக்கிச் சாவு

**இங்கு 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதுகாப்புப் பணியில் இருந்தனர்.**

சத்தீஸ்கர் மாநிலத்தில் நக்சல் பயங்கரவாதிகளின் மிதிவெடித் தாக்குதலில் 3 எல்லைப் பாதுகாப்புப் படையினர் உயிரிழந்தனர். இந்தச் சம்பவம் அந்த மாநிலத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சத்தீஷ்கர் மாநிலம் ராய்ப்பூரிலிருந்து கான்கர் மாவட்டத்தை நோக்கி வாகனம் ஒன்றில் எல்லைப் பாதுகாப்புப்படையைச் சேர்ந்த தலைமைக் காவலர் மற்றும் இரு உதவி காவலர்கள் உள்பட இராணுவப்படை வீரர்கள் ரோந்துப் பணிக்காகச் சென்று கொண்டிருந்தனர்.

ஈரிக்குப்பட்டா கிராமம் அருகே வந்தபோது நக்சல்கள் புதைத்து வைத்திருந்த மிதிவெடித் தாக்குதலில் மூன்று எல்லைப் பாதுகாப்புப் படை வீரர்கள் உயிரிழந்தனர். இந்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை 6.50 மணியளவில் இடம்பெற்றது. இதனையடுத்து உடனடியாக சம்பவ இடத்துக்கு பாதுகாப்புப் படையினர் விரைந்து சென்று, மீட்புப் பணிகளை மேற்கொண்டனர்.

கான்கர் பகுதி நக்சல்கள் பாதிப்புக்குள்ளான பகுதி என்பதால், இங்கு 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதுகாப்புப் பணியில் இருந்தனர். எனினும் நேற்று முன்தினம் நடந்த இந்த சம்பவம் எல்லைப் பாதுகாப்பு படையினரிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (வ)

## பட்டாசுக் குடோனில் வெடிவிபத்து ஆலை உரிமையாளர் சாவு

சேலம் அருகே குடோனில் வைக்கப்பட்டிருந்த பட்டாசுகள் வெடித்துச் சிதறியதில் பட்டாசுத் தொழிற்சாலை உரிமையாளர் உடல் சிதறி உயிரிழந்தார்.

சேலம் மாவட்டம் ஓமலூர் சுகந்த நகரில் சின்னப்பன் (வயது 75) என்பவருக்குச் சொந்தமான பட்டாசுத் தொழிற்சாலை உள்ளது. அரசு அனுமதியுடன் 10 ஆண்டுகளாக செயற்பட்டு வரும் இந்தத் தொழிற்சாலையில் பல்வேறு வகையான பட்டாசுகள் தயாரிக்கப்படுகின்றன. இங்கு தயாரிக்கப்படும் பட்டாசுகள் காட்டுப்பகுதியில் உள்ள குடோனில் பாதுகாப்பாக வைக்கப்படும்.

இந்த நிலையில் குறைந்த அளவு பட்டாசுகளே குடோனில் இருந்தன. இந்நிலையில் நேற்றுமுன்தினம் காலை இங்கு வந்த சின்னப்பன் கரி மருந்தை பாதுகாப்பாக எடுத்து வைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார். அப்போது திடீரென பட்டாசுகள் தீப்பிடித்து வெடித்துச் சிதறின. இதில் சின்னப்பன் உடல், கை, கால்கள் என துண்டு துண்டாகி உடல் சிதறி இறந்தார். குடோன் கட்டடம் தூள்தூளாக சிதறியது. இதுகுறித்து தகவலறிந்த ஓமலூர் தீயணைப்புத் துறையினர் சம்பவ இடத்துக்குச் சென்று தீயை அணைத்தனர். இந்த விபத்துக்கான காரணம் குறித்து ஓமலூர் டீஎஸ்பி முத்துகருப்பன், வருவாய்த் துறையினர் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.



இந்தியாவுக்கு வருகை தந்த, ஜப்பான் முன்னாள் பிரதமர் யோஷிரோ மோரி டில்லியில், பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்தார். (வ)

## நளினிக்கு முதல் வகுப்பு நீதிமன்றம் உத்தரவு



சென்னை, மார்ச் 16
இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்பட்டு ஆயுள் தண்டனை அனுபவித்து வரும் நளினிக்கு வேலூர் பெண்கள் சிறைச்சாலையில் முதல் வகுப்பு அறை ஒதுக்குமாறு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ராஜீவ் கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு பின்னர் இந்திய ஜனாதிபதியின் கருணையால் ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டுள்ள நளினி பட்டதாரியாவார். இவர், தான் ஒரு பட்டதாரி என்ற அடிப்படையில் தனக்கு முதல் வகுப்பு அறை ஒதுக்கக் கோரி உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார். மனுவை விசாரித்த நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.(வ)

## நித்தியானந்தாவின் முன்னாள் உதவியாளர் கைது



நித்தியானந்தா சுவாமியின் முன்னாள் உதவியாளர் லெனின் கருப்பனை குற்றப்புலனாய்வுப் பிரிவு பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது:

கடந்த சில மாதங்களுக்கு முன்பு நித்தியானந்தா ஆசிரமம் சார்பில் சென்னை பொலிஸ் ஆணையாளர் அலுவலகத்தில் பரபரப்பான முறைப்பாடு ஒன்று கொடுக்கப்பட்டது.

நித்தியானந்தா, ரஞ்சிதா தொடர்பான ஆபாச காணொளிகளை வெளியிடாமல் இருக்க ரூ.60 கோடி கேட்டு நித்தியானந்தாவை மிரட்டியதாகவும், இறுதியில் ரூ.45 லட்சத்தை மிரட்டல் விடுத்தவர்கள் பறித்துக் கொண்டனர் என்றும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் குற்றச் செயல்கள் ரீதியாக குற்றம் சாட்டப்பட்ட லெனினின் பிணை மனு ஏற்கனவே நிராகரிப்புச் செய்யப்பட்டது. அன்று முதல் தலைமறைவாக இருந்து வந்த லெனின் கருப்பன் தற்போது கைது செய்யப் பட்டுள்ளார்.

லெனின் கைதால் இந்த வழக்கில் பல முக்கிய திருப்பங்கள் ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (வ)

## பொலிஸார் மீது நடவடிக்கை

டில்லி, மார்ச்.16
ராம்தேவ் கூட்டத்தில் தடியடி நடத்திய பொலிஸார் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஜூன் மாத ஆரம்பத்தில் புதுடில்லி ராம்லீலா மைதானத்தில் பாபா ராம்தேவ் போராட்டம் நடத்திய போது, நள்ளிரவில் அவரது ஆதரவாளர்களை பொலிஸார் வெளியேற்றினர். அப்போது பொலிஸார் சிலரும், அதிகாரிகளும் அத்துமீறி நடந்து கொண்டதாக உச்ச நீதிமன்றம் கடந்த பெப்ரவரி மாதம் 23ஆம் திகதி அளித்த தீர்ப்பில் சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துமீறி நடந்து கொண்டவர்களை அடையாளம் காண ஒரு குழுவை டில்லி பொலிஸ் அமைத்துள்ளது. அவர்களது விசாரணை முடிந்து, தவறு செய்த பொலிஸார் மீது எந்தவித மான நடவடிக்கை எடுக்கப் பரிந்துரைக்கப்படுகிறதோ, அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும். உச்ச நீதி மன்றத்தின் உத்தரவுப்படி இந்த வழக்கில் கடந்த 9 ஆம் திகதி புதிதாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது - என்றார். (வ)

## மகாராஷ்டிராவில் பன்றிக் காய்ச்சல்

புனே,மார்ச்.16
மகாராஷ்டிரா மாநிலம் புனே நகரில் பன்றிக் காய்ச்சல் நோய் காரணமாக 12 பேர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்க ளில் இருவரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

மேலும் பன்றிக் காய்ச்சல் நோய் பரவுவதைத் தடுப்பது குறித்த தேசிய தொற்று நோய் தடுப்பு நிலையத்தினர் தீவிர நடவடிக்கை எடுத்து வருவதாக மாநில சுகாதாரத்துறை அலுவலர் பிரதீப் அவாதே தெரிவித்துள்ளார்.

பன்றிக்காய்ச்சல் நோயால் பாதிக்கப் பட்டவர்கள் மாநிலத்தின் பல்வேறு மருத்துவமனைகளில் உள்ள தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கடந்த 2009 ஆம் ஆண்டு முதன் முதலாக புனே நகரில் பன்றிக்காய்ச்சல் நோய் பரவியது என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## உத்தரப் பிரதேச முதல்வராக அகிலேஷ் பதவியேற்றார்



உத்தரப்பிரதேச மாநிலத்தின் 33 ஆவது முதல்வராக அகிலேஷ் யாதவ்(வயது 38) நேற்றுப் பதவியேற்றார்.

உத்தரப்பிரதேச சட்டசபைத் தேர்தலில் முலாயம் சிங் யாதவின் சமாஜ்வாடிக் கட்சி 224 தொகுதிகளில் வெற்றி பெற்று தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சியைப் பிடித்தது.

முலாயம்சிங் யாதவின் மகனும் நாடாளுமன்ற உறுப்பினருமான அகிலேஷ் யாதவ் அம்மாநில முதலமைச்சராகத் தெரிவு செய்யப்பட்டார். அவர் நேற்று உத்தரப் பிரதேச முதல்வராக அதிகாரப்பூர்வமாக பதவியேற்றார்.

அவருக்கு உத்தரப்பிரதேச ஆளுநர் ஜோஷி பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். இதன்மூலம் அகிலேஷ் யாதவ் உத்தரப் பிரதேசத்தின் முதலாவது இளம் வயது முதல்வர் என்ற பெருமையையும் பெற்றுள்ளார். (வ)



# உங்கள் சுவாசம் மூலம் கைப்பேசியை சார்ஜ் செய்யலாம்





முகத்தில் அணியக் கூடியதும், நாம் சுவாசிக்கும் போது அந்த சுவாசத்தை மின்சக்தியாக மாற்றுவதுமான உபகரணம் உருவாக்கப் பட்டுள்ளது.

மக்களின் அன்றாட வாழ்க்கையில் இன்றியமையாத பொருளாக வலம் வந்து கொண்டிருக்கும் கைப்பேசியை மின்னேற்றம் செய்வதற்கு நவீன இலத்திரனியல் கருவி ஒன்று அறிமுகப்படுத் தப்பட்டுள்ளது. அதாவது முகத்தில் அணியக்கூடியதும், நாம் சுவாசிக்கும்போது அந்த சுவாசத்தை மின்சக்தியாக மாற்றுவதுமான உபகரணம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நாம் விழித்திருக் கும் போதும் தூங்கும்போதும் கைப்பேசியை மின்னேற்றம் செய்ய முடியும் என்பது விசேட அம்சமாகும்.

பிரேசிலைச் சேர்ந்த ஜோகோ பவுலோ லமோக்லியா என்பவரால் உருவாக்கப்பட்ட இந்த உபகரணமானது கடுமையான வேலைகளை செய்யும் போது அதிகளவு மின்சக்தியை வெளிவிடவல்லது.

அத்துடன் வாரத்தில் ஏழுநாற்களும் 24 மணி நேரமும் இதனை பயன்படுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. மார்ச் 15ம் திகதியிலிருந்து சந்தைக்கு வந்துள்ள இந்த உபகரணத்தின் பெறுமதி 60 தொடக்கம் 70 அமெரிக்க டொலர்கள் வரை இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பழங்களைக் கண்டறியும் ஸ்கானர்

பொதுவாக விற்பனை நிலையங்களில் உள்ள பொருள்களின் விலையை அல்லது பெறுமதியை விரைவாக அறிந்து கொள்ள பார்கோட் ஸ்கானர்கள் பயன்படுத்தப்படும்.

இவை பொருள்களில் உள்ள பார்கோட் இலக்கங்களை அறிந்து அதிலுள்ள விலை உட்பட்ட விவரங்களைத் தெரியப்படுத்தும்.

ஆனால் தற்போது ரொசிபா நிறுவனமானது பார்கோட்களை பயன்படுத்தாது பழங்களை நேரடியாகவே ஸ்கான் செய்து அவற்றின் விவரங்களை அறியும் வகையில் புதிய ஸ்கானர் ஒன்றை உருவாக் கியுள்ளது.

இந்த ஸ்கானரானது பழத்தின் பருமன், வடிவம், நிறம் போன்றவற்றை கணினியில் சேமிக்கப்பட்டிருக்கும் தரவுத்தளத்துடன்(Database) பரிசீலனை செய்வதன் மூலம் சிறப்பாகச் செயற்படுகின்றது.



# உள்ளடக்கங்களை அழிப்பதற்குரிய போட்டோ கொப்பி இயந்திரம்

இதுவரை வெற்றுத் தாள்களில் பிரதியெடுப்பதற்காக போட்டோக் கொப்பி இயந்திரம் பயன்படுத்தப்பட்டு வந்தது. தற்போது சற்று உயர் தொழில்நுட்பத்தின் மூலம் போட்டோ கொப்பி எடுத்த தாளில் காணப்படும் உள்ளடக்கங்களை அழிப்பதற்குரிய போட்டோக் கொப்பி இயந்திரத்தை Toshiba நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

தற்போது காணப்படும் எழுத்துக்களை அழிக்கும் அல்லது மறைக்கும் போல் பொயின் பேனாக்களின் தொழில்நுட்பத்திலேயே இந்த இயந்திரம் அமைக்கப்பட்டுள்ளது, எனினும் விசேடமாக வெப்பத்தின் மூலம் தாளை உலர்த்தும் தொழில்நுட்பமும் உள்ளடக்கப் பட்டுள்ளது.

பிரதியெடுத்தல், அழித்தல் எனும் இரண்டு வேலைகளையும் செய்யவல்ல இந்த இயந்திரத்தின் மூலம் மேலதிகமாக நீல நிறத்தில் பிரதி செய்துகொள்ள முடியும்.

எனினும் விரைவில் ஏனைய வர்ணங்க ளையும் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று Toshiba நிறுவனம் உறுதியளித்துள்ளது.

# விண்வெளி ஓடங்களில் எரிபொருள்கள் நிரப்பும் ரோபோக்கள்

இன்று பூமியில் அதிசயப்படத்தக்க வகையில் மனிதர்களுக்கு உறுதுணையாக வேலைகளைச் செய்யும் ரோபோக்கள் விரைவில் விண்வெளியிலும் மனிதனுக்கு துணையாகச் செல்லவுள்ளன.

தற்போது புகைப்படங்கள் எடுப்பதற்காக விண்வெளியில் ரோபோக்கள் பயன்படுத்தப் படுகின்ற போதிலும் அவை மனித உருவத்தை ஒத்திருப்பதில்லை.

ஆனால் அமெரிக்காவின் விண்வெளி நிறுவனமான நாசா விண்வெளி ஓடங்களில் எரிபொருள்களை மீள்நிரப்பும் நோக்கத்துக் காக முதன்முறையாக ரோபோக்களைப் பயன்படுத்துவது பற்றிய பரிசோதனை ஒன்றை நிகழ்த்தியுள்ளது.

அத்துடன் அவற்றின் திருத்த வேலை களிலும் இந்த ரோபோக்களை பயன்படுத் துவது குறித்த நோக்கத்தையும் கொண் டுள்ளது.

Robotic Refueling Mission(RRM] என்று பெயரிடப்பட்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தத் திட்டத்தின் மூலம் உருவாக்கப்படும் ரோபோக்கள் 250 கிலோகிராம் நிறையைக் கொண்டுள்ளதுடன் 83 X 109 X 114 cm என்ற அளவிடைக்கு அமைவாகவும் உருவாக் கப்பட்டுள்ளன.

ஒரு தடவையில் தமக்குள் 1.7 லீற்றர் எரிபொருளை எடுத்துச் செல்லக்கூடிய இந்த ரோபோக்களின் பரிசோதனை 2013 ஆம் ஆண்டு வரையும் தொடரும் என நாசா தெரிவித்துள்ளது.



# கூகுள் பிளஸை தமிழில் மாற்றுவதற்கு


இன்றைய உலகில் மிக வேகமாக வளர்ந்து வரும் சமூக இணையத்தளமான கூகுள் பிளஸ் தற்பொழுது 60 மொழிகளில் கிடைக்கின்றது.




குறிப்பாக தமிழ் மொழியில் கிடைக் கின்றது. இதனைப் பெறுவதற்கு கூகுள் பிளஸ்தளத்தைதிறந்து Settings என்பதை கிளிக் செய்யவும். அடுத்து Languages என்பதை கிளிக் செய் யவும். பிறகு அங்கு உள்ள Languages கட்டத்தில் கிளிக் செய்து உங்களுக்கு விருப்ப மான மொழியை தெரிவு செய்யவும்.

இதன் பிறகு உங் களின் கூகுள் பிளஸ் கணக்கை மூடி விட்டு மறுபடியும் திறந்தால் நீங் கள் தெரிவு செய்த மொழிக்கு உங்கள் கூகுள் பிளஸ் கணக்கு மாறி இருக்கும்.

# Default Browser ஐ மாற்றம் செய்வதற்கு




விண்டோஸ் இயங்குதளத்துடன் இணைந்தே இன்டர்நெட் எக்ஸ்புளோரரும் தரப்படுகிறது. அது டிபோல்ட் உலாவியாகப் (Default Browser) பதியப்படுகிறது. ஆனால் அதைத் தான் நாம் பயன்படுத்த வேண்டும் என்ப தில்லை.

வேறுவிதமான உலாவியையும் தரவிறக் கம் செய்து அதனையே மாறாத உலாவியாக செட் செய்யலாம். இந்த வகையில் பயர் பொக்ஸ், ஆப்பரா, நெட்ஸ்கேப் ஆகியவை எமக்குக் கிடைக்கின்றன.

இவை தவிர இன்னும் பல உலாவிகளும் உள்ளன. இவற்றைத் தரவிறக்கம் செய்து கணினியில் நிறுவிக் கொள்ளுங்கள். அதன் பின் டிபோல்ட் உலாவியாக மாற்றம் செய் வதற்கு பயர்பொக்ஸ் உலாவியில் Tools/Options சென்று General என்பதன் கீழ் Default Browser என்று உள்ள இடத்துக்கு எதிராக உள்ள பெட்டியில் டிக் அடையாளம் ஏற்படுத்தவும்.

நெட்ஸ்கேப் எனில் என்.எஸ். நேவிகேட்டரில் Edit / Preferences தேர்ந்தெடுத்து மேலாக வலது மூலையில் உள்ள Set Default Browser என்பதில் கிளிக் செய்திடவும்.

ஆப்பராவில் Tools / Preferences சென்று Advanced டேப் செலக்ட் செய்திடவும். இதில் Programs என்பதன் கீழ் Check if Opera is default browser on startup என்று உள்ள இடத்தில் டிக் அடையாளம் ஏற்படுத்தவும். பின் ஓகே கிளிக் செய்திடவும்.

வேறு உலாவியை டிபோல்ட் உலாவியாக மாற்றம் செய்து பயன்படுத்திய பின்னர் வேறு சில காரணங்களுக்காக இன்டர்நெட் எக்ஸ் புளோரரை மீண்டும் டிபோல்ட் உலாவியாக அமைக்க விரும்பினால், இன்டர்நெட் எக்ஸ் புளோரரைத் திறந்து, அதில் Tools / Internet Options / Programs என்று செல்லவும்.

பின் Reset Web Settings என்ற பட்டனில் கிளிக் செய்திடவும். பின் Internet Explorer should check என்பதில் கிளிக் செய்திடவும்.

# அம்மா, அப்பா என்னும் வானமும் பூமியும்...

ஆயிரம் கண்ணாடிகளில் பிரதிபலித்து கண்ணைப் பறிக்கும் வெளிச்சமாகவே இருக்கிறது வாழ்க்கை. நாம் தான் அதில் பொய்யையும் புரட்டையும் கலந்து வளத்தையும் நலத்தையும் இழந்து நம்பிக்கைக்கு அப்பாற்பட்ட ஒரு வாழ்க்கையை வாழ்ந்து சோகத்தையும், சரிவையும் கொண்டு ஒளியிழந்தும், மகிழ்விழந்தும் வாழ்கிறோம். சற்று சரிவரப் பார்த்தால் நமக்கான அனைத்தும் நம்மைச் சுற்றியே இருக்கிறது. அதை எடுத்துக் கொள்ளும் தெளிவில் தான் ஒருவரில் ஒருவர் நாம் மாறுபட்டுப் போகிறோம்.

உதாரணத்துக்கு நம்மோடுள்ள பெரியவர்களின் பெரும்பான்மையான நிலையை எடுத்துக் கொள்ளுங்கள். நிச்சயம் அவர்கள் நமக்கு நல்ல வழிகாட்டிகள் மட்டுமல்ல நல்ல தோழமையையும் அன்பையும் மனதில் சுமந்து திரிபவர்கள். அவர்களின் நெருக்கம் நம்மை எந்தளவுக்கு வளர்கிறதோ அதே அளவு அவர்களைவிட்டுத் தள்ளிநிற்கும் இடைவெளியும் நமக்கான பெருங்குறைதான் என்பதை நாம் உணரவேண்டும்.

பறந்து திரிந்து உலகை அறியும் அறிவுணர்ந்து, கைப்பட்ட இடத்திலெல்லாம் இருக்கும் தடைகளைக் களைந்து, முட்டிமோதித் தன்னை நிலைப்படுத்தி, வாழ்க்கைத் துணையோடு ஒன்றி, பிள்ளைகள் பெற்று, வளர்த்து வருகிறோம், தனக்கும் தன் குடும்பத்துக்குமான தேவைகளை நிறைவு செய்து, சமுதாய நிலைப்பாட்டில் தனக்கானதொரு தனி மரியாதையினைத் தக்கவைத்துக் கொள்கிறோம், தன் பிள்ளைகளின் தம்பி தங்கைகளின் பேரக் குழந்தைகளின் மற்றும் தன்னோடுள்ள உறவுகளின் வளர்ச்சியினை தனது தலைமுறையின் வளர்ச்சியினை, தனது வளர்ச்சியாகவும் லட்சியமாகக் கொண்டுள்ளோம். வெற்றியாகவும் மகிழ்வாகவும் கொண்டு அதைக் காண கண்கள் கோடி பூத்து நிற்கும் பெரியவர்களை; நம் தாத்தா பாட்டிகளை, அப்பா அம்மாக்களை நாம் எங்கு வைத்திருக்கிறோம்?

நமக்கென்று எண்ணற்ற ஆசைகளும், லட்சியங்களும், தீர்மானங்களும் இருக்கும்பட்சத்தில் அவர்களுக்கென்று இருக்கும் ஒரே லட்சியம், மகிழ்ச்சி, ஆசை அன்பு மட்டுமே. எல்லாமே நாம் மட்டுமாகத் தான் இருப்போம். ஒவ்வொருநாளும் நாம் வேலைக்குச் செல்லும் முன் நம் வீட்டை வீட்டு குழந்தைகளைவிட்டுப் பிரிந்து செல்லும் வலிகளை உணராமலா இருக்கிறோம்? சிறுவயதுள்ள நம் மகனையோ மகளையோ நாம் பள்ளியின் வாசலில் கண்ணீர் ததும்ப கதறக் கதற விட்டுவந்த அந்த முதல்நாள்களின் வலி நம்மை விட்டு நெடுந்தூரம் விலகியிருக்காது. அது நம்மைப் பெற்றவர்களுக்கு. அது இருக்காதா?

பார்த்துப் பார்த்து ஆடைகளைத் தேர்வு செய்கிறோம் நம் பிள்ளைகளுக்கு. இது பிடிக்கும் இது பிடிக்காதோ என்றெல்லாம் அஞ்சி ஆராய்ந்து உணவளிக்கிறோம். நாளை அவர்கள் வளர இருப்பது பற்றி இன்றே கனவு காண்கிறோம், எங்கு அவர்கள் தடம் மாறிப் போய்விடுவார்களோ, மதிகெட்டு விடுவார்களோ என்றெல்லாம் பயம் கொள்கிறோம்.

உன் நன்மைக்குத் தானேடா சொல்கிறோம் என்று நித்தம் நித்தம் சொல்லி அவர்களின் வளர்ச்சியைத் தனக்கு முளைத்த சிறகென்றே எண்ணி வளர்க்கிறோம். அப்படி நம்மை வளர்த்தவர்கள் தானே நம் அப்பா அம்மாவான பெற்றோரும்.

பொதுவாக ஒரு குழந்தைக்கு தான் வளரும் பருவத்தில் என்ன ஆசை பெரிதாக இருக்கும்? நான் வளர்ந்து பெரியவனாக அல்லது பெரியவளாக ஆனதும், என் அப்பா அம்மாவை நன்றாகப் பார்த்துக் கொள்வேன். என் அம்மாவிற்கு நிறைய புடைவையும் அப்பாவுக்கு நிறைய வேட்டி சட்டையும் எடுத்துத் தருவேன் என்று எண்ணிய நம் நன்றி உணர்வை எங்கு சென்று எப்படித் தொலைத்தோம் நாம்?

ஓர் ஆண் எப்படி தான் வளர்ந்தால் தன் தாயையும் தந்தையையும் நன்றாகப் பாதுகாத்து, கண்கலங்காமல் பார்த்துக் கொள்வேன் என்று எண்ணுகிறானோ அதே எண் ணத்தைத் தானே அவன் மனைவி தான் குழந்தையாக இருக்கும் போதும் எண்ணியிருப்பாள்? திருமணத்துக்குப் பின் தன் தந்தை தன் இயலாமையினால் சோர்வுறும் போதெல்லாம் தனது கொடுக்கத் துடிக்கும் தோள்களைத் தானே அவள் கொடுக்க இயலாமல் மனதால் ஈரப்படுத்தி வைத்திருக்கிறாள்? ஒரு ஆணுக்கெப்படி தன் பெற்றோரைப் பற்றிய அக்கறையும் அன்பும் தவிப்பும் இருக்கிறதோ அதே அக்கறையும் தவிப்பும் வலிகளையும் கொண்டுதானே பெண்கள் தன் கட்டப்பட்ட கைகளோடு நம்மோடு நின்று கொண்டுள்ளனர், எனில், ஒரு ஆணுக்குத் தன் தாய் தந்தை குடும்பம் எப்படி முக்கியமோ அப்படித்தான் தனைச் சார்ந்து அமைத்துக் கொண்ட பெண்ணுக்கும் அவளின் தாய்தந்தையும் குடும்பமும் முக்கியம் என்பதை நிச்சயம் நாம் உணரவேண்டும். ஒரு பெண்ணின் அதாவது தன் மனைவியின் தாய் தந்தையின் குடும்பத்தின் நலனில் தனக்கும் மெத்தப் பொறுப்பிருப்பதை சுயமாய் ஆண் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தனக்கான அதே தவிப்பும் ஆசையும் பெற்றோரைப் பாதுகாக்கும் நோக்கும், தன் தங்கைக்கும் இருப்பது போல், அது தன் மனைவிக்கும் இயல்பாக இருப்பதொன்றே எனும் புரிதல் கணவனுக்கு வேண்டும். ஒருவேளை சிலர், அப்புரிதல் நம் அனைவரிடையேயும் தற்போது உண்டென்று எண்ணுவரெனில், பிறகெப்படி நிறைய வீட்டில் மாமனாரோ மாமியாரோ அந்நியப்பட்டுவிட இயலும்? நிறையப்பேருக்கு அவர்களைப் பற்றிய கவலையின்றி வருத்தமின்றி வாழ்க்கை எப்படிப் போகும்? என்பதைப் பற்றியும் சிந்திக்க வேண்டும்.

**இணையப்பன்**

தொடரும்

# இன்றும் கூட பெண்களின் பல பிரச்சினைகளுக்கு தீர்வில்லை

## மகளிர் தின நிகழ்வில் எழுத்தாளர் யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

வடமராட்சி, மார்ச் 16

மகளிரிடம் முன்னேற்றம் காணப்பட்டாலும் அவர்களுக்கு இன்னமும் தீர்க்கப்படாத பல பிரச்சினைகள் இருக்கின்றன என எழுத்தாளர் திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் தெரிவித்தார்.

இருபாலை தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் நடத்திய சர்வதேச மகளிர் தின விழா சங்கத் தலைவி திருமதி கலைச்செல்வி சோமேஸ்வரன் தலைமையில் இருபாலை தெற்கு கிராம சேவையாளர் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவிக்கையில்:

வருடா வருடம் மகளிர் தினம் கொண்டாடப்பட்டு வருகின்ற போதிலும் மகளிரின் பிரச்சினைகள் பல உள்ளன. இந்தப் பிரச்சினைகளை சமூக மட்டங்கள் வரை சென்று அவர்களிடம் கேட்டு அறிந்து கொள்ள வேண்டும். பெண்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படுகையில் எழும் வேறு தாக்கங்கள் குறித்து பெண்களிடம் மட்டுமன்றி மற்றையவர்களிடமும் கேட்டறிந்து கொள்ள வேண்டும். இது அவசியமாகும்.


பெண்கள் பணிபுரிவதால் எதிர் கொள்ளும் சிக்கல்கள் பற்றி அறிந்து அவற்றை எவ்வாறு தீர்த்துக் கொள்ளலாம் என்றும் சிந்திக்க வேண்டும். உதாரணமாக குழந்தைப் பேற்றின்போது நீண்ட விடுப்பில் பெண்கள் செல்லும் போது அவர்களது பணிகளைச் சரிவர நிறைவேற்ற என்ன செய்யலாம் எனச் சிந்தித்து நடவடிக்கை எடுப்பதைக் கூறலாம்.

பெண்களின் சுதந்திரம் பற்றிப் பல்வேறு வகையான அபிப்பிராயங்கள் உள்ளன. பெண்ணியம் பற்றிய தீவிரமான கருத்துக்களையும் மிதவாத கருத்துக்களையும் உடையவர்களே வேறுபட்டு நிற்கின்றனர். கலாசாரம் பேணுவோரின் அபிப்பிராயங்கள் வித்தியாசமாக உள்ளன.

எனவே பல்வேறு தரப்பினரையும் பிரதிநிதித்துவப் படுத்துவோர் ஒன்று கூடிப் பிரச்சினைகளை அறிந்து அலசி ஆராய்ந்து ஒத்த முடிவுகளை எடுத்து சமூகத்துக்கு வழிகாட்ட வேண்டும். அப்படி ஒரு செயற்பாடு முன்னெடுக்கப்படும் போது, பெண்களின் முன்னேற்றம் சிறந்த முறையில் முன்னெடுக்கப்படும் என்றார்.

இந்த நிகழ்வில் கோப்பாய் பிரதேச மத்தியஸ்தர் சபைத் தலைவர் இ.மயில்வாகனம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

(எ-8)



பெரிய புராணத்தில் இளையான்குடிமாற நாயனார் புராணம் பற்றிய கருத்தரங்கும் கருத்தாடலும் அண்மையில் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. இளையான்குடிமாறநாயனார் காட்டும் வாழ்வியல் என்ற தலைப்பில் பண்டிதர் சைவப்புலவர் வ.ஆ.தங்கமயில் கருத்துரையை வழங்கினார். கருத்தரங்கைத் தொடர்ந்து சபையோரின் வினாக்களுக்கு விடையளிக்கும் வகையில் கருத்தாடல் இடம்பெற்றது. சொல்லின் செல்வர் இரா. செல்வவடிவேல், விரிவுரையாளர் ச.லலீசன், முனைவர் மனோன்மணி சண்முகதாஸ், பேராசிரியர் அ.சண்முகதாஸ் ஆகியோர் வினாக்களுக்கு விடையளித்தனர். (எ-38)

# ஆலயங்களில் தேவாரம் பாடுவதற்கு பின் நிற்கிறது எமது இளஞ் சமூகம்

## கல்வி அமைச்சின் செயலாளர் சத்தியசீலன் கவலை

வலி.வடக்கு, மார்ச் 16

இந்து ஆலயங்களில் தேவாரம், திருவாசகம் பாடுவதற்குக் கூட ஆள்களைப் பிடிப்பதில் பெரும் கஷ்டமான நிலைமை காணப்படுகின்றது. ஆலயங்களில் திருவாசகங்களை முற்றோதுவதற்கு எமது இளஞ் சமூகம் பின்நிற்கிறது.

வட இலங்கை சங்கீத சபை இளைய தலைமுறையினரிடையே பண்ணிசையை கொண்டு சென்று தேவார, திருவாசகங்களை முழுமையாகக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாணக் கல்விபண்பாட்டலுவல் மற்றும் விளையாட்டு அமைச்சின் செயலாளர் ச.சத்தியசீலன் தெரிவித்தார்.

வட இலங்கை சங்கீத சபையின் கலாவித்தகர் பட்டம் பெற்றவர்களுக்கான முதலாவது பட்டமளிப்பு விழா இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் யாழ்ப்பாணம் கல்வி வலயப் பணிப்பாளரும் வட இலங்கை சங்கீத சபையின் தலைவருமான வை.செல்வராஜா தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றும்போது தெரிவித்ததாது:

வட இலங்கை சங்கீத சபை ஆரம்பிக்கப்பட்டு எண்பது வருடங்கள் நிறைவு பெற்றுள்ளன. இந்தக் காலகட்டத்தில் பல்லாயிரக்கணக்கான பல்வேறுதுறை சார்ந்த கலைஞர்கள் உருவாக்கப்பட்டுள்ளனர். இதன் மூலம் சிறந்த கலைஞர்கள் எமது நாட்டுக்கு வழங்கப்பட்டுள்ளனர்.

கலாவித்தகர்கள் பட்டத்தைப் பெற்றவர்கள் பட்டம் பெற்றுவிட்டோம் என்ற முடிவுடன் இருக்காது தொடர்ந்து கலைத்துறைக்கு வேண்டிய பங்களிப்பை வழங்க வேண்டும்.

இந்தப் பட்டம் பெற்றவர்களில் கல்வித் துறை சார்ந்தோர் அதிகம் உள்ளனர். அவர்கள் மாணவர்களிடையே இது தொடர்பான பூரண அறிவை ஊட்டவேண்டும்.

இவ்வாறான அறிவூட்டல்கள் மூலம் பாடசாலை மட்டத்தில் மாணவர்கள் சிறந்த அறிவூட்டலுடன் வளர்த்தெடுக்கப்படவேண்டும்.

வட இலங்கை சங்கீத சபை நடத்தும் பரீட்சை வெறுமனே எழுத்துப் பரீட்சையுடன் மட்டும் பட்டம் வழங்கும் செயற்பாடு அல்ல. பகிரங்கமாக ஆற்றல் மிக்கவர்கள் முன்னிலையில் தமது கலையாற்றலை செயல்முறையாக வெளிப்படுத்தி சபை ஏற்றுக் கொண்டால் மட்டுமே அவர்களுக்குப் பட்டம் வழங்கப்படுகின்றது.

வட இலங்கை சங்கீத சபையின் பட்டம் பெற்றவர்கள் எந்த இடத்திலும் எந்த மேடையிலும் தமது திறமைகள் ஆற்றல்களை வெளிப்படுத்தும் திறமை கொண்டவர்களாகவே வளர்த்தெடுக்கப்படுகின்றனர்.

வட இலங்கை சங்கீத சபை கடந்த காலத்தில் சிறிது சிறிதாகச் சேர்த்த பணத்தின் மூலம் தனக்கென ஒரு கட்டடத்தை அமைக்க முன்வந்து மருதனார் மடத்தில் அமைத்தும் வருகின்றது.

இந்தக் கட்டடம் நல்ல முறையில் கட்டி முடிக்கப்படுமாயின் கலைத்துறைக்கு மேலும் பல செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும். இதற்கான ஆளணி வட இலங்கை சங்கீத சபையிடம் உண்டு.- என்றார்.

(எ-86)

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## பயம்கொள்ளும் அரசு

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபைகளுக்கான தேர்தலை ஒத்தி வைப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. அரச தரப்பே தேர்தலை ஒத்தி வைக்க நீதிமன்றத்தை நாடி இருப்பதாகத் தெரிகிறது.

தேர்தல் நடக்க இருக்கும் பகுதிகள் இறுதிப் போரில் மிக மோசமான பாதிப்புகளை எதிர்கொண்ட பகுதிகள். புதுக்குடியிருப்பில் மிக உச்ச சண்டை நடைபெற்றது. அந்தப் பகுதியைக் கைப்பற்றுவதற்கு இராணுவம் மிகக் கடுமையாகச் சண்டையிடவேண்டி இருந்தது.

இரண்டு ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலத்தை எடுத்துக்கொண்டு இந்தப் பகுதியில் சல்லடைபோட்டு ஆயுதங்களையும் போர்க் குற்றத் தடயங்களையும் கண்டெடுத்து அழித்த பின்னரே மக்களை அங்கு மீளக்குடியமர அண்மையில் அரசு அனுமதித்தது. ஆனாலும் போரின்போது தமது படையினர் செய்த அட்டூழியங்களையும் கொடூரங்களையும் மக்கள் இலகுவில் மறந்திருக்க மாட்டார்கள் என்ற அரசின் நம்பிக்கையே தேர்தலை ஒத்தி வைக்குமாறு அது கோருவதற்கான முதன்மைக் காரணம் என்ற ஒரு கண்ணோட்டம் எதிர்க்கட்சிகளிடம் உண்டு.

இந்தத் தேர்தலில் ஆரம்பம் முதலே அரசு அவ்வளவு ஈடுபாடு காட்டவில்லை. பரப்புரைகளிலும் ஈடுபடவில்லை. அரசின் ஆதரவாளர்கள் மக்களிடம் செல்லவில்லை. இதுவரையும் மக்களைச் சந்தித்த பரப்புரையாளர்கள் மற்றும் கட்சி வேட்பாளர்களிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையே தாம் ஆதரிப்போம் என்று அவர்கள் கூறியிருக்கின்றனர்.

இத்தனைக்கும் பிறகுதான் தேர்தலை ஒத்தி வைக்கும்படி அரசு தரப்பினர் நீதிமன்றை நாடியுள்ளனர். அதிலும் குறிப்பாக இந்தப் பிரதேசங்களில் மீள்குடியமர்வு முழுமையாக நடக்கவில்லை என்றும் அதனால் தேர்தலில் வாக்களிக்க மக்கள் முன்வரமாட்டார்கள் என்றும் மனுதாரர்கள் சார்பில் அதாவது, அரசு சார்பில் வாதிடப்பட்டுள்ளது.

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்தவர்களில் 99 வீதமானவர்களைத் தாம் மீளக்குடியமர்த்தி விட்டதாக உலக நாடுகள் மத்தியிலும் ஜெனிவாவிலும் கூடக் கூறிவரும் அரசு, இந்தப் பிரதேசங்களில் வாக்களிக்க மக்கள் வரமாட்டார்கள் என்று கூறி தேர்தலை ஒத்திவைக்கக் கோருவது அதன் அச்சத்தை வெளிப்படையாகக் காட்டுகிறது.

வன்னியில் பெருமளவில் அபிவிருத்திப் பணிகளைத் தான் மேற்கொண்டுள்ளதாகப் பறைசாற்றி வரும் அரசு, தனது அத்தகைய நடவடிக்கைகள் மக்களிடம் வரவேற்பைப் பெற்றிருக்கவில்லை என்பதையும் படையினரால் மக்கள் தொடர்ந்தும் நெருக்குவாரங்களை எதிர்கொள்வதால் தம்மை ஆதரிக்கப் போவதில்லை என்பதையும் நாடிபிடித்து அறிந்துள்ளது என்பதையே தேர்தல் குறித்த அதன் அச்சம் காண்பிக்கிறது.

மற்றொரு விடயம் ஜெனிவாவில் தன் மீதான தீர்மானத்துக்கு எதிராக சிங்கள மக்களைத் தூண்டிவிட்டுள்ள நிலையில், வடக்கில் தேர்தலுக்காக வேனும் பொய் வாக்குறுதிகளைத் தமிழர்களுக்கு அள்ளி வழங்க முடியாது என்ற தர்க்க ரீதியிலான குறுகுறுப்பும் இதற்குக் காரணமாக அமைகின்றது.

எனவேதான் அரசு தமிழ் மக்களை இப்போதைக்குத் தேர்தலில் சந்திக்க விரும்பவில்லை. அரசின் இந்த நிலை தமிழ் மக்களுக்கும் அரசுக்குமான இடைவெளியை அப்பட்டமாக வெளிப்படுத்தி நிற்கிறது. இந்த நிலை எப்போது மாறும் என்பதில்தான் இந்த நாட்டின் எதிர்காலம் தங்கியிருக்கிறது.

# தமிழினத்தை தொடர்ந்து விரட்டும் துரதிர்ஷ்டம்

எம்.மணிகண்டன்

தமிழர்கள் அதிர்ஷ்டம் அற்றவர்கள். இல்லையென்றால், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை மீது தீர்மானம் கொண்டுவரப்படும் நேரத்தில், இலங்கை இராணுவத்தின் அட்டூழியங்களை அம்பலப்படுத்திய பிரிட்டிஷ் பத்திரிகையாளர் மேரி கொல்வின் நம்மிடையே இல்லாமல் போவாரா?

இராணுவத்தால் தமிழர்கள் எவ்வாறெல்லாம் பாதிக்கப்பட்டார்கள், எவ்வளவு துன்பங்களை அனுபவித்தார்கள், அப்பாவிகள் கொத்துக் கொத்தாகக் கொல்லப்பட்டமை எப்படி என்பதை எல்லாம் தனது செய்திகளில் விவரித்தவர்தான் மேரி.

இறுதிக் கட்டப் போரின்போது, வெள்ளைக்கொடி ஏந்தி வந்த நடேசன், அவரது மனைவி, புலித்தேவன் உள்ளிட்டோரை இலங்கை ராணுவத்தினர் ஈவிரக்கமில்லாமல் கொன்றனர் என்பதை தனது போர்ச் செய்தியில் அவர் பதிவு செய்திருக்கிறார்.

''துப்பாக்கிகளை மௌனத்தில் ஆழ்த்துகிறோம்'' என்று கூறியபோதே, ராணுவத்திடம் சரணடைய விடுதலைப் புலிகள் தயாராகிவிட்டிருந்தனர் என்பதை உலகம் அறிந்திருந்தது. அந்தப் பின்னணியில் புலிகளுக்கும் ஐ.நாவுக்கும், ராஜபக்ஷ அரசுக்கும் இடையே நம்பிக்கை ஏற்படுத்தும் பணியில் மேரி ஈடுபட்டிருந்தார்.

''சரணடைகிறோம்'' என்று நடேசனோ, புலிகளின் பிற தலைவர்களோ வெளிப்படையாகக் கூறாவிட்டாலும், ஆயுதங்களைப் போட்டுவிட்டு சரணடைவதுதான் அவர்களது நோக்கமாக இருந்தது என்பதற்கு நேரடியான சாட்சியாக இருந்தவர் மேரி. நடேசன் உள்ளிட்டோரிடம் சாடிலைட் போனில் பேசுவது, குறுஞ்செய்திகள் மூலம் தகவல்களைப் பெறுவது என விடுதலைப் புலிகளுடன் நெருக்கமாக இருந்தார்.

மேற்கத்திய ஊடகங்களின் வழக்கமான ''நடுநிலை'' பத்திரிகையாளராக இலங்கைக்கு வந்தவர்தான் மேரி. மேலை நாட்டுச் சந்தையில் அதிகமாக விற்கும் ''மனித உரிமை'' சாயம் பூசிய செய்திகளைத் திரட்டுவதுதான் அவரது முதல்நிலைப் பணியாக இருந்தது. ஆனால், விடுதலைப் புலிகள் என்பவர்கள், பயங்கரவாதிகள் என்கிற பலரது எண்ணத்தை மேரி தந்த செய்திகள் மாற்றின. புலிகளை ''விடுதலைப் போராட்ட வீரர்கள்'' என்று துணிச்சலாகக் குறிப்பிட்டார். ஏதோ ஒரு வகையில், தமிழினத்துக்கு அவர் பேருதவி புரிந்திருக்கிறார் என்பதை நாம் மறுக்க முடியாது. மறந்துவிடவும் கூடாது!

மேரி கொல்வின் இன்றைக்கு உயிருடன் இல்லாவிட்டாலும், கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கைப் போர், ராணுவத்தின் மனித உரிமை மீறல்கள், அகதிகள் நடத்தப்பட்ட விதம் உள்ளிட்டவை குறித்து அவர் விட்டுச் சென்றிருக்கும் ஆவணங்கள் நமக்குப் பயன்படுகின்றன.

இன்றைக்கு ஜெனீவா தீர்மானத்தை அமெரிக்கா முன்னெடுப்பதற்கு மேரியின் ''மனித உரிமை'' செய்திகளும் ஒரு காரணம். ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட மேலை நாடுகள் இலங்கை அரசுக்கு எதிரான நிலை எடுத்திருப்பதும் மேரி கொல்வின் போன்றவர்களால்தான்.

அவர் இன்று இல்லை என்பது தமிழர்களின் துரதிருஷ்டமே. ஆனால், அதைவிட மிகப்பெரிய துரதிருஷ்டம் என்ன தெரியுமா? தமிழர்களை அங்கமாகக் கொண்ட இந்தியா, தமிழர்களுக்கு ஆதரவாக இல்லாததுதான். இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானம், அவர்களது சர்வதேச ராஜதந்திரத்தின் ஒரு பகுதிதான். அவர்களைப் பொறுத்தவரை, லிபியா, ஈரான், ஈராக், சிரியா போன்ற நாடுகளுக்கு எதிரான தீர்மானத்தைப் போன்றதுதான் இதுவும்.

தமிழர்கள் மீது அமெரிக்கர்களுக்கு நேரடியான கரிசனம் ஏதும் இல்லை என்பதும் உண்மைதான். என்றாலும், இத்தகைய தீர்மானத்தால், இலங்கை இனப்படுகொலையில் பலரை இழந்த தமிழர்களுக்கு நீதி கிடைக்க வழி ஏற்படும் என்பதை மறுக்க முடியாது.

இத்தகைய சூழலில் தமிழர்களுக்கு ஆதரவாக இருக்கிறோம் என்று இந்தியா வெளிப்படையாக அறிவிக்கவில்லை என்றால், அதற்காக யாரைக் குறை சொல்வது? அரசுக்குத் தலைமை வகிக்கும் காங்கிரஸ் கட்சியையா அல்லது அதில் அங்கம் வகிக்கும் தமிழகக் கட்சிகளையா? இல்லை, அரசில் செல்வாக்குடன் வீற்றிருக்கும் அரசியல்வாதிகளையா?

47 உறுப்பினர்களைக் கொண்ட மனித உரிமைக் குழுவில் இந்தியாவுக்கு வாக்களிக்கும் உரிமை இருக்கிறது. ஆனால், இலங்கைக்கு ஆதரவாகவோ அல்லது வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமலோ இருப்பதைத்தான் இந்தியா விரும்புகிறது என்பதை இந்தியப் பிரதமர் உள்ளிட்டோர் தெளிவுபடுத்தி விட்டனர்.

சிரியா உட்பட பல நாடுகளுக்கு எதிரான தீர்மானங்களின்போது எடுக்கப்பட்ட நிலையைத்தான் இப்போதும் எடுக்கிறோம் என்று ''சாக்கு'' சொல்லப்படலாம். தமிழர்களுக்கு ஆதரவாக நிற்பதற்கு அருமையான வாய்ப்புக் கிடைத்தும் அதை எட்டி உதைக்கப் போகும் இந்திய மத்திய அரசின் இத்தகைய முடிவை ''தமிழர்களின் துரதிருஷ்டம்'' என்று கூறாமல் வேறென்ன சொல்வது?

இந்த இரண்டையும் விடப் பெரிய துரதிருஷ்டமும் தமிழர்களை இப்போது பீடித்திருக்கிறது. இலங்கைக்கு எதிராகப் பிரசாரம் செய்வதிலும், ஆதரவு திரட்டுவதிலும் இலங்கைத் தமிழ் அரசியல்வாதிகளிடம் ஒற்றுமை இல்லை என்பதுதான் தாங்க முடியாத வேதனை. படுகொலைகளையும் சித்திரவதைகளையும் நேரில் பார்த்தறிந்தவர்கள், இந்த விஷயத்தில் பிளவுபட்டிருக்கிறார்கள் என்பது அதிர்ச்சியாக இருக்கிறது.

எல்லோருக்கும் துரதிருஷ்டம் வரும். தமிழினத்துக்கு மட்டும் அது தொடர்கதையாகவே இருக்கிறதே, என் செய்வது?

# மாத்தி யோசி: வெற்றி நிச்சயம்

ஜெகஜோதி

எனக்கு எப்போதும் தோல்விதான், கொஞ்சம்கூட ராசி இல்லாதவன், வாழ்க்கையே வெறுத்துப் போய் விட்டது. என்ன செய்வதென்றே தெரியவில்லை'' என்று பலரும் புலம்பக் கேட்டிருப்போம்.

ஒரு வியாபாரத்தைத் தொடங்கி, அதில் சின்னஞ்சிறு சறுக்கல் வந்தால்கூட சோர்ந்து போய்விடும் பலரையும் பார்த்திருப்போம். இதில் உண்மை என்னவெனில், எந்த ஒரு செயலையும் வெற்றிகரமாகச் செய்ய நினைத்து அதில் தோல்வி அடைந்தவர்கள் அதே செயலில் சின்னச் சின்ன மாற்றங்களை மட்டும் செய்துவிட்டால் வெற்றிக்கனியைச் சுலபமாகச் சுவைக்க முடியும்.

வாடிக்கையாளர்கள் தேடிவந்து வாங்குவதைவிட, நாமே தேடிப்போய் கொடுக்கலாமே என்ற முயற்சியில் இறங்கி, முதல்முதலாக தவணை முறைத் திட்டத்தை அறிமுகப்படுத்தி அதில் மாபெரும் சாதனையும் படைத்தது ஒரு நிறுவனம். வீட்டில் இருக்கிற கட்டில் இடத்தை அடைக்கிறதே என்று ஒருவர் சிந்தித்ததன் விளைவு, அது மடக்கு நாற்காலியாக மாறியது. இதனால் மடக்கு நாற்காலிகளின் விற்பனையும் பல மடங்குகளாகப் பெருகியது.

ஒரு காலத்தில் அஞ்சல் அலுவலகத்தில் உரிமம் பெற்று வீட்டில் ரேடியோ வைத்துக் கொண்டிருந்த காலங்களில் பாடல்களையோ அல்லது செய்திகளையோ வீட்டில் மட்டும்தான் கேட்க முடிந்தது. மற்ற இடங்களில் கேட்கமுடியவில்லை. அதற்கு என்ன செய்வது என்று மாற்றிச் சிந்தித்ததன் விளைவு, அது பொக்கெட் ரேடியோவாக மாறியது. இந்த பொக்கெட் சைஸ் ரேடியோவில் வருகிற சத்தமும் பலருக்கு இடையூறாக இருக்கிறதே என்று சிந்தித்ததன் விளைவு, அது வாக்மேனாகிப் போனது. ரேடியோ-பாக்கெட் ரேடியோ-வாக்மேன். இவை மூன்றுமே சிறிது மாற்றிச் சிந்தித்ததன் விளைவால் இவற்றின் விற்பனை அந்தந்தக் காலங்களில் ஒரு பெரும் புரட்சியையே ஏற்படுத்தின.

வேட்டியே கட்டாத, கட்டத் தெரியாத இளைஞர்களைக் கவர அதே வெள்ளை நிறத்தில் பனியன், கைக்குட்டை, பெல்ட், செல்போன் கவர் என்று அவர்களின் தேவையை அறிந்து, பூர்த்தி செய்து வேட்டி கட்டாதவர்களையும் வேட்டி கட்ட வைத்துவிட்டது ஒரு வெண்ணிற ஆடை தயாரிப்பு நிறுவனம். வேட்டி கட்டுபவர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே போகிறதே என்று கவலைப்படாமல் சிறிது மாற்றிச் சிந்தித்ததன் விளைவால் விற்பனையிலும் புரட்சி செய்திருக்கிறது அந்த நிறுவனம்.

சட்டை இல்லாத உடலும், அணிந்திருந்த கண்ணாடியும், கையில் இருந்த கைத்தடியும் மகாத்மாவின் மந்திர சக்திகளாகவே இருந்தன. காவி உடையும், அதே நிறத் தலைப்பாகையும் சுவாமி விவேகானந்தரின் விவேகத்தையும், வீரத்தையும் வெளிப்படுத்தின.

இப்படியாக தோற்றத்தில்கூட கொஞ்சம் மாற்றிச் சிந்தித்து அதன்படி செயல்பட்டவர்கள் வாழ்வில் ஓர் உயர்ந்த இடத்தைத் தொட்டிருக்கிறார்கள். எனவே சின்னச் சின்ன விஷயங்கள் கூட மிகப்பெரிய மாற்றங்களைத் தந்திருக்கின்றன.

எனவே தோற்றம், பேச்சு, செயல் இவை மூன்றிலும் ஏதேனும் ஒன்றிலோ அல்லது மூன்றிலுமோ கொஞ்சமாவது மாற்றிச் சிந்தித்து, தேவைக்குத் தக்கவாறு, வித்தியாசங்களையும் குழைத்து, செய்யப் பழகி விட்டால் வெற்றி உங்களைத் தேடி வந்து உங்கள் வீட்டுக் கதவைத் தட்டும்.

# பேய் வீடாகும் ஒரு நகரம்



தொலைந்த பின்னர் 5 மைல் தூரம் தேடிச் சென்று கண்டுபிடித்த தீக் கோழிதான் மட்சுமுராவின் நெருங்கிய நண்பன்.

எஸ். நவநீதன்
(ஆங்கில மூலத்திலிருந்து தமிழுக்கு)

நடைபாதைகளின் ஊடாகச் செடிகள் வளர்கின்றன. தொலைபேசிக் கம்பங்கள் ஒரு தினுசான கோணத்தில் சாய்ந்து கிடக்கின்றன. ஜப்பான் நாட்டின் புகுஷிமா நிர்வாகப் பகுதியின் கடலோரத்தில், தெற்கே சில மைல்களுக்கு அப்பால், மற்ற சமூகத்தினர் புதுக் குடியிருப்புகளைக் கட்டியெழுப்பும் திட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். ஆனால், தோமியோகா இருப்பது புகுஷிமா டாய்-ச்சி அணுஉலைக் கூடத்திலிருந்து எட்டு மைல்களுக்கு உள்ளாக - தடை செய்யப்பட்டுள்ள 13 மைல்கள் வளையம்கொண்ட மண்டலத்துக்குள்ளே. இங்கு வசித்தவர்கள் வெளியேறி நீண்ட நாள்களாகிவிட்டன.

நெடோ மட்சுமுரா மட்டுமே தோமியோகாவில் எஞ்சி இருக்கும் ஒரே குடிமகன். மின்சாரம் இல்லாமலும், குடிதண்ணீர் விநியோகம் இல்லாமலும், தனிமையை எதிர்கொண்டபடியும், உயர அளவு கதிர்வீச்சின் நிரந்தர அச்சத்துடனும் அங்கேயே இருக்கிறார். ஒரு நெருப்புக் கோழி உள்ளிட்ட கால்நடைகளுக்குத் தீனி போடுவதற்காகவே அவர் அங்கு உள்ளார்.

ஓராண்டு கழிந்த நிலையில், மட்சுமுரா (வயது 52) மனிதர்களைவிடவும் பிராணிகளுக்கு முக்கியத்துவம் தருவதாகத் தோன்றுகிறது. சாலை ஓடும் இயந்திரங்களை இயக்குபவரான மட்சுமுரா, "நிலநடுக்கம் தாக்கியபோது நான் வேலை செய்துகொண்டிருந்தேன். ஆழிப்பேரலை வந்து கொண்டிருப்பதாக வானொலியில் சொல்லக் கேட்டோம்". என்கிறார். "அடுத்த நாள் அணு உலைக் கூடம் வெடித்த சத்தத்தைக் கேட்டேன். என்ன நடந்தது என்பதை எனக்கு யாரும் சொல்ல வேண்டிய தேவையே இருக்கவில்லை. ஏனென்றால், அவ்வளவு பெரிய சத்தம் அது" என்று மேலும் சொன்னார்.

> “ இந்த இடத்தில் கதிர்வீச்சு மாசினை நீக்க குறைந்தது 40 ஆண்டுகள் ஆகும் என்று அரசு சொல்கிறது. அதற்குள் இது பேய்களின் ஊராக மாறிவிடும். இளைஞர்கள் யாரும் திரும்பி வர மாட்டார்கள் ”

வீட்டில் தாய், தந்தை மற்றும் உள்ளூர் மக்களுடன் வாழ்ந்து கொண்டிருந்த மட்சுமுரா, மேலும் பல வெடியோசைகளைக் கேட்டதாகக் கூறினார். இறுதியாக, தெற்கு நோக்கிச் செல்வதென தீர்மானித்தோம். "ஐவாகி ஊருக்குப் போய் என் அத்தை வீட்டுக் கதவைத் தட்டினேன். அவர் எங்களில் ஒருவரைக் கூட வீட்டுக்குள் விடவில்லை. ஏனென்றால், நாங்கள் கதிர்வீச்சால் கெட்டுப்போய்க் கிடப்பதாக அவள் சொன்னார். ஆகவே, அருகில் இருந்த அடைக்கல மையத்துக்குச் சென்றோம். ஆனால், அங்கேயும்கூட எங்களை அவர்கள் தங்கவிடவில்லை. ஆகவே, வீடு திரும்பினோம்" என்கிறார்.

ஏப்ரல் மாதம் தாய்க்கு உடல்நலம் குன்றியது. ஆகவே, குடும்பத்தின் மற்ற அங்கத்தினர்கள் அனைவரும், ஏற்கெனவே தடைசெய்யப்பட்டிருந்த 18 மைல் தூரத்துக்கு அப்பால் சென்று உறவினர்களுடன் தங்கினர். "என்னால் கால்நடைகளைக் கொண்டு செல்ல இயலவில்லை. ஆகவே, நான் இங்கேயே தங்கிவிட்டேன்" என்கிறார்.

தொடக்கத்தில், வளர்த்தவர்களால். கைவிடப்பட்ட 60 நாய்கள், 100 பூனைகளை இவர் பார்த்துக் கொண்டார். தவிர, நூற்றுக்கணக்கான வாத்துகளும், இன்னமும் பூட்டப்பட்டுக் கிடக்கும் தொழுவத்தில் கால்நடைகளும் இருந்தன. வீட்டுப் பிராணிகள் பலவும் கூட்டுச் சேர்ந்து கிளம்பிச் சென்றபோது - இவரிடம் 7 நாய்களையும், 14 குட்டிகளையும் விட்டுவிட்

*(22ஆம் பக்கம் பார்க்க)*

# வாழ்க்கை ஒரு வரம்; அதை சாபமாக்கிக் கொள்ளாதீர்

ப.செ.சங்கரநாராயணன்

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்பர். ஐந்தறிவு ஜீவராசிகளான விலங்குகள்கூட, இந்த உண்மையைப் புரிந்து வைத்திருப்பதை, அண்மையில் ஒரு தொலைக்காட்சியில் காட்டினர்.

அதில் வலிமை மிகுந்த சிங்கக் கூட்டம் ஒன்று, தாயிடமிருந்து பிரிந்த காட்டெருமைக் குட்டியைத் துரத்தி வேட்டையாடி இழுத்துச் சென்றது. இதைத் தனித் தனியே நின்றபடி மிரட்சியுடன் பார்த்துக் கொண்டிருந்த காட்டெருமைகள் ஒவ்வொன்றாக அணி திரண்டன. எங்கிருந்துதான் வந்ததோ அவ்வளவு ஆவேசம்.

திடீரென சிங்க ராஜாக்களை ஓட ஓட விரட்டிப் பந்தாடிய காட்டெருமைகள், தமது குட்டிகளைப் பத்திரமாக மீட்டுச் சென்றன. "விலங்குகளாக இருந்தாலும், பகுத்தறியும் இரண்டு கால் விலங்காகப் பரிணாம வளர்ச்சி அடைந்துவிட்ட மனிதனாக இருந்தாலும் வாழ்க்கையென்பது போராட்டம்தான். அதில் பிழைத்திருக்க நம்பிக்கையையும், தைரியத்தையும் மட்டும் எப்போதும் இழந்துவிடக் கூடாது" என அந்நிகழ்ச்சியின் வர்ணனையாளர் விவரித்தார்.

பொதுவாக, மனிதர்களுக்கு ஏற்படும் பெரும்பாலான பிரச்சினைகளுக்குக் காரணம், ஒற்றுமை இல்லாமல் போவதுதான். குடும்பத்தில் ஒற்றுமை இல்லாமல் போவதால், முதியவர்கள் தனிமைப்படுத்தப்படுகிறார்கள். ஊருக்குள் ஒற்றுமை இல்லாததால் மனிதர்கள் சாதி ரீதியாகப் பிளவுபட்டிருக்கிறார்கள். நாட்டுக்குள் ஒற்றுமை இல்லாததால் மனிதர்கள் இன ரீதியாகப் பிளவுபட்டிருக்கிறார்கள். அண்டை நாடுகளுடன் ஒற்றுமையில்லாததால், நம்மைக் கைப்பாவைகளாக மாற்றத் துடிக்கின்றன வல்லரசுகள்.

இப்படி எங்கு நோக்கினும் ஒற்றுமை நீங்கிடின் தாழ்வு.. தாழ்வுதான். பக்கத்து நாடானாலும், வீடானாலும் போட்டி, பொறாமையும், நம்மைவிட வசதி வாய்ப்புகளைப் பெற்று வளமாக வாழ்கிறார்களே என்ற வயிற்றெரிச்சலும்தான் ஒருவரை ஒருவர் அழிக்கத் துடிக்கிறது.



ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பது எருமைகளுக்கும் தெரிந்திருக்கிறது.

பணம் கண்ணை மறைக்கும் தற்போதைய வாழ்வியல் சூழலில், மைய நீரோட்டமான அன்பை மறந்துவிட்டு, இலக்கில்லாத அம்பைப்போல மனிதர்கள் திசைமாறிச் செல்வதுதான் பிரச்சினைகள் அனைத்துக்கும் காரணம்.

ஒரு சம்பவம் நினைவுக்கு வருகிறது. பெரிய பதவியில் இருந்த மனிதர் அவர். யாரிடமும் ஒட்ட மாட்டார். ஊரில் எந்தவொரு நல்லது, கெட்டதிலும் பங்கெடுத்துக் கொள்ள மாட்டார். அவரைப் போலவே அவரது குடும்பத்தாரும், எப்போதும் தனித்தீவாகவே இருப்பர். நாளடைவில் அவரது வாரிசுகள் வெளிநாட்டில் குடியேறிவிட்டார்கள். மனைவியும் அவர்களுடன் சென்றுவிட, தனித்து விடப்பட்டார் அந்த மனிதர். பணியில் இருந்து ஓய்வு பெற்றுவிட்ட பின்னராவது மனிதர் திருந்தினாரா என்றால் இல்லை. அறிமுகமானவர்கள் பேச்சுக் கொடுத்தால்கூட, சரியாக முகம் கொடுத்துப் பேச மாட்டார். (பணம் கேட்டுவிடுவார்களோ என்ற அச்சமோ என்னவோ!)

திடீரென ஒருநாள் மாரடைப்பு ஏற்பட்டு அவர் இறந்துவிட, அக்கம், பக்கத்தினர் யாருக்கும் தெரியவில்லை. இரண்டு நாள்கள் கழித்து, அவரது வீட்டில் இருந்து வீசிய துர்நாற்றத்தால் சந்தேகமடைந்த தெருவாசிகள் வீட்டுக் கதவை உடைத்துதான் அவரது சடலத்தை மீட்டனர். அதன் பிறகு, சொற்ப நபர்களே கலந்துகொண்ட அவரது இறுதிப் பயணம் ஓர் சோகமான கா(சா)ட்சி.

"காடு வரை பிள்ளை..." என்ற பேறுகூட, கிட்டாமல் போன துர்பாக்கியசாலி மனிதர் அவர். வசதி படைத்த அவருக்கு, தனது சொந்த பந்தங்களில் சிரமப்படுவோரை கைதூக்கிவிடக்கூட மனமில்லாமல் போய்விட்டதாக, துக்க வீட்டுக்கு வந்த அவரது உறவினர்களே ஆதங்கப்பட்டனர். ஒரு சொட்டுக் கண்ணீர் விடக்கூட ஆளின்றி, ஒரு மனிதரின் வாழ்வு இப்படியா முடிவது? வாழ்க்கை என்பது எவ்வளவு பெரிய வரம்! ஆனால், அதை பலர் தம்முடைய மோசமான நடத்தையால் சாபமாக்கிக் கொள்வதைப் பார்க்க முடிகிறது.

தற்போது, அவர்கள் வாழ்ந்த பெரிய வீடு ஆள், அரவமின்றி பூட்டியே கிடப்பதால், மயானம் போலாகி விட்டது.

கடைசிக் காலத்தில், தவித்த வாய்க்குத் தண்ணீர் தரக்கூட ஆளில்லாத நிலை, அந்த மனிதராகத் தேடிக்கொண்ட வினைதானே அது. சமூகத்தில் நிலவும் வர்க்க பேதத்தில் இப்படிப்பட்ட மனிதர்கள் பெருகி வருவதுதான், அவலமான உண்மை.

இவர்களை வாழ்ந்து கெட்டவர்கள் என்பர். ஆனால், உறவுகளுக்குள்ளேயே போலி கௌரவம் பார்த்துக்கொண்டு வாழும், இவர்கள் வாழாமலேயே கெட்டவர்கள். எந்தவொரு மனிதனும் சொந்த முயற்சியால், தம்முடைய நிலையை உயர்த்திக் கொள்வது வரவேற்கத் தக்கதுதான். ஆனால், நாளடைவில் பணம் கண்ணை மறைத்துவிடாத பண்பும், தெளிவும் வேண்டும். இல்லாவிட்டால், உறவுகளுக்குள்ளேயே அன்னியப்பட்டுப் போவதைத் தவிர்க்க முடியாது.

தாராளமயமாக்கலின் விளைவாக வலிந்து முயல்வோருக்கு, எல்லாமும் கிடைக்கிறது. ஆனால், அதன் எதிர் விளைவாக மனிதர்களின் மனம் அன்பில்லாமல் சுருங்கிக் கொண்டிருக்கிறது. எது எப்படியிருந்தாலும், சமூகத்தில் பிறக்கின்ற ஒவ்வொரு மனிதரும் ஒரு விதைதான்.

அந்த விதை நல்ல நிலத்தில் விழுந்து பெரிதாக வளர்ந்து, பலருக்கும் பலன்தரும் விருட்சமாக மலர வேண்டும் என்பதே படைத்தவனின் விருப்பம். அதைவிடுத்து நான், எனது என சுருக்கிக் கொண்டு, மனிதர்கள் பட்ட மரமாகிப் போவது, சக உயிர்களுக்கும் இழைக்கும் அநீதிதான்.

# மனவாட்டம்

முப்பத்தைந்து வயதான ஓர் அம்மா இருந்தார். அவருக்கு குடும்பத்தில் எந்தக் கஷ்டமும் இல்லை. இருந்தாலும் காரணம் இல்லாமல் பிள்ளைகள் மீது எரிந்து விழுவார். இது அவருக்கு வழமையான நிகழ்வாகிப் போய்விட்டது. இதனால் பிள்ளைகள் அழுவார்கள். உடனே அவர் மனமும் சங்கடப்படும்.

இன்னொரு அம்மா நல்ல வேலையில் இருந்தார். வாரத்துக்கு ஒரு தடவையாவது தலைவலி வந்துவிடும். இவர்களுக்கெல்லாம் உடம்பில் எந்தக் கோளாறும் இல்லை. மனம் மட்டும் சரியாக இருக்காது. தூக்க மாத்திரையைக் கையில் வைத்திருப்பார்கள்.

30-35 வயதுடைய பெண்களுக்கு சர்வ சாதாரணமாகக் காணப்படுகின்ற மனக்கோளாறு இது. இதற்குப் பெயர்தான் மனவாட்டம்.

'மனவடிவு' என்றும் சொல்லலாம். இந்த நோய்க்கு அறிகுறி என்ன தெரியுமா? மனதில் வருத்தமான உணர்வு இருக்கும். அடிக்கடி அழலாம் போன்று தோன்றும்.

எந்தெந்தச் செயல்களில் ஆர்வம் இருந்ததோ அவற்றுக்கெல்லாம் குறைந்துவிடும். அல்லது முழுமையாகவே ஆர்வம் இல்லாது போய்விடும். சில பெண்கள் இளம் வயதில் பக்கத்தில் இருப்பவர்களிடம் கலகலப்பாகப் பேசுவார்கள். வீட்டை அலங்கரிப்பதிலும் ஆர்வம் காட்டுவார்கள். மனவாட்டம் ஏற்பட்டால் அவற்றில் ஆர்வம் இல்லாமல் போய்விடும். எந்த வேலையைச் செய்தாலும் களைப்பு அடைவது போன்று தோன்றும்.

''எமக்கு யாரும் உதவியாக இல்லை; நம்மை எல்லோரும் கைவிட்டு விட்டார்கள். இப்படிப்பட்ட உணர்வுகள் உண்டாகும். தன்னைத்தானே குறை சொல்வார்கள். தவறு செய்துவிட்டோமோ என்று எண்ணத் தோன்றும். குற்றம் செய்துவிட்டோம் என்று நினைத்துக் கஷ்டப்படுவார்கள். பசி இருக்காது. தூக்கத்தில் தொந்தரவு இருக்கும். அடிக்கடி ''இறந்து போய்விடலாம்'' என்கின்ற உணர்வு வரும். தற்கொலை செய்து கொள்ளலாம் என்கின்ற எண்ணம் உண்டாகும். சில பேர் தற்கொலை முயற்சியில் கூட ஈடுபடுவார்கள். சில பேருக்கு பல விதமான உடல் வலிகள் இருக்கும். பலவீனம் இருக்கும். இவையெல்லாம் மனவாட்டம் என்னும் நோய்க்கான தன்மைகள். இந்த மனவாட்டத்தை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

ஒரு வகையான மனவாட்டம், தானாக உருவாகும். இன்னொரு வகையானது எதிர் விளைவுகளை உருவாக்கும் நரம்பு சம்பந்தப்பட்டது. தானாக உருவாகின்ற மனவாட்ட நோய்க்கு ஏதாவது சூழ்நிலை காரணமாக இருக்கலாம்;அல்லது இல்லாமலும் இருக்கலாம். இதற்கு ஓரளவு பிறவிக் காரணங்கள் கூட இருக்கலாம். குடும்பத்தில் வேறு சிலருக்கும் வரலாம்.

பாதிக்கப்பட்ட பெண்ணைப் பார்ப்பதற்குப் பலவீனமாகத் தெரியும். கடுமையான குற்ற உணர்வு இருக்கும். தனியாக இருப்பதற்கு ஆசைப்படுவார்கள். நடுராத்திரியில் எழுந்து உட்கார்ந்து கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பார்கள். கொடூரமான முறையில் தற்கொலை செய்ய முயற்சி செய்வார்கள். நஞ்சு கலந்த அமிலத்தை குடிப்பதற்கு தூக்கில் தொங்குவதற்கு ஆசைப்படுவார்கள். தானாக வரவழைக்கின்ற மனவாட்ட நோய் வந்து மறையக் கூடியது. ஒரு தடவை வந்தால் மூன்றிலிருந்து ஆறு மாதங்கள் வரை நீடிக்கும். இப்படிப்பட்ட காலங்களில் நோயாளி இயல்பாக இருப்பார். எதிர்விளைவை உருவாக்குகின்ற அல்லது நரம்புகள் சம்பந்தப்பட்ட மனவாட்டநோய் எப்படி இருக்கும் என்றால் கணவன்- மனைவி, மாமியார் - மருமகள் இப்படிப்பட்ட உறவு முறைப் பிரச்சினைகள், தோல்விகள்,எரிச்சல்கள், அலுவலகப் பிரச்சினைகள் இப்படிப்பட்ட சூழ்நிலையில் உண்டாகின்றது.

எல்லாவற்றுக்கும் மருந்து இருக்கின்றது. கவலைப்பட வேண்டியதில்லை. தைரியமாக இருக்க வேண்டும். உளவியல் மருத்துவம் இதற்கு மிக உபயோகமாக இருக்கும். சில பெண்கள் இது எதற்கும் கவலைப்படமாட்டார்கள்.

ஓர் அம்மா இப்படித்தான் தன் கணவனை ஒரு மன நோய் மருத்துவரிடம் அழைத்து வந்தார். ''எனது வீட்டுக்காரர் திடீர் என்று ஒரு மாதிரியாகிவிட்டார். வித்தியாசமாக நடந்து கொள்கிறார். தன்னையே ஒரு துடைப்பமாக நினைத்துக் கொள்கிறார். அப்படி நினைத்துக் கொண்டு தன் தலையால் வீட்டின் ஓடுகளை துடைத்துக் கொண்டிருக்கிறார்'' என்றார்.



''எவ்வளவு நாள்களாக இப்படி இருக்கிறார்'' என்று கேட்டார். ''ஒரு வாரமாக இப்படி இருக்கிறது'' என்றார் அந்த அம்மா. ''அப்படியென்றால் அவரை என்னிடம் ஏன் அழைத்து வரவில்லை என்று கேட்டார் மருத்துவர். ''வீடு முழுவதும் சுத்தமாகட்டுமே என்று காத்துக் கொண்டிருந்தேன்'' என்றார் அந்த அம்மா.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# மானிப்பாயில் பெண்களுக்கென தனித்துவமான மகளிர் கல்லூரி




■ சோபனா

மனிதனுடைய அறிவாற்றலையும் நற்பண்புகளையும் மேம்படச் செய்வதற்கு அடித்தளமாகச் சிறந்த சேவையை வழங்குவதில் பாடசாலைகளுக்கு நிகராக வேறு எந்த இடமும் கிடையாது. கல்விச் சாலைகள் என அழைக்கப்படும் இத்தகைய பாடசாலைகள் மூலம் தான் சிறந்ததொரு மனித சமுதாயத்தை நாம் காணக் கூடியதாக உள்ளது.

இந்தப் பாடசாலைகள் மூலம் எமது அறிவுத் திறனை மேம்படுத்துவதுடன் சிறந்த நற்குணங்களையும் எமக்குள் வளர்த்துக் கொண்டு உயர்ந்த மனித சமுதாயத்தின் முன் (நாம் நடமாடிக் கொண்டிருக்கிறோம்.)

காலங்கள் கடந்தாலும் எமது வாழ்நாளில் ஓர் அத்தியாயமாக இருந்த பாடசாலைக் காலத்தை நாம் எப்போதும் மறக்க முடியாது. அந்த வகையில் மானிப்பாய் நகரில் 50 வீதத்துக்கும் மேற்பட்ட பெண்களின் பாடசாலைக் காலத்தில் அரவணைப்பான சேவையை வழங்கிய மானிப்பாய் மகளிர் கல்லூரியை மானிப்பாய் பிரதேச மக்கள் மறந்து விட முடியாது.

யாழ். நகரில் இருந்து காரைநகர் செல்லும் மானிப்பாய் வீதியின் இடதுபுறமாக அமைந்துள்ளது இந்தப் பாடசாலை.

மானிப்பாய் நகரில் ஆண்களுக்கு என ஒரு தனிப் பாடசாலையாக மானிப்பாய் இந்துக் கல்லூரி 1910 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிறுவப்பட்டிருந்தது. எனினும் பெண்பிள்ளைகளுக்கென ஓர் தனிப் பாடசாலை இல்லாதது அந்த ஊர் மக்களுக்கு ஒரு மனக்குறையாக இருந்தது. அத்துடன் தமது பெண் பிள்ளைகள் தமது கல்வியைத் தகுதியான சைவப்பாடசாலையில் கற்க முடியவில்லை என்றும் கவலைப்பட்டனர்.

> 1963 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மாணவிகளின் பகுதியை தனிப் பாடசாலையாக்க எண்ணிய அதிபர் மு.முத்துவேற்பிள்ளை கல்வித்திணைக்களத்திற்கு விண்ணப்பித்து மானிப்பாய் மகளிர் கல்லூரியை அரச பாடசாலையாகப் பதிவு செய்து தனித்து இயக்குவதற்கு நடவடிக்கை எடுத்தார்.

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் அதிபராக இருந்த வீ.வீரசிங்கம் 1944 ஆம் ஆண்டு கல்லூரியின் முகாமையாளரின் அனுசரணையுடன் மானிப்பாய் இந்துக் கலலூரியில் பெண் பிள்ளைகள் தமது கற்றலைத் தொடர்வதற்கு ஓர் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தார்.

எனினும் பாடசாலையின் வளங்களுக்கு மாணவர்களின் தொகை இடம்கொடுக்கவில்லை. மாணவர்களின் தொகை அதிகரிக்க அதிகரிக்க பெண்பிள்ளைகளுக்கென ஓர் தனிப்பிரிவு உருவாக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

இதற்கமைவாக 1954 ஆம் ஆண்டு மானிப்பாய் இந்துக் கல்லூரியின் கிழக்கு எல்லையில் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் நிதி உதவியுடன் ஓர் காணியும் 1952 ஆம் ஆண்டு பட்டம்மாளின் இசைக் கச்சேரி மூலமும் அதனைத் தொடர்ந்து 1955 1960ஆம்ஆண்டுகளில் காணிவேல் களியாட்ட விழாக்கள் மூலமாகவும் பணம் திரட்டப்பட்டது.1955ஆம் ஆண்டுஅதிபர் மு.முத்துவேற்ப்பிள்ளை பெண் பிள்ளைகளுக்கென ஓர் தனிப்பிரிவை ஆரம்பித்து வைத்தார். மாணவிகளுக்கு ஓர் தனியான வகுப்புகள் தேவை என்பதால் இந்தப் பாடசாலையில் தற்போதுள்ள மாடிக்கட்டடம் கட்டப்பட்டது. மானிப்பாய் மகளிர் கல்லூரி உருவாகுவதற்கு தேவையான ஆக்க வேலைகள் அனைத்தையும் அதிபர் மு.முத்துவேற்பிள்ளையுடன் இணைந்து கல்லூரியின் முகாமையாளர் பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் ஆகியோர் மேற்கொண்டனர்.

கல்விச் சேவையாளர்களின் நல்லெண்ணத்தால் உருவாக்கப்பட்ட இந்தப் பாடசாலையின் ஒவ்வொரு கட்டடப்பணிகளும் மெல்ல மெல்ல அபிவிருத்தி செய்யப்பட்டன.

மஸ்கன் நிறுவனத்தின் அதிபர் எ.சுப்பிரமணியம் பாடசாலையின் தெற்குப்புறத்தில் ஓர் கட்டடத்தைக் கட்டிக் கொடுத்தார்.

மாணவர்கள் சமய வழிபாடுகளை மேற்கொள்வதற்கு பாடசாலைக்கென ஓர் ஆலயம் தேவைப்பட்ட போது தற்போது பாடசாலையில் அமைந்துள்ள முருகன் கோயிலின் மூலஸ்தானத்தை சட்டத்தரணி சி.ஸ்ரீராமநாதன் கட்டிக் கொடுத்தார். மூலஸ்தானத்துக்கான விக்கிரகங்களை ஆர்.இராசலிங்கம் செய்வித்துக் கொடுத்தார்.

அதனைத் தொடர்ந்து 1960 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் மேலதிக நிதிகளைத்திரட்டி பாடசாலையின் மாடிக் கட்டடப்பணிகளை நிறைவு செய்தது.

1963 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மாணவிகளின் பகுதியை தனிப் பாடசாலையாக்க எண்ணிய அதிபர் மு.முத்துவேற்பிள்ளை கல்வித்திணைக்களத்திற்கு விண்ணப்பித்து மானிப்பாய் மகளிர் கல்லூரியை அரச பாடசாலையாகப் பதிவு செய்து தனித்து இயக்குவதற்கு நடவடிக்கை எடுத்தார்.

ஆரம்ப காலத்தில் இந்தப் பாடசாலை திருமதி. ம. பரமசாமி தலைமையில் தரம் 1முதல் க.பொ.த.சாதாரண தரம் வரையான வகுப்புகளைக் கொண்டு நடத்தப்பட்டன.

கல்லூரிக்கென கீதமும் மகுட வாசகமும் தேவை என்பதற்கு ஏற்ப பண்டிதர் எஸ்.இளமுருகன் இதனைப் பொறுப்பேற்று கல்லூரியின் மகுட வாசகத்தையும் கீதத்தையும் இயற்றிக் கொடுத்தார். பாடசாலையின் முதலாவது அதிபராக செல்வி.பத்மாசனி ஆறுமுகம் பொறுப்பெற்று கல்லூரியின் அபிவிருத்திக்கும் தன்னை அர்ப்பணித்தார். க.பொ.த.உயர்தர வகுப்புகள் கலை விஞ்ஞான பிரிவுகள் ஆய்வு கூட வசதிகள் என்பவற்றைப் பெற்றுக் கொடுத்து மாணவர்களின் ஒழுக்கம் தொடர்பாக தனது பணியைச் செவ்வனே ஆற்றினார்

அதனைத் தொடர்ந்து 1971 ஆம் ஆண்டு திருமதி.புவனேஸ்வரி சச்சிதானந்தம் பாடசாலையின் அதிபராகப் பொறுப்பேற்று உயர்தர வகுப்பில் மனையியல் பிரிவையும் மாணவர்களுக்கான குடிதண்ணீர் வசதிகள் மற்றும் வடபுறமாடிக்கட்டட வசதிகள் என்பவற்றையும் பெற்றுக் கொடுத்தார். (தொடரும்)

# இலங்கைக்கு எதிராகப் பிரேரணை மக்களைத் துரத்தும் வெள்ளை வான்

### விஜிதஹேரத் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு,மார்ச் 16

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராகப் பிரேரணை நிறைவேற்றப்படவுள்ள நிலையில் வெள்ளை வான்களில் மக்கள் கடத்தப்படுகின்றனர் என்று ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் குற்றம் சாட்டியுள்ளார்.

இந்த நிலையில், எதிர்க்கட்சி உறுப்பினர்களை மட்டுமன்றி ஆளும் கட்சி உறுப்பினர்களையும்வெள்ளை வான் துரத்துவதாக அவர் தெரிவித்தார். கொலன்னாவை நகரசபைத் தலைவரை கடத்த முற்பட்ட இராணுவத்தினரை மக்கள் மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். ஆனால் உயர் பொலிஸ் அதிகாரிகள் திடீரென குறித்த இராணுவத்தினரை விடுதலை செய்துள்ளனர் என்று அவர் கூறினார்.

**எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மட்டுமன்றி ஆளும் கட்சி உறுப்பினர்களையும் வெள்ளைவான் துரத்துவதை விட்டு வைக்கவில்லை.**



எந்தவித பதிவுகளும் இன்றி சந்தேகநபர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களை கைது செய்ய வெள்ளை வான்கள் பயன்படுத்த வேண்டிய அவசியமில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வரும் தருணத்தில், இவ்வாறு முட்டாள்தனமான செயற்பாடுகளில் அரசு ஈடுபட்டு வருகின்றது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ச)

## பிச்சை எடுக்க பஸ்களில் தடை

### நடவடிக்கை எடுக்க தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் கோருகிறது

கொழும்பு, மார்ச் 16

பஸ்களில் பிச்சையெடுப்பதை முற்றாக நிறுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

பஸ்களில் பிச்சை எடுப்பது தொடர்பில் பொலிஸ்மா அதிபருக்கு தெரியப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மேற்படி சங்கம் தெரிவித்துள்ளது. பஸ்களில் பிச்சை எடுப்பதைத் தொழிலாகக் கொண்டுள்ள பிச்சைக்காரர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

மோட்டார் வாகனக் கட்டளைச் சட்டத்துக்கு அமைய பஸ்களில் பிச்சை எடுக்க நிற்பது சட்டவிரோதமானது என்று தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார். கடந்த 12 ஆம் திகதி நாரஹேன்பிட்டியவிலுள்ள மகளிர் ஆய்வு மையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (ச-22)

## ஒரு கதிர்வீச்சு சாதனத்தை நம்பியே இலங்கையில் உள்ள புற்றுநோயாளர்

### வைத்தியர் வெளியிடும் அதிர்ச்சித் தகவல்

கொழும்பு, மார்ச் 16

இலங்கை முழுவதிலும் உள்ள புற்றுநோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு ஒரே ஒரு நவீன கதிர்வீச்சு சிகிச்சை சாதனமே உள்ளது.

புற்றுநோயாளர்கள் நாட்டில் அதிகரித்து வருகின்றபோதும் அவர்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்குத் தேவையான கதிர்வீச்சு சாதனங்கள் இல்லாதிருக்கின்றன. இதனால் காலாவதியாக பழைமையான கதிர்வீச்சு சிகிச்சை சாதனங்களைப் பயன்படுத்த வேண்டியிருப்பதால் புற்றுநோயாளர்கள் பக்க விளைவுகளுக்கு இரையாகும் அபாயநிலை உருவாகியுள்ளது என்று மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையின் வைத்திய நிபுணர் மஹேந்திர பெரேரா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாடு முழுவதிலும் உள்ள புற்றுநோயாளர்களுக்குச் சிகிச்சைகளை வழங்குவதற்கு குறைந்த பட்சம் 18 கதிர்வீச்சு சிகிச்சைச் சாதனங்களாவது தேவைப்படுகின்றன.

ஆனாலும் தற்போது நாட்டில் உள்ள அனைத்து புற்றுநோயாளர்களுக்கும் சிகிச்சை அளிப்பதற்கு நவீன கதிர்வீச்சு சிகிச்சை சாதனம் ஒன்று மட்டுமே இருக்கின்றது.

மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையில் உள்ள அந்த ஒரேயொரு நவீன கதிர்வீச்சு சிகிச்சைச் சாதனத்தைவிட மஹரகமவிலும் ஏனைய வைத்தியசாலைகளிலும் பாவனையில் உள்ள கதிர்வீச்சு சாதனங்கள் 30 ஆண்டுகள் பழைமையானவை.

அவற்றைப் பயன்படுத்துவது நோயாளர்களுக்கு ஏற்புடையதல்ல.

எனவே நவீன கதிர்வீச்சு சிகிச்சைச் சாதனங்களைப் பெற வேண்டிய அவசியம் தற்போது எழுந்துள்ளது.- என்றார். (ங-22)



மாத்தறை சமாதி சமூக அபிவிருத்தின் ஏற்பாட்டில் இருதய நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளைக் குணப்படுத்த நிதி சேகரிக்கும் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனையொட்டி ஜனசரன புனர்ஜீவ நிதியத்தின் தலைவர் சோமா எதிரிசிங்ஹ மாத்தறை சமாதி அபிவிருத்தி மன்றத்தின் தலைவர், முகாமைத்துவப் பணிப்பாளர், மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோருக்கு அதன் முதலாவது அனுசரணை சார்ந்த பங்கேற்பை வழங்கினார். நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரன அதனைப் பெற்றுக் கொள்கிறார். (ச)

## மாணவருக்கு தலைமைத்துவ பயிற்சி

கொழும்பு, மார்ச் 16

பல்கலைக்கழகங்களுக்கு புதிதாக அனுமதிக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சித் திட்டம் எதிர்வரும் 20ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

28 மத்திய நிலையங்களில் மூன்று வாரங்களுக்கு மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி வழங்கப்படவுள்ளது என்று உயர் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இராணுவ, கடற்படை, விமானப்படை, பொலிஸ் மற்றும் மாணவர் படை முகாம்களில் பல்கலைக் கழக மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி வழங்கப்படும் என்று அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன கூறியுள்ளார்.

கடந்த முறையில் ஏற்பட்ட குறைபாடுகளை நீக்கிச் சகல தரப்பினரதும் ஆலோசனைக்கேற்ப இம்முறை தலைமைத்துவப் பயிற்சித் திட்டத்தை மேலும் சிறப்பாக முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த முறை பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுள்ள சுமார் 22 ஆயிரம் மாணவர்களில் பத்தாயிரம் பேர் இந்த மாதம் ஆரம்பமாகும் முதற்கட்ட தலைமைத்துவப் பயிற்சித் திட்டத்தில் இணைந்து கொள்ள உள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## மேர்வினுக்கு எதிரான விசாரணைகள் பூர்த்தி

கொழும்பு,மார்ச் 16

களனி பிரதேச சபை உறுப்பினர்களுக்கும் அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலைமை குறித்த விசாரணைகள் பூர்த்தியாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த இரண்டு தரப்பினரும் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளனர். இந்த முறைப்பாடுகள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் களனி பிரதேசசபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

அமைச்சர் மேர்வின் சில்வாவிடமும் வாக்கு மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த விசாரணை அறிக்கை பொலிஸ்மா அதிபரிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

**அமைச்சர் மேர்வின் சில்வா மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஒழுக்காற்று விசாரணைகளை நடத்தியுள்ளது.**

இதேவேளை, அமைச்சர் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஒழுக்காற்று விசாரணைகளை நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## மீண்டும் தலைதூக்கும் வெள்ளை வான் கடத்தல்

### மனித உரிமை ஆர்வலர்கள் கவலை

கொழும்பு,மார்ச் 16

இலங்கையில் மீண்டும் வெள்ளை வான் கடத்தல் சம்பவங்கள் தொடர்பான அச்சுறுத்தல்கள் அதிகரித்துள்ளன என்று மனித உரிமை ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கடந்த சில மாதங்களில் காணாமற்போன 32 பேரில் 5 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர். பெண்ணொருவர் உட்பட 7 பேர் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். மிகுதி 20 பேரின் நிலைமை என்னவென்று தெரியவில்லை என்று மனித உரிமை ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

காணாமற்போனவர்களில் பலர் வெள்ளை வான் ஆயுததாரிகளால் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக நேரில் கண்டவர்கள் கூறுகின்றனர்.

மனித உரிமை செயற்பாட்டாளர்கள், வர்த்தகர்கள் போன்றோரும் குற்றக் கும்பல்களைச் சேர்ந்தவர்கள் என்று சந்தேகிக்கப்படுவோருமே இவ்வாறு கடத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

கடந்த மாதம் வெள்ளை வான் ஆயுததாரிகளால் கடத்திச் செல்லப்பட்ட ராமசாமி பிரபாகரன் என்ற தமிழ் வர்த்தகர் தொடர்பில் எவ்வித தகவல்களும் இதுவரை இல்லை என்று அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர்.

கொழும்பின் புறநகர் பகுதியான கொலன்னாவையில் நகரசபைத் தலைவர், தனது சகோதரரைக் கடத்திச் சென்று கொன்ற வெள்ளை வான் ஆயுததாரிகளே அண்மையில் தன்னையும் கடத்த முயன்றதாகக் கூறுகிறார்.

இந்த வெள்ளை வானில் இராணுவத்தினரே பயணித்ததாக ஒப்புக்கொண்ட பாதுகாப்புப் பிரிவினர் கடத்தல்முயற்சி தொடர்பான குற்றச்சாட்டை மறுத்துள்ளனர்.

ஆனால் அரசின் அனுசரணை இன்றி இவ்வாறான கடத்தல் சம்பவங்கள் தலைநகரில் நடக்க வாய்ப்பில்லை என்று எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்தன தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கையில் கடத்தல் நடவடிக்கைகள் தொடர்பில் விசாரணைகள் நடந்துவருவதாகவும் அரசின் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.(ச)

## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் சாவு

கொழும்பு, மார்ச் 16

மாதுருஓய தேசிய வன பூங்காவின் ஹேனானிகல பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம்பெற்றதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கும் மற்றுமொரு குழுவுக்கும் இடையில் இந்தத் துப்பாக்கிச் சூடு இடம்பெற்றதாக அவர் குறிப்பிட்டார். (ச)

## இதயஅஞ்சலி



எமது பழைய மாணவர்சங்கத்தின் நிர்வாக உறுப்பினர் வி.கே.சண்முகலிங்கம் அவர்களின் அன்பு மனைவி

**திருமதி லலிதா சண்முகலிங்கம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(C/9157)(6-9-8) பழைய மாணவர் சங்கம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

---

AFRICAN MOVIES - JAFFNA

**Alliance Francaise de Jaffna**

cordially invites you to the screening of

**THE LION-CHILD**

A film by Patrick Grandperret (France)

*This is the tale of an African slave-child and a lioness, born the same day*

*A movie with real-life lions.* (1993, 86 min.)

on

***Saturday 17 March 2012 at 2:00 p.m.***

at

***Alliance Francaise de Jaffna,***

61, Kachcheri-Nallur Road, Jaffna

Free entrance. French with English subtitles. Much convenient for children too. (15701)(2-6-9)

---

## இளங்கலைஞர் மன்றம்
## இசை விழா - 2012

இடம் : மன்றக் கலாமண்டபம்

காலம் : மார்ச் மாதம் 16,17,18

நேரம் : பி.ப 3.00 தொடக்கம்

★. பாட்டு

★. வாத்தியபிருந்தா

★. பரதநாட்டியம்

★. இசை நாடகம்

### சிறப்பு நிகழ்ச்சி

17.03.2012 காலை 9.00 மணி தொடக்கம் சற்குரு ஸ்ரீ தியாகராஜா சுவாமிகளின் 165 ஆம் ஆண்டு ஆராதனை விழா

✱. மூத்த மற்றும் இளம் நாதஸ்வர - தவில் வித்துவான்களும்

✱. மூத்த மற்றும் இளம் பாடகர்களும் கலந்து கொள்வர்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(C/9159)(6-9-8) மன்ற நிர்வாகம்.

---

## தேவை

**வடமாகாணத்தில் சிறப்பாக இயங்கி வரும் நிறுவனம் ஒன்றுக்கு கீழ்வரும் வெற்றிடங்களிற்கு தகைமையுள்ள வேலையாள்கள் தேவை**

### 1. களஞ்சிய காப்பாளர் (ஆண்)

✱. கல்வித்தகைமை :- க.பொ.த உயர்தரம் சித்தியெய்திய கணினி அறிவு

✱. விசேட தகைமை :- யாழ். மாநகரசபை/நல்லூர் பிரதேச சபை/சண்டிலிப்பாய் பிரதேச சபை/ உடுவில் பிரதேசசபைக்குட்பட்டவராக இருத்தல்வேண்டும்.

✱. வயதெல்லை :- 25 மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்

✱. சம்பளம் :- அடிப்படை - 17,500/=

### 2. கணினி இயக்குநர் (பெண்)

✱. கல்வித்தகைமை :- க.பொ.த உயர்தரம் சித்தியெய்திய, ஆங்கில அறிவுடன் கூடிய கணினி அறிவு உடையவராக இருத்தல் வேண்டும்.

✱. விசேட தகைமை :- தென்மராட்சி பிரதேசத்தை சேர்ந்தவராக இருத்தல் விரும்பத்தக்கது

✱. வயதெல்லை :- 21 - 28 உட்பட்டவராக இருத்தல்வேண்டும்

✱. சம்பளம் :- அடிப்படை - 13,500/=

விண்ணப்பங்களை 24.03.2012 முன்னதாக அனுப்பவும்

அனுப்பவேண்டிய முகவரி :- விளம்பர இல- 4234

மே/பா உதயன்

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

(15695)(6-7-8)

---

## அ.அட்டைகள் கண்டெடுப்பு

வரணி, மார்ச் 16

வரணி கிட்டிவேரம் கண்ணகை அம்மன் கோயிலடியில் கண்டெடுக்கப்பட்ட இரண்டு தேசிய அடையாள அட்டைகள் வரணி-இயற்றாலை கிராம அலுவலர் நா.இராசகுமாரனிடம் கைய ளிக்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை வீ.எம். ஒழுங்கை யைச் சேர்ந்த விஜயசிங்கம் ஜசிந்தன், விஜயசிங்கம் தவிந்தன் ஆகியோரின் தேசிய அடையாள அட்டைகளே இவ்வாறு கண்டெடுக்கப்பட்டுள்ளன.

தவறவிட்டவர்கள் கிராம அலுவலரிடம் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## சுவிசேஷ மாநாடு

யாழ்ப்பாணம், மார்ச் 16

இயேசு ஜீவிக்கிறார் ஊழியத்தின் 34 ஆவது வருட சுவிசேஷ மாநாடு ஆசீர்வாதப் பெருவிழா யாழ்ப்பாணம் நகரசபை மைதானத்தில் இன்றும் நாளையும் நாளை மறுதினமும் மாலை 5 மணிக்கு நடைபெற உள்ளது. (வ-16)

## தீப்பாசறை

பேடன் பவல் தினத்தையொட்டி கிளிநொச்சிமாவட்ட சாரணர் சங்கங்கள் இணைந்து தீப் பாசறையை அண்மையில் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடத்தினர்.

வித்தியாலய அதிபர் அ.பங்கயற் செல்வன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீநிவாசனும் சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல், கேணல் சுனில் சோமவீர ஆகியோரும் கலந்து கொண்டனர். (வ-9)

## பயனாளிகளுக்கு தென்னம்பிள்ளைகள்

கடந்த வாரம் 7ஆம் திகதி மாவை கந்தன் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஊடாக தெரிவு செய்யப்பட்ட மீளக் குடியமர்ந்த பயனாளிகளுக்கு சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினரால் தென்னம்பிள்ளை, எலுமிச்சை, தேக்கு ஆகிய பயன்தரு கன்றுகள் மல்லாகம் மகாவித்தியாலயத்தில் வைத்து வழங்கப்பட்டது. சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் எஸ்.நடராசா இதனை வழங்கினார். அண்ணா கோப்பி தொழிலகத்தின் அனுசரணையில் இந்நிகழ்வு இடம்பெற்றது. (வ-36)

---

**வீடு வாடகைக்கு உண்டு**

கல்வியங்காடு பெற்றோல் செற்றுக்கு அருகில் நான்கு அங்கத்தவர்கள் தங்கக் கூடிய சகல வசதிகளுடன் வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு : 0779963454

---

**காணி விற்பனைக்கு**

கோப்பாய் வீதியில், உரும்பிராய் சந்தியிலிருந்து ½ km தூரத்தில் கற்புலம் வீதியில், 8½ பரப்புக்காணி குழாய்க் கிணற்றுடன் விற்பனைக் குண்டு.

தொடர்பு : 0750399516

(15648)(6-7-8) (தரகர் தேவையில்லை)

---

**காணி விற்பனைக்கு**

கோப்பாய்ச் சந்திக்கு மிக அருகில் உரும்பிராய் வீதியில் ஐந்து பரப்புக் காணி கிணற்றுடன் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 021 300 1432

---

**வேலையாள்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் எமது ஐஸ்கிறீம் உற்பத்தி, யூஸ் உற்பத்தி நிலையத்திற்கு வேலை செய்யக்கூடிய பெண்பிள்ளைகள் தேவை. உடன் தொடர்புகொள்ளுங்கள்

(15696)(6-7-8) தொடர்பு : 021 4905977

---

**வீடு தேவை**

இணுவில், மருதனார்மடம், சுன்னாகம் ஆகிய பிரதேசத்தில் K.K.S. வீதியில் அல்லது கிட்டிய தூரத்தில் சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீடு வாடகைக்குத் தேவை. மாதவாடகை 10,000/= (பத்தாயிரம்) வரை தரப்படும்.

(15697)(6-7-8) தொடர்பு : 077 0440570

---

**வீடு / Annex வாடகைக்கு தேவை**

யாழ்ப்பாண பட்டணத்திற்கருகில் (3Km தூரத்திற்குள்) வீடு / Annex வாடகைக்கு தேவை (Attached wash-room அத்தியா வசியமானது)

தொடர்பு : 0771096842

---

## உள மகிழ்வுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்
### செல்லமுத்து ஸ்ரீநிவாசன்



தென்மராட்சிப் பிரதேசத்தின் ஆற்றல் மிகு பிரதேச செயலராக 09 ஆண்டுகள் சிறப்பு மிக்க சேவையை நிறைவுடன் வழங்கி பதவி உயர்வு பெற்று கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக கடமை புரிந்து வரும் அன்புக்கும் பெருமதிப்புக்குமுரிய உயர் **திரு.செல்லமுத்து ஸ்ரீநிவாசன்** அவர்கள் 01.01.2012 முதல் இலங்கை நிர்வாக சேவையில் விசேட தரத்திற்கு உயர்வு பெற்றுள்ளமையிட்டு உள மகிழ்வுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

நிர்வாக சபை, புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையம், சாவகச்சேரி நகர்.

---

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்: 11 * 10 * 1983



மறைவு: 18 * 12 * 2011

**அமரர் நவரத்தினம் ஜெயமோகன்**

கடந்த (18.12.2011) அன்று சிவபதமடைந்த எமது குலவிளக்கு அமரர் நவரத்தினம் ஜெயமோகன் அவர்களின் சிவபத பேறு குறித்து எமது துயரில் நேரில் பங்கு கொண்டவர்களிற்கும் தொலைபேசியூடாகவும் தபாலூடாகவும் அனுதாபச் செய்தி தெரிவித்தவர்களிற்கும் மற்றும் பலவகைகளில் உதவியவர்களிற்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். அத்துடன் இன்று (16.03.2012) வெள்ளிக் கிழமை நடைபெறும் வீட்டுக் கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல-01,கல்மடுநகர், கிளிநொச்சி. (14065) (6-9-12) குடும்பத்தினர்.

---

## முதலாம் வருட நினைவஞ்சலி

அமரர்

**கனகசபை சிவபாலன்**

(சிற்சபேசன்)

(முன்னாள் வெங்காய வியாபாரி)



மலர்வு: 08.06.1953

உதிர்வு: 27.03.2011

திதி: அபரபக்கநவமி

அன்புத் தெய்வமே அப்பா எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உங்கள் பசுமையான நினைவுகள் என்றும் எம்மை விட்டு அகலாது

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்:

சந்திரவதனா (மனைவி), சிவமுகுந்தன் (மகன்)

சப்பச்சி மாவடி, சாவகச்சேரி. (14686)(2-7-8)

---

## ஆண்டு இரண்டின் நினைவிலே



**தளையசிங்கம் நவரத்தினராசா**

(ஓய்வுபெற்றசெயலாளர், நகரசபை, சாவகச்சேரி)

தோற்றம் 30★12★1932

மறைவு 07★04★2010

திதி: அபரபக்கநவமி 16.03.2012

பாசமாய் பெற்றெடுத்து எம்மை
பண்புடன் வளர்த்தவரே
ஈராண்டு சென்றாலும்
வெள்ளை உடை உடுத்து
வீறுநடை போட்ட உம்
விம்பமது எம்மனதை விட்டு நீங்காது

என்றும் நினைவில் குடும்பத்தினர்.

பெருங்குளம், மட்டுவில் வீதி, சாவகச்சேரி. (15683)(6-9-8)




யாழ். மாவட்டத்தில் ஓரளவான மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை காணப்படும். மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் கடும் காற்று வீசலாம்.

## நாளை வகுப்புக்கள் இல்லை

அரச கருமமொழிகள் திணைக்களத்தினால், மானிப்பாய் இந்துக் கல்லூரியில், அரச ஊழியர்களுக்கு நடத்தப்பட்டு வந்த வகுப்புக்கள் நாளை சனிக்கிழமை மாத்திரம் இடம்பெறாதென்றும் வழமை போன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

# இளைஞர் சேவைகள் மன்றம் சுய தொழிலுக்கு கடன் உதவி

**செபி திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்பற்ற இளைஞர், யுவதிகளுக்கு சுயதொழில் கடன் வழங்க இருக்கின்றது. இத் திட்டத்தின்படி மிகக் குறைந்த வட்டியுடன் கூடிய மொத்த தொகையாக 2, 50 000 ரூபாவைப் பெறமுடியும்.**

யாழ்ப்பாணம், மார்ச் 16

யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற நிஸ்கோ பிரிவினால், அரச வங்கிகளின் ஊடாக, செபி திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் வசிக்கின்ற வேலை வாய்ப்பற்ற இளைஞர் யுவதிகளுக்கு சுயதொழில் கடன் வழங்கப்பட இருக்கின்றது. இந்த திட்டத்தின்படி மிகக் குறைந்த வட்டியுடன் ஆகக் கூடிய மொத்த தொகையாக 2,50000 ரூபாவைப் பெற முடியும்.

18 வயதுக்கும் 30 வயதுக்கு இடைப்பட்ட இருபாலாரும் இந்தக் கடனைப் பெற்றுக்கொள்ள முடியும். விண்ணப்பதாரிகள் தாம் மேற்கொண்ட சுயதொழில் சார் பயிற்சியினை தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்(என்.ஐ.எஸ்.சி) தொழிற் பயிற்சி அதிகார சபை(வி.ரி.ஏ), தேசிய பயிலுநர் மற்றும் பயிற்றுவிக்கும் நிறுவனம், (என்.ஏ.ஐ.ரி.ஏ) தொழில் நுட்பக் கல்லூரி மற்றும் பயிற்றுவிக்கும் திணைக்களம், ஜேர்மன் தொழில் நுட்பக் கல்லூரி இவற்றில் ஏதாவது ஒரு நிறுவனத்தில் பயின்று தொழில் நுட்பத் தரச் சான்றிதழ் (என்.வி.கியூ) பெற்றிருத்தல் வேண்டும். அல்லது தேசிய தொழில் நுட்பத் தரச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் சுய தொழிலை ஆரம்பித்திருத்தல் அல்லது ஆரம்பிக்கத் தயாராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரி சுயமாகத் தயாரித்த விண்ணப்பத்தை 30 ஆம் திகதிக்கு முன்னர் பொது முகாமையாளர் (நிஸ்கோ), தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், வீடமைப்புக் கட்டடம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். (ந-16)

## தேனீக்கள் போல....

தேனீக்கள் மலர்களில் உள்ள தேனை உற்சாகத்துடனும், சுறுசுறுப்புடனும் சேகரிக்கின்றன. இவ்வாறு தேனீக்கள் மரத்துக்கு மரம் தாவி எல்லா மரங்களிலுள்ள பூக்களிலிருந்தும், தேனைச் சேகரிப்பதனூடாக மகரந்தச் சேர்க்கை ஏற்படுவதால் மரங்களுக்கு நன்மை ஏற்படுகின்றது. அதேநேரம் தேனீக்கள் சேகரித்த தேனை மனிதன் மருத்துவத் தேவைகளுக்குப் பயன்படுத்தி நன்மை அடைகின்றான். மொத்தத்தில் மரங்களுக்கு மனிதர்களும் தேனீக்களால் நன்மையே கிடைக்கின்றன.

ஈக்கள் எல்லா இடங்களிலும் பறப்பதன் மூலம் அசுத்தத்தை எல்லா இடங்களிலும் பரப்புகின்றன. இதனால் மனிதனுக்கு பல வகையான தீமைகள் ஏற்படுகின்றன. முக்கியமாக நோய்க் காவிகளாக இந்த ஈக்கள் காணப்படுகின்றன. ஆகவே மற்றவர்களுக்குப் பயன்படும் தேனீக்கள் போல மனிதர்களாகிய நாம் வாழவேண்டும். இவ்வாறு மற்றவர்களுக்குப் பயன்படவேண்டுமென்று ஒவ்வொருவரும் சிந்திப்பதால் சமுதாயத்தில் பல பிரச்சினைகள் தாமாகவே மறைந்துவிடும். அதேநேரம் அனைவருக்கும் நன்மைகள் நாடிவரும்.

ஞானக்கதிர்

## கலை, இலக்கியப் போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 16

2012 தேசிய கலை இலக்கியப் போட்டியில் கலந்து கொள்ள சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் போட்டியில் பாடசாலை மட்டப் போட்டிகள் கோட்டக் கல்வி அதிகாரி ஊடாக, பாடசாலை அதிபர்களுக்கு அறிவிக்கப்படும்.

திறந்த பிரிவுக்கான போட்டியாளர்கள் சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் போட்டிக்கானவிண்ணப் பங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

திறந்த பிரிவுக்கான போட்டியாளர்களின் ஆக்கங்கள் ஏப்ரல் 15 ஆம் திகதிக்கு முன்பாக சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் ஒப்படைக்க வேண்டும் என சண்டிலிப்பாய் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ந-16)

## ஆசிரிய கலாசாலைகளில் மாணவர்களை உள்வாங்கிக் கொள்ள நேர்முகத் தேர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 16

ஆசிரிய கலாசாலைகளில் ஆசிரிய மாணவர்களை உள்வாங்கிக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் 22 ஆம் திகதி தொடக்கம் நடைபெறவுள்ளன.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் எதிர்வரும் 22 ஆம் திகதி ஆரம்பக்கல்வி பாடநெறிக்கும், 23 ஆம் திகதி வர்த்தகம், சித்திரம், இந்துசமயம், கிறிஸ்தவம், றோமன் கத்தோலிக்கம் ஆகிய பாடநெறிகளுக்கும், 24 ஆம் திகதி தமிழ், மனைப்பொருளியல், நடனம், சங்கீதம், கடல்வளத் தொழில் நுட்பம், விஞ்ஞானம், கணிதம், கை வினைத் தொழில் நுட்பம் ஆகிய பாடநெறிகளுக்கும், 25 ஆம் திகதி ஆங்கிலப் பாடநெறிக்கும் தேர்வுகள் நடைபெற இருக்கின்றன.

நேர்முகத் தேர்வின்போது பிரகடனப் படிவம், பிறப்புச் சான்றிதழ் முதல் நியமனக் கடிதம், தேசிய அடையாள அட்டை, கடமையேற்றமையை உறுதிப்படுத்தும் சம்பவத் திரட்டு புத்தகப் பிரதி, கல்வி மற்றும் தொழில் தகைமைச் சான்றிதழ்கள், பதிவின் மூலம் இலங்கைப் பிரஜையாயின் அதனை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் என்பவற்றின் மூலப்பிரதிகளையும் போட்டோப் பிரதிகளையும் சமர்ப்பிக்க வேண்டும்.

பட்டதாரிகளாகவுள்ள ஆசிரிய உதவியாளர்கள் கலாசாலைப் பயிற்சியைப் பெற்றுக்கொள்வது அவசியமற்றது. எனினும் இந்தப் பயிற்சி தமக்குத்தேவை எனக் கருதுபவர்கள் தொடர்பில் மாகாணக் கல்விச் செயலாளர்களின் விதந்துரையின் அடிப்படையில் நேர்முகத்தேர்வுக்குத் தோற்றுவதை அவர்கள் முடிவு செய்யலாம்.

இதேவேளை வன்னியில் போர்ச் சூழல் காரணமாகப் பாதிக்கப்பட்டு பயிற்சி பெறாத ஆசிரியர்கள் மற்றும் தனியார் பாடசாலை ஆசிரியர்களுக்கான எல்லாப் பாடங்களுக்குமான நேர்முகத் தேர்வுகள் 25 ஆம் திகதி நடைபெற இருக்கின்றன எனக் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் தெரிவித்துள்ளார். (ம-16)

### இலவச அழகுக்கலை பயிற்சி

ஒறிபிளேம் (Oriflame) தனது 45 ஆவது வருடத்தை முன்னிட்டு இலவச அழகுக்கலை பயிற்சியை ஆரம்பிக்கவுள்ளது. (Facial, Gold Facial, Pedicure, Manicure, Hairstyle, BridalMake-Up...) செய்முறை விளக்கத்துடன் இடம்பெற்று பயிற்சியின் முடிவில் சர்வதேச சான்றிதழ்கள் வழங்கப்படும்.

இடம் - 187/30, யூனியன் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம் (சத்திரச்சந்தி அருகில் கொட்டடி வீதி)

(15627)(6-9-8) தொடர்புகளுக்கு : 077 0784428

### பணிப்பெண் தேவை

சகல வீட்டு வேலைகளையும் செய்வதற்கு வீட்டுப் பணிப்பெண் தேவை.

தொடர்புக்கு : 077 4784370

### தவறிவிட்டது

யாழ்ப்பாணம், பூநகரிப் பாதையில் ரிப்பர் வாகனத்தின் NP.LJ.4565 இலக்கத் தகடு தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: 077 7040214, 0777740793.

### வீடு விற்பனைக்கு

கோண்டாவில் கிழக்கு, பழனி ஆண்டவர் ஒழுங்கை, இருபாலை வீதியில் வீட்டுடன் கூடிய 10 பரப்புக் காணி 50 தென்னை மரங்களுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0784671111

### வேலையாள்கள் தேவை

எமது ஸ்தாபனத்திற்கு போட்டோ சொப் டிசைனிங் தெரிந்த, அனுபவமுள்ள ஆண், பெண் வேலையாள்கள் தேவை. விரும்புபவர்கள் தமது சுய விவரங்களுடன் காலை 8.30 - 5.00 மணிக்கிடைப்பட்ட நேரத்தில் நேரில் தொடர்பு கொள்ளவும். வெளி மாவட்டத்தில் இருந்து வந்து ஸ்தாபனத்தில் தங்கி வேலைபுரிய விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

ஒளி அழகன் வீடியோ அன் ஸ்ருடியோ
நேரில் தொடர்பு கொள்ளவும். வெளி மாவட்டத்தில் இருந்து வந்து ஸ்தாபனத்தில் தங்கி வேலைபுரிய விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

ஒளி அழகன் வீடியோ அன் ஸ்ருடியோ

நேரில் தொடர்பு கொள்ளவும். வெளி மாவட்டத்தில் இருந்து வந்து ஸ்தாபனத்தில் தங்கி வேலைபுரிய விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

ஒளி அழகன் வீடியோ அன் ஸ்ருடியோ

நேரில் தொடர்பு கொள்ளவும். வெளி மாவட்டத்தில் இருந்து வந்து ஸ்தாபனத்தில் தங்கி வேலைபுரிய விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

ஒளி அழகன் வீடியோ அன் ஸ்ருடியோ

நேரில் தொடர்பு கொள்ளவும். வெளி

### 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
31 ★ 03 ★ 1923

அம்மன் அடியில்
12 ★ 04 ★ 2004

திதி : 16.03.2012

அமரர் பண்டாரி
வேலாயுதம்
(மட்டுவில் தெற்கு சாவகச்சேரி. வேரக்கேணியடி)
2004

அமரர் பண்டாரி
வேலாயுதம்
(மட்டுவில் தெற்கு சாவகச்சேரி. வேரக்கேணியடி)
2004

அமரர் பண்டாரி
வேலாயுதம்
(மட்டுவில் தெற்கு சாவகச்சேரி. வேரக்கேணியடி)
2004

அமரர் பண்டாரி
வேலாயுதம்
(மட்டுவில் தெற்கு சாவகச்சேரி. வேரக்கேணியடி)

### 25 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
24 ★ 06 ★ 1926



இறப்பு
05 ★ 04 ★ 1987

# தருவது வித்தியா — இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** அலைச்சல் இல்லாமல் இருந்த இடத்தில் இருந்தே, சில வேலைகளை முடிப்பீர்கள். ஓய்வாக கிடைக்கும் நேரத்தை வீணடித்து விட்டு, பின்னர் அவசரமாகச் செயற்படுவீர்கள். பிரியமான ஒருவர் மூலம் உதவிகள் கிடைத்து, பெருமை அடைவீர்கள். வழக்கத்துக்கு மாறாக கூடுதல் நேரம் தூங்கலாம். சிலர் கேட்ட உதவியைச் செய்து, அவர்களின் மனதில் இடம்பிடிப்பீர்கள்.

**இடபம்:** புதிய முயற்சிகளில் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். பற்றாக்குறையைத் தவிர்க்க செலவுகளில் நிதானம் காட்ட வேண்டும். பிறரை நம்பி ஒப்படைத்த வேலை முடிவடையாமல், அவற்றை நீங்களே செய்ய நேரிடலாம். உறவினர்கள், உங்களைப் பார்த்து பொறாமைப்படலாம். பிள்ளைகளின் ஏட்டிக்குப் போட்டியான செயற்பாடுகளால் எரிச்சல் அடையலாம்.

**மிதுனம்:** தண்டச் செலவுகளைக் குறைத்து சேமிப்பில் அக்கறை காட்டுவீர்கள். வரவேண்டிய பண வரவுகள் வரலாம். நீங்கள் கேட்காமலேயே, சில உதவிகள் உங்களுக்குக் கிடைக்க வாய்ப்பு உண்டு. குடும்பத்தினர் நலனில் அக்கறை காட்டுவீர்கள். மனதுக்கு சந்தோஷம் தரும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். ஆடை, ஆபரணங்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும்.

**கடகம்:** குடும்ப உறுப்பினர்களுடன் ஆலோசித்து, சில முக்கிய காரியங்களைச் செய்வீர்கள். மற்றவர்களும் ஆதாயம் பெறட்டும் என்ற எண்ணத்தில், சில விடயங்களில் விட்டுக்கொடுப்பீர்கள். கடந்த கால அனுபவம் ஒன்றை நினைத்துப் பார்ப்பீர்கள். நாடி வந்த ஒருவருக்கு இல்லை என்று சொல்லாமல் உதவி செய்வீர்கள். புதியவர்கள் அறிமுகம் கிட்டும்.

**சிங்கம்:** மற்றவர்களின் செயற்பாடுகளைப் பின்பற்றாமல், நீங்கள் தனித்தன்மையோடு செயல்படுவீர்கள். கடந்த காலத்தில் விமர்சித்த ஒருவரே, இப்போது உங்களைப் பாராட்டலாம். பிறரை நம்பி யாருக்கும் வாக்குக் கொடுக்க வேண்டாம். தூக்கமின்மையால் அவதிப்படலாம். சிலரிடம் கோபம், வேகமாகப் பேசுவீர்கள். முடிவுகள் எடுப்பதில், குழப்பம், தடுமாற்றம் நேரும்.

**கன்னி:** வீண் வாக்குவாதங்களைத் தவிர்க்க வேண்டும். உங்களின் சில வேலைகளை, மற்றவர்களை நம்பி ஒப்படைப்பீர்கள். தொழில் ரீதியாக வெளியூர் பயணங்கள் செல்லலாம். பெண்கள் உடன் பிறந்தவர்களின் உதவிகளைப் பெறலாம். சிறு உடல் உபாதைகளால் உற்சாகம் குறைந்து, சோர்வு, வெறுப்பு ஆள்கொள்ளும்.

**நாளை**

பங்குனி 04 சனிக்கிழமை 17.03.2012
திதி: தசமி சித்தம் மு.இ 07.54 வரை
நட்சத்திரம்: பூராடம்
சுபநேரம்: 03.19- 04.49 வரை,
ராகு காலம்: 09.19 - 10.49 வரை

**துலாம்:** மற்றவர்களுக்காக சில விடயங்களில் விட்டுக் கொடுப்பீர்கள். கடனாகக் கொடுத்த பணம் திரும்பி வரலாம். காலை முதல் மாலை வரை பம்பரமாகச் சுழன்று பணியாற்றுவீர்கள். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். அரசு தொடர்பான காரியங்கள், சுலபமாக முடிவுக்கு வரலாம். நீண்ட நாள் எண்ணங்கள் நிறைவேறும்.

**விருச்சிகம்:** பணம் கொடுத்தும் சில விடயங்களில் கஷ்டங்களைச் சந்திக்கலாம். கவனக்குறைவான செயற்பாடுகளால் சில வேலைகளை ஒன்றுக்கு, இரண்டு முறை செய்யலாம். சக ஊழியர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் விலகி, பாசம் உண்டாகும். வழக்கத்துக்கு மாறாக கூடுதல் நேரம் வேலை செய்யலாம். குடும்பச் செலவுகள் அதிகரிக்கும்.

**தனுசு:** பாதகமாகுமோ என நினைத்த காரியம் ஒன்று, சாதகமாக அமைந்து விடலாம். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தர்கள் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். பெண்கள் தங்களுக்கு வேண்டிய பொருள்களை வாங்குவர். தவறு என்று தெரிந்தும் சில காரியங்களைத் துணிச்சலாகச் செய்வீர்கள்.

**மகரம்:** தொழில் ரீதியான நெருக்கடிகளுக்கு ஆளாகலாம். பணிபுரியும் சிலர், உடல் நலக்குறைவால் விடுமுறை எடுக்கலாம். கலைஞர்கள் திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். தொழில் ரீதியாக சிலர் கேட்ட உதவிகளைச் செய்வீர்கள். நீங்கள் நல்லவர் என்று நினைத்த ஒருவரே விரோதமாகச் செயற்படுவது கண்டு கவலை அடையலாம்.

**கும்பம்:** காலதாமதமாக சில வேலைகளை ஆரம்பித்தாலும், சரியான நேரத்துக்கு முடிப்பீர்கள். வியாபாரிகளுக்கு பணப்புழக்கம் கூடும். அரசியல்வாதிகள் சர்ச்சைக்குரிய பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். தந்தை தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். சில பொருள்களை அடமானம் வைத்து கடன் பெறலாம்.

**மீனம்:** உறவினர்கள், சிலர் உங்கள் மூலம் ஆதாயம் பெறலாம். தொழில் ரீதியாக புதிய ஒப்பந்தங்கள் போட மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. சகோதரர்கள் வழியில் உருவான சிரமங்கள் குறைந்து, நிம்மதி பெறுவீர்கள். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். உங்களை சிலர் பாராட்டிப் பேசலாம். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 7 | 4 | | 3 | | | 6 | 5 |
| | | | 1 | | | | | |
| 6 | 8 | | | | 5 | 3 | | 2 |
| | | 9 | | | | | | 7 |
| | | 3 | 7 | 2 | 4 | 5 | | |
| 7 | | | | | | 2 | | |
| 3 | | 8 | 2 | | | | 1 | 6 |
| | | | | | 3 | | | |
| 2 | 9 | | | 6 | | 8 | 5 | 3 |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 2 | 8 | 5 | .3 | 7 | 1 | 4 | 6 |
| 1 | 5 | 3 | 6 | 9 | 4 | 8 | 2 | 7 |
| 7 | 4 | 6 | 1 | 8 | 2 | 3 | 9 | 5 |
| 4 | 6 | 7 | 2 | 5 | 1 | 9 | 8 | 3 |
| 2 | 3 | 1 | 8 | 7 | 9 | 6 | 5 | 4 |
| 5 | 8 | 9 | 3 | 4 | 6 | 2 | 7 | 1 |
| 3 | 7 | 2 | 9 | 6 | 5 | 4 | 1 | 8 |
| 8 | 1 | 5 | 4 | 2 | 3 | 7 | 6 | 9 |
| 6 | 9 | 4 | 7 | 1 | 8 | 5 | 3 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், "பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.




# போர்க்கால நினைவுகள் நிழலாடிய 'வளைவு'...!

**1995** ஆம் ஆண்டு யாழ்ப்பாண இடப்பெயர்வை எவராலும் மறக்க முடியாது. விட்டதை விட்டபடியே, கையில் எடுத்ததை எடுத்துக்கொண்டு கால் கடுக்க நடந்தோம். உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஒட்டு மொத்த யாழ்ப்பாண சனமே ஒரு இரவில் இடம்பெயர்ந்தது. வெளிச்சம் தெரியாத ஒரு இரவில் விடியலைத் தேடி நடந்தோம். யாழ்ப்பாணம் வரவேற்கும் வளைவை மக்கள் அடையும் போது ஒரு ஆறுதல் மக்கள் செல்லும் பாதையைக் காட்டிக் கொண்டு இருந்தது. நாலா பக்கமும் வந்து ஒரே பாதையான செம்மணிப் பாதையை அடைந்த போது கூட்டம் ஒன்றானது. யாழ்ப்பாணம் வரவேற்கும் வளைவு எல்லோரையும் ஒன்றாக்கியது. பிரிய மனமில்லாத இவர்கள் ஒன்றாக நடந்தார்கள். வீதி நிரம்பி வழிய கால்கடுக்க அடி எடுத்து வைக்க முடியாமல் ஒருவாறு கால் எடுத்து வைத்து நகர்ந்தனர். யாழ்ப்பாணம் வரவேற்கும் வளைவு இவர்களை வழி அனுப்பிக் கொண்டிருந்தது. அப்பொழுது அந்த வளைவைக் கடக்கும் மக்கள் திரும்பிப் பார்த்துக் கொண்டே சென்றனர். எப்பொழுது மீண்டும் எங்களை இந்த வளைவு வரவேற்கும் என்று. அனைத்து மக்களையும் பாதுகாப்பாக அனுப்பி வைத்தது. இன்றும் இந்த வளைவைக் கடக்கும் போது அன்றைய அந்த நாள் நினைவு எமது மனதில் வந்துபோகும். இன்று அது உடைக்கப்பட்டு விட்டது.

புதிய வளைவு பழையதை மறக்க வைத்து தமிழ் மக்களின் நீண்ட நாள் எதிர்பார்ப்பையே இல்லாமல் செய்யவுள்ளது. கடந்த காலத்தில் ஒன்றுமே நடக்கவில்லை என்ற பரப்புரையை இதன் மூலம் வெளிக்காட்ட முயலலாம். குண்டுகள் பட்ட காயங்களுடனும் நிமிர்ந்து நின்றது. இந்த வகையில் போர் வடு சுமந்து நின்றாலும் தளராது எழுந்து விழுந்து விடாது நிமிர்ந்து நின்று யாழ்ப்பாண மக்களுக்கு வீரத்தை ஊட்டியது. எங்களுக்காக எத்தனை காயங்களை வளைவு வாங்கிக் கொண்டது. எமது போராட்ட அடையாளமாக காட்சி கொடுத்து நின்ற கடைசிச் சாட்சியும் இல்லாமல் போனது. வெளிநாடுகளில் போர் நடந்ததுக்கான அடையாளங்களைத் தாங்கி நிற்கும் கட்டடங்கள் இன்றும் பாதுகாப்பாக இருக்கின்றன. நினைவு கொள்ள வைக்கின்றன. புதிய கட்டடங்களை வேறு இடங்களில் கட்டுகிறார்கள். ஆனால் எமது மண்ணில் போராட்டம் நடந்ததுக்கான அடையாளத்தை தாங்கி நிற்கும் கட்டடங்கள் எல்லாவற்றையும் அழித்து புதிய கட்டடங்களாக மாற்றி இங்கு ஒரு போராட்டம் நடந்ததற்கான அடையாளத்தையே இல்லாமல் செய்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் இப்பொழுது போராட்ட சாட்சியாக நின்ற கடைசி அடையாளமான யாழ்ப்பாணம் வரவேற்கும் வளைவும் அழிக்கப்பட்டு விட்டது. வலியைத் தாங்கிக் கொண்டு யாழ்ப்பாணம் வரவேற்கும் வளைவு மக்களுக்கு வழி காட்டியது. இந்த வளைவைத் தாண்டும் போது ஒரு ஒற்றுமை இருந்தது பாருங்கோ. இன்று அந்த ஒற்றுமை இல்லாமல் போய்விட்டது. வளைவைத் தாண்டிப் போகும் போது ஒருவித புத்துணர்வு எமக்குள் ஏற்படும். அந்தளவுக்கு இந்த வளைவு பேர் சொல்லும்படி இருந்தது. ஒரு கட்டுப்பாட்டுடன் தமிழ்ப் பண்பாட்டுடன் வாழ வழியை ஏற்படுத்தியது என்று கூடச் சொல்லலாம். யாழ்ப்பாண மக்களின் வாழ்வில் ஒரு அங்கம் வகித்தது இந்த வளைவு. இப்பொழுது உடைக்கப்பட்டு பெரிய வளைவாகக் கட்டப்படவுள்ளது. முதலில் இருந்த வளைவுக்கு ஒரு வரலாறு இருக்கிறது. அதாவது யாழ்ப்பாணத் தமிழர்கள் கலை கலாசார பண்பாட்டுடன் வீரம் உள்ளவர்களாய் வாழ்ந்தார்கள். இப்ப கட்டப்படவுள்ள வளைவு வீரம் இல்லாத கோழையாகி சமூக கலாசாரச் சீரழிவுகள் நிறைந்த யாழ்ப்பாணத்தை பிரதிபலிப்பவையாக அமையப் போகிறது. கட்டுப்பாடுகள் தளர்ந்து களவுகள், கொலைகள் எனக் குற்றங்கள் கூடிக் காணப்படும் அவப்பெயரை இந்த வளைவு ஏற்கப் போகிறது. யாழ்ப்பாணம் வரவேற்கும் புதிய வளைவு தான் கட்டப்பட முன்னர் தலை குனிந்து நிற்கிறது. பழைய வளைவிடம் காணப்பட்ட வீரத்தை எண்ணி புதிய வளைவு தான் வந்து உயர்ந்து நின்றும் வீரம் இல்லாமல் கோழையாகி நிற்கப் போவதை எண்ணி மனம் வருந்துகிறது. அதனால் தான் என்னவோ பழைய வளைவை உடைத்தாலும் அது கவலைப்படாமல் சந்தோஷமாகத் தனது முடிவை ஏற்றுள்ளது. ஆனாலும் ஒரு வருத்தம். பாவம் தமிழ் மக்கள் அவர்களின் கடைசிச் சாட்சியான என்னை அவர்களே உடைத்து விட்டார்கள். நான் நிமிர்ந்து நின்ற காலத்தில் யாழ்ப்பாணம் ஒரு ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தது. அப்பொழுது எனக்குப் பெருமையாக இருந்தது. இப்பொழுது அந்த ஒழுக்கம் இல்லாமல் போய்விட்டது. அதனால் நான் இருந்தாலும் ஒன்றுதான். இல்லாவிட்டாலும் ஒன்றுதான் என்று அந்த வளைவு பெருமை கொண்டது. யாழ்ப்பாணத்துக்கு இந்த வளைவு பாதுகாப்பாக இருந்தது. இனிமேல் வரப்போகின்ற பெரிய வளைவு யாழ்ப்பாண மண்ணின் கலாசாரத்தை சீரழிவில் இருந்து பாதுகாக்கும் என்பது கேள்விக் குறியே. எத்தனை இடர்கள் வந்தும் நிமிர்ந்து நின்ற யாழ்ப்பாண தமிழ் மக்களின் மானத்தைக் காத்த வளைவு எவராலும் மறக்க முடியாது. தமிழ் மக்களின் எல்லோர் மனங்களிலும் அந்த வளைவு நிழல் படமாகத் தொங்குகிறது. எவராலும் அறுக்கவும் முடியாது உடைக்கவும் முடியாது.

கடந்த 2000 ஆம் ஆண்டு மே மாதம் இருக்கும். இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே சண்டை நடந்து கொண்டிருந்தது. அப்பொழுது ஒரு நாள் தூரத்தே கேட்டுக் கொண்டிருந்த வெடிச் சத்தம் மிக அருகில் யாழ்ப்பாணத்தை நோக்கி வருவது தெரிந்தது. ஊரெல்லாம் கதை பரவியது. புலிகள் யாழ்ப்பாணம் வரவேற்கும் வளைவை நெருங்கிவிட்டார்கள் என்று. என்றுமில்லாதவாறு மக்களிடையே பரவிய இந்தச் செய்தி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த வளைவைத்தான் தொட்டுவிட்டு புலிகள் திரும்பிச் சென்றுவிட்டனர். என்ன காரணமோ என்று தெரியாமல் மக்கள் இருந்தனர். இந்த

**கோப்பாய் சண்முகம்**
**கதையோடு செய்தி**

வளைவை புலிகள் தொட்டதும் உலகமே வியந்தது. இந்தியா தனது போர்க் கப்பலில் துடுப்புகளுடன் கடலில் இலங்கையில் இறங்குவதற்காக தயாராக இருந்தது. ஆனால் என்ன நடந்தது என்று முழுமையாகத் தெரியாமல் மக்களால் இன்றும் அறிய முடியாமல் போய்விட்டது. இந்த வளைவின் வீரம், பாசம், நேசம் யாழ்ப்பாண மக்களின் ஒரு உறவுபோல இருந்தது. இன்று இடிக்கப்பட்டு அநாதரவாக அப்புறப் படுத்தப்பட்டு இருக்கிறது. எவருக்கும் மனம் வலிக்கவில்லையா. எமக்கு வழிகாட்டிய எம்மோடு நின்று காயப்பட்ட இந்த வளைவு இடிக்கப்பட்டாலும் எம்மோடு வாழும்.

இடிக்காதே என்று சொல்ல வீரம் இல்லை. எங்களின் போராட்ட வடுக்களை சுமந்து நின்ற வளைவை இடிக்காதே என்று சொல்ல முடியவில்லை. இந்த வளைவுக்கு இருக்கும் உணர்வு இப்ப இருக்கும் அதிகாரிகளுக்கு இல்லாமல் போய்விட்டதே. உயிரற்ற இந்தக் கட்டட வளைவு, உயிருள்ள மனிதன்போல வாழ்ந்தது. உயிருள்ள அதிகாரிகள் உயிரற்ற கட்டடம் போல் வாழ்கிறார்கள். பிறகு எப்படி எமது தாய் மண் பற்றி அவர்களால் சிந்திக்க முடியும். தங்கள் பெயர்களைக் கற்களில் எழுதவே தயாராக உள்ளார்கள். இவர்கள் பெயரைப் பொறிப்பதால் கற்களுக்கே மகிமை இல்லாமல் போய்விட்டது. இருந்துதான் பார்ப்போம் புதிய வளைவில் யாருடைய பெயர் பொறிக்கப்படப்போகிறது என்று.


# மரண அறிவித்தல்

## யோசேப் பற்றிக் பேர்ணாண்டஸ்

**(முன்னாள் விற்பனை முகவர் - ஜோன் கிறீன் கம்பனி, கொழும்பு)**



கண்டி, தெல்தெனியைப் பிறப்பிடமாகவும் சென்ஜேம்ஸ் வீதி, பலாலி தெற்கு, வசாவிளானை வசிப்பிடமாகவும் தற்போது 103/B, பலகல வீதி, எலகந்த, எந்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட யோசேப் பற்றிக் பேர்ணாண்டஸ் (14.03.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யோசேப் - அலன் தம்பதியரின் இளைய மகனும், காலஞ்சென்றவர்களான செபதேயு - சின்னம்மா தம்பதியரின் மருமகனும், றீற்றம்மா பற்றிக் பேர் ணான்டஸின் (பச்சைக்கிளி, ஓய்வு பெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும் அன்ரன்றோய் இன்பராஜ் (இத்தாலி), கிறிஸ்லிற் இன்பகுமாரி(கனடா), பற்றிமா ஆனந்தகுமார் (ஒஸ்ரியா), சாமினி பொலின் (அமெரிக்கா), பசில் பாலவிமோகரன்(லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கோப்பாய் காலஞ்சென்ற திருமதி தவமணி மரியராசாவின் அன்பு மைத்துனரும் கனகராஜ்(கனடா), சிவகுமரன் (கொழும்பு), அன்னலீசா (இத்தாலி), பாபரா(ஒஸ்ரியா), தீப்பிகா (லண்டன்) ஆகியோரின் மாமனும் பிலிப் பேர்ணான்டஸ், அன்ரன் பேர்ணான்டஸ், காலஞ் சென்றவர்களான லாசறஸ் பேர்ணான்டஸ், குயிதர் பேர்ணான்டஸ், சியா மணி மற்றும் திரேசா(கொழும்பு), எலிசபேத்(இந்தியா), மார்கிறேற் (இந்தியா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (18.03.2012) ஞாயிற்றுக் கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக நாயக்ககந்த சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*103/B, பலகலவீதி,*
*எலகந்த- எந்தளை,*
*கொழும்பு.*

(15693(6,9,12)

**தகவல்:**
**மனைவி.**



# விளையாட்டு நிகழ்வு

**சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு தொண்டமனாறு விநாயகர் சனசமூக நிலையமும் ஒற்றுமை விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் மாபெரும் விளையாட்டுப் போட்டி.**

கரப்பந்தாட்டம்
துடுப்பாட்டம் } பதிவு செய்யப்பட்ட யாழ் மாவட்டத்திலுள்ள கழகங்கள்.

ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம், 19வயதுக்குட்பட்டவர்களுக்கான மரதன் ஓட்டம், கிறீஸ் கம்பம் ஏறுதல், கயிறு இழுத்தல் என்பன நடைபெறும்.

போட்டிகள் சித்திரை முதலாம் திகதி ஆரம்பமாகி சித்திரைப் புத்தாண்டில் நிறைவு பெறும்.

போட்டியில் பங்குபெற்றுபவர்கள் பங்குனிமாதம் 25ஆம் திகதிக்கு முன்பாக உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும். பெறுமதியான பரிசில்களும் பணப்பரிசில்களும் வழங்கப்படும்.

- *தொர்புக்கு: து.பாரத் - 0774912627(பொருளாளர்)*
- *ம.தர்ஷாந்தன் - 0770869226 (விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர்)*
- *ந. ரகுபரன் - 0772583252 (விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர்)*

| சி.இராஜசிங்கம் | வி.சுரேஷ்குமார் | து.பாரத் |
|---|---|---|
| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
| President | Secretary | Treasurer |

(12806(6,9,12)

# Vacancy

*We require a Technically qualified person in Civil Engineering works, below 40 years of age with computer literacy, who is capable of co-ordinating between office and field, and competent in Auto CAD. Please contact with your CV on or before 22/03/2012.*

***Asa Engineers & Constructors***
***144, Manipay Road, Jaffna***
***021-2220752***

(15647)(2-7-6)

# இதய அஞ்சலி



எமது பாடசாலையின் ஆங்கில பாட முன்னாள் ஆசிரியரும் உப அதிபருமாக அரும் பெரும் சேவையாற்றி எல்லோர் மனங்களிலும் இடம் பிடித்தவரும் ஆகிய

**அமரர் லலிதா சண்முகலிங்கம்**

அவர்களின் திடீர் மரணச் செய்தி அறிந்து அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது இதய அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை.

பிரிவால் துயருறும்:
பாடசாலைச் சமூகம்.

(15708) (6 ,9 ,12)

## பேய் வீடாகும்...

*(15ஆம் பக்கத் தொடர்ச்சி)*

டுச் சென்றன. மட்சுமுராவின் நோவா பாதுகாப்புப் பெட்டகத்தில் 60 ஆடுகளும், அதில் பாதி அளவுக்கு பன்றிகளும், ஒரு பண்ணையின் முப்பது பறவைகளில் பிழைத்திருக்கும் ஒரேயொரு பறவையாகிய நெருப்புக்கோழியும் இருக்கின்றன.

தடைசெய்யப்பட்ட பகுதியில் ரோந்து வந்த பொலிஸார் நெருப்புக்கோழியின் முதலாளியை அழைத்தனர். அவர்களைச் சமாதானம் செய்ய மட்சுமுராவுக்கு ஒரு முற்பகல் முழுதும் தேவைப்பட்டது. திரும்பிவந்தபோது நெருப்புக்கோழியைக் காணவில்லை. ஐந்து மைல்களுக்கு அப்பால் இரை தேடிக்கொண்டிருந்த அதனைத் தேடிப்பிடித்துக் கொண்டு வந்தார்.

இப்போது ஆளரவமற்றுப் போய்விட்ட அந்த நிலப்பரப்பில் மட்சுமுரா தனது வாகனத்தை ஓட்டிப்போய் மற்ற பிராணிகளைத் தேடிச் சென்று உதவி செய்கிறார். இவர் எந்த இடத்தில் தங்களுக்கான தீனியை வைக்கின்றார் என்பதை கால்நடைகள் அறிந்துள்ளன. அவருக்காக அங்கே அவை காத்திருக்கின்றன.

''நான் வெளியேற வேண்டும் என்று பொலிஸார் கூறுகின்றனர். அப்படிச் செய்தால் இந்த பிராணிகளைப் பார்த்துக் கொள்ள யாருமில்லை என்றாகிவிடும்'' என்கிறார் மட்சுமுரா.

ஒக்டோபர் மாதம் இவர் மருத்துவப் பரிசோதனை செய்து கொண்டதில், இவர் உடலில் கதிர்வீச்சு அளவு 134 முதல் 137 வரை இருந்தது. ''இதற்குக் காரணம் நான் இந்த மண்ணில் விளையும் காய்கறிகளைச் சாப்பிடுவதுதான்'' என்கிறார் மட்சுமுரா.

அவரது மிகப் பெரும் கவலை, அவரது குடும்பத்தின் ஐந்து தலைமுறைகள் வாழ்ந்த இந்த ஊர், மெல்லக் காணாமல் போய்விடும் என்பதுதான். ''இந்த இடத்தில் கதிர்வீச்சு மாசினை நீக்க குறைந்தது 40 ஆண்டுகள் ஆகும் என்று அரசு சொல்கிறது. அதற்குள் இது பேய்களின் ஊராக மாறிவிடும். இளைஞர்கள் யாரும் திரும்ப வர மாட்டார்கள்'' என்கிறார் மட்சுமுரா. ✱

# முக்கிய அறிவித்தல்

45, காட்டுக்கந்தோர் ஒழுங்கை, யாழ்ப்பாணம் எனும் முகவரியைக்கொண்ட யூரோவில் (Euroville Engineers and Constructors (Pvt) Ltd) என்ற நிறுவனம் இத்தால் சகல பொதுமக்களுக்கும் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அறியத்தருவது என்னவெனில் கடந்த காலத்தில் ஒப்பந்தகாரர்களுக்கு மற்றும் உப ஒப்பந்தக்காரர்களுக்கும் போக்குவரத்து வசதி கருதி நிறுவனத்தால் வழங்கப்பட்ட ஆள் அடையாள அட்டைகள் சகலதும் இத்தால்ரத்து செய்யப்படுகின் றன.

(C/9162) (7,9)

# கண்ணீர் அஞ்சலி



யாழ். பல்கலைக்கழக முன்னாள் பாதுகாப்பு உத்தியோகத்தரும், எமது சங்க முன்னாள் அங்கத்தவருமாகிய

**அமரர் S. சிதம்பரநடராசா**

14.03.2012 அன்று இறைபதமெய்தியுள்ளார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பாதுகாப்புத் திணைக்களம்,
யாழ். பல்கலைக்கழகம்

(15707)(6-7-8)

பாதுகாப்பு உத்தியோகத்தர்,
நலன்புரி சங்கம்.

# கண்ணீர் அஞ்சலி



**திருமதி லலிதா சண்முகலிங்கம்**

**( ஓய்வு பெற்ற உபஅதிபர், யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம்)**

(14.03.2012) புதன்கிழமை சிவபதமடைந்த திருமதி லலிதா சண்முகலிங்கம் அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

காவேரி சில்க், ஸ்ரைல் பார்க்,
உரிமையாளர்களும், ஊழியர்களும்

(15704)(6-7-8)

# மரண அறிவித்தல்



## கந்தையா கமலம்

நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும், கற்குளம், கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கமலம் (15.03.2012) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பொடி - பெரியபிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஆனைக்கோட்டையைச் சேர்ந்த பொன்னர் கந்தையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பூமணி அருமைநாயகம், கண்ணுசாமி, சின்னராசா மற் றும் கனகரத்தினம், செல்வதியம்மா, ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, இராஜலிங்கம், மற்றும் சண்முகலிங்கம், நித்தியபூபதி, சந்திராவதி, அம்பிகாவதி (லில்லி), உதயராசா, சமுத்திராகரன் (சதீஸ் - கனடா), அவர்களின் அன்புத் தாயும், புஸ்பராணி, லீலாவதி, சிவலிங்கம், பாலச்சந்திரன், இராஜலக்சுமி, வாசுகி (கனடா) ஆகியோரின் மாமியும், பிறேமவத்சலா, எப்றி, பிறேமலதா, கிரிஞ்சன், நிலானி, நிலோ, நிரூஜன், றஞ்சித், சஞ்சீவ், வினோத், காலஞ்சென்ற சசிகாந் மற்றும் நிஷாந், சியாழினி, தயானி, சானுகா, காஸ்ரோ, சாளின், ஜெல்சின், பேகன்(கனடா), றுகிதா (கனடா) ஆகியோரின் பேர்த்தியும் கிரிஷாந், கிரிபூட்சின், கிரிசாளன், கிரிபூடிகா, பனுஷியா, கஸ்மிதன், ஜனுசியன், நீலஷாளிகா, மதுமிதா, கோகுல்ராஜ், அஷ்வின்ராஜ், தன்ஷிகா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (16.03.2012) வெள்ளிக்கிழமை நடைபெற்று பி. பகல் 1 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

14, கற்குள லேன்,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மகள்(லில்லி)

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## VACANCY
### POST OF WORKS ENGINEER [CIVIL] GRADE II

Applications are invited by me up to 20.04.2012 from suitably qualified persons for the post of Works Engineer [Civil].

Applications should be on prescribed formsissuedby the University. Application forms and particulars for the above post should be obtained from the Office of the SeniorAssistant Registrar / Establishments [Non – Academic] of this University on a payment of Rs. 100/- for each application form at the People's Bank, University of Jaffna Branch or at the Shroff's counter of this University. Those who wish to obtain the forms and details by post are requested to send a Money Order / Postal Order to the value of Rs. 100/- drawn in favour of the Bursar of this University together with self addressed Rs. 5/- Stamped envelope of 23X10 c.m in size.

The envelope containing duly filled application form must bear "Post of Works Engineer" on its top left hand corner and either hand delivered or sent under registered post to reach the office of the Registrar on or before 20.04.2012.

**QUALIFICATIONS:**
**(A) Should possess a B.Sc Engineering Degree specializing in Civil Engineering from a recognized University / Higher Educational Institution or an Associate Member of a recognized Institute of Engineers and**
**(B) A minimum of five (05) years of experience in the design, construction and Maintenance of Buildings, water supplies, drainage, road and electrical installation. Should also possess experience in handling contracts as well as managing direct labour**

**Method of Recruitment** : Selection by a structured interview. **Applicants who have scored 40% marks or above at the interview are eligible to be considered for selection.**

**Salary Scale**:UEX2 (III) 33,745-8X645; 8X790-45,225/-p.m

**AGE:** Not more than 45 years. This age limit will not be applicable to those candidates who
are employed in the public sector organization.

**STATUTORY BENEFITS**
1. Allowances approved by the University Grants Commission
2. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University System
3. Gratuity payment
4. Employment Trust Fund benefits
5. Free medical care

Applicants from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through the Heads of respective Institutions. Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for appointment if the application routed through the Head of Department is not received.

Incomplete and illegible applications and applications that are received after the closing date will be rejected.

**REGISTRAR,**
**University of Jaffna,**
**15.03.2012.**

(C/9161) (2-6)

# உடனடி பதவிவெற்றிடம்

**குடிசார் இயந்திரவியலாளர் (Civil Engineer)**

ஒப்பந்த அடிப்டையில் சேவையாற்றுவதற்கு பொருத்தமான தகைமையுடையவர்களிடமிருந்து உடனடியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

✱.குடிசார் இயந்திரவியல் பட்டதாரி (B.Sc Civil Engineering) அல்லது தேசிய தொழில்நுட்படிப்ளோமா (N.D.T. Civil Engineering) மற்றும் குறைந்தது ஐந்து வருட முன் அனுபவம் .

✱. வீதிவேலை தொடர்பான முன் அனுபவம் விசேட கவனத்தில்கொள்ளப்படும் கவர்ச்சிகரமான சம்பளம் தங்கள் தகைமை மற்றும் அனுபவத்திற்கேற்ப பேசித்தீர்மானிக்கப்படும்.

தகுதியுடையவர்கள் த்மது சுயவிவரங்கொண்ட விண்ணப்பத்தை 22.03.2012 ஆம் திகதிக்கு முன் பின்வரும் விலாசத்துக்கு தபால் மூலமோ, மின்னஞ்சல் மூலமோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகினறனர்

தாபனப்பிரிவு,
யூரோவில்
45, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
**Euroville@dialognet.lk**

(C/9163) (6-9)

# வடக்கின் போர்ச் சூடு ஆறமுன்னர் நடைபெறும் ஒருநாள் கிரிக்கெட்

வலி வடக்கு, மார்ச் 16

வடக்கின் பெரும் போர் என வர்ணிக்கப்பட்ட யாழ். மத்திய கல்லூரிக்கும் யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற பெரும் துடுப்பாட்டம் மூன்று நாள்கள் மோதலின் பின்னர் சம நிலையில் முடிவடைந்துள்ளது.

இந்த நிலையில் மீண்டும் யார் வல்லவர்கள் என்பதை நிரூபிக்கும் வகையிலான 50 ஓவர்களுக்கான ஒரு நாள் கிரிக்கெட் போட்டி நாளை சனிக்கிழமை யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இரு அணிகளும் பல சிரேஸ்ட வீரர்களும் வேகப் பந்து வீச்சாளர்கள், சுழல் பந்து வீச்சாளர்கள் மற்றும் சிறந்த வலக் கை இடக் கை துடுப்பாட்ட வீரர்களையும் கொண்டுள்ளன.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் சோபிக்காது விட்டாலும் அதனை ஈடுசெய்யும் வகையில் நடுத்தர வீரர்கள் இரு அணிகளிலும் காணப்படுகின்றமை இரு அணிகளிலும் காணப்படும் பலம் தான்.

இந்த நிலையில் இரு அணிகளும் சனிக்கிழமை களமிறங்கத் தயாரகியுள்ளன. கடும் பயிற்சிகளையும் பெற்று வருகின்றன. பெரும் போட்டியை சமநிலைப்படுத்தினாலும் இந்த ஒரு நாள்போட்டியில் எப்படியும் வெற்றி பெற்றே தீருவது என்ற துடிப்புடன் இரு அணிகளும் உள்ளன.

2003 ஆம் அண்டு ஆரம்பிக்கப்பட்ட 50 ஓவர்களுக்கு மட்டப்படுத்திய போட்டியில் முதல் நான்கு போட்டிகளிலும் யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி வெற்றி பெற்ற போதிலும் அடுத்த நான்கு போட்டிகளிலும் யாழ். மத்திய கல்லூரி வெற்றி பெற்றுள்ளது. இதுவரை இடம் பெற்ற ஒன்பது போட்டிகளில் ஐந்து போட்டிகளை யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரியும் நான்கு போட்டிகளை யாழ். மத்திய கல்லூரியும் தொடர் வெற்றியாக பெற்றமை குறிப்பிடத்தக்கது.

கடந்தாண்டு இதனை தொடரவிடாமல் தடுத்து நிறுத்திய யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி வெற்றியை தனதாக்கிக் கொண்டது. இந்த நிலையில் யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியின் இரண்டாவது தொடர் வெற்றிக்கு இந்தப் போட்டி வழிசமைக்குமா அன்றி யாழ். மத்திய கல்லூரி அதற்கு முற்றுப் புள்ளி வைத்து வெற்றியை தமதாக்கிக் கொள்வார்களா என்பது பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். (ம-86)

## நெடுங்கேணி கோட்ட உதைபந்து; மதியாமடு விவேகானந்தா சம்பியன்

வலி-வடக்கு, மார்ச் 16

வவுனியா வடக்கு நெடுங்கேணி கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் புளியங்குளம் மதியாமடு விவேகானந்தா வித்தியாலயம் கோட்ட சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

கனகராயன்குளம் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் கனகராயன்குளம் மகாவித்தியாலயமும் புளியங்குளம் மதியாமடு விவேகானந்தா வித்தியாலயமும் மோதிக் கொண்டன.

இரு அணிகளும் ஓர் அணி மற்றைய அணிக்குச் சளைத்தவர்கள் இல்லை என்பதை நிரூபிக்கும் வகையில் மோதிக்கொண்டன.

இரு அணிகளும் தமக்குக் கிடைத்த கோல் பெறும் சந்தர்ப்பங்களை உரிய முறையில் பயன் படுத்தத்தவறிய நிலையில் கோல்கள் எதனையும் இரு அணிகளும் பெறாத நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக இரு அணிகளுக்கும் தலா ஐந்து சமநிலை உதைகள் வழங்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து புளியங்குளம் மதியாமடு விவேகானந்தா வித்தியாலயம் 03:02 கோல்கள் என்ற அடிப்படையில் கனகராயன் குளம் மகாவித்தியாலயத்தை வெற்றி பெற்று கோட்ட சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது. (ம-86-400)

## கடற்கரை கரப்பந்தாட்ட உப செயலாளர் தெரிவு



யாழ்ப்பாணம்,மார்ச் 16

இலங்கைக் கடற்கரை கரப்பந்தாட்ட சம்மேளனத்தின் நிறைவேற்றுக் குழுவுக்கு உப செயலாளராக யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் தலைவர் கி.மனோகரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வாரம் கொழும்பில் உள்ள இலங்கைக் கடற்கரை சம்மேளனத்தில் இடம்பெற்ற வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் கி.மனோகரன் ஏக மனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

பதவியைப் பெற்றுக்கொள்ளும் முதலாவது தமிழர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-23)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,மார்ச் 16

பருத்தித்துறை உதை பந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் 11 பேர் பங்கு பற்றும் லீக் முறையிலான உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வெள்ளிக் கிழமை அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறும் ஆட்டத்தில் பங்கு கொள்ளும் அணியின் விவரம் வருமாறு:

மாலை 4 மணி

கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகம் எதிர் கர வெட்டி நவ சக்தி விளையாட்டுக் கழகம். (ம-23)

***

யாழ்ப்பாணம், மார்ச் 16

யாழ்.மாவட்டத் தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் கைதடி தென்கிழக்கு சித்தி விநாயகர் விளையாட்டுக் கழகம் தென்மராட்சிப் பிரதேசத்துக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே மின்னொளியில் நடத்தி வரும் தாச்சிச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இடம் பெறும் கால் இறுதியாட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:



இரவு 7 மணி

கைதடி மத்தி வளர்மதி 'பி' அணி எதிர் கைதடி தெற்கு மின்னொளி விளை யாட்டுக் கழகம் 'ஏ' அணி. (ம-23)

### கைதடி மத்தி வென்றது

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் கைதடி தென்கிழக்கு சித்தி விநாயகர் வி.கழகம் தென்மராட்சிப் பிரதேசத்துக்கு உட்பட்ட வி.கவுக்கு இடையே மின்னொளியில் நடத்தி வரும் தாச்சிச்சுற்றுப் போட்டித்தொடரில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஆட்டத்தில் கைதடி மத்தி குமாரநகர் 'ஏ' அணி வெற்றி பெற்றுள்ளது. கைதடி மத்தி குமாரநகர் 'ஏ' அணிக்கும் நாவற்குழி சரஸ்வதி 'பி' அணிக்கும் இடையில் இடம் பெற்ற ஆட்டத்தில் கைதடி மத்தி குமாரநகர் 'ஏ' அணி 18:05 என்ற புள்ளி அடிப் படையில் வெற்றி பெற்றது. (ம-23)


உ
சிவமயம்

**விவாஹ சுபமுகூர்த்த அழைப்பு**

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான கர ஸ்ரீ பங்குனி மீ 4 ஆம் உ சனிக்கிழமை [17.03.2012] காலை 10.50 மணி தொடக்கம் 11.40 மணிவரையுள்ள ரிஷப லக்கினமும் உத்தராட நக்ஷத்திரமும் சுக்கிர காலவோரையும் கூடிய சுபமுகூர்த்தத்தில்



*காசிப ஹோத்ரம்*
*புன்னாலைக்கட்டுவன்,*
*ஈவினை கற்பகவிநாயகர்*
*தேவஸ்தானத்தைச் சேர்ந்த*
பிரம்மஸ்ரீ
தியாகராஜ ஐயர்
*தம்பதிகளின் பௌத்ரனும்*
*இந்தியா - பாலக்காடு*
பிரம்மஸ்ரீ
ப.இராமையர் *தம்பதிகளின்*
*தௌகித்ரனும் எமது துவிதிய*
*புத்திரனுமாகிய*
***சிரஞ்ஜீவி***
***கமலேஸ்வர சர்மா***
*அவர்களுக்கு*

*கௌசிக ஹோத்ரம்*
*அரியாலை,*
*நீர்நொச்சித் தாழ்வு*
*ஸ்ரீ சித்தி விநாயகர்*
*தேவஸ்தானத்தைச் சேர்ந்த*
பிரம்மஸ்ரீ
இ.சுப்பிரமணியக் குருக்கள்
*தம்பதிகளின் பௌத்ரியும்*
கொழும்புத்துறை பிரம்மஸ்ரீ
கணேச சிவசன்முக சர்மா
*தம்பதிகளின் தௌகித்ரியும்*
*எமது சீமந்த புத்திரியுமாகிய*
***சௌபாக்கியவதி***
***ஸ்ரீவித்யா***
*அவர்களை*

கன்னிகாதான, திருமாங்கல்யதாரண, பாணிக்கிரஹணம் செய்ய எல்லாம் வல்ல ஆயாக்கடவை சித்திவிநாயகர், ஈவினைக் கற்பக விநாயகர், கீரிமலை நகுலேஸ்வரப் பெருமான், வண்ணை வைத்தீஸ்வரப் பெருமான், அரியாலை, நீர்நொச்சித் தாழ்வு ஸ்ரீ சித்தி விநாயகர் திருவருள் துணைகொண்டு பெரியோர் நிச்சயித்துள்ளனர்.

அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதராக வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**மண்டபம்**

விஸ்வநாதர் மயிலு மீனாக்ஷி மண்டபம், நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய வடக்கு வீதி, அரியாலை

**ஸமாவர்த்தனம்**

அன்றைய தினம் காலை 6.00 மணிமுதல் மணமகன் இல்லத்தில் நடைபெறும்.

வதுவர கிருஹ பிரவேசமும் வரவேற்புபசாரமும் அன்றைய தினம் [17.03.2012] மாலை 3.30 மணிமுதல் மணமகன் இல்லத்தில் நடைபெறும்.

**தாங்கள் நல்வரவை இனிதே நாடும்**
**(இரு வீட்டார் அழைப்பு)**

**பிரம்மஸ்ரீ தியாக கொங்காதரக் குருக்கள் - விஜயலக்ஷ்மி தம்பதிகள்.**
**ஈவினை, புன்னாலைக்கட்டுவன்.**
**தொ.பே.: 077 7110146**

**பிரம்மஸ்ரீ க.முரளிதரக் குருக்கள் - அனுராதா தம்பதிகள்.**
**77/2, ஏ, வி.றோட், கொழும்புத்துறை.**
**தொ.பே.: 077 9582338**

15550(2-9-7)



**பிற்போடப்பட்டுள்ளது**

(பூப்புனித நீராட்டு விழா)

*சிவகுல வீதி, உரும்பிராய் மேற்கு, உரும்பிராயைச் சேர்ந்த திரு.திருமதி ஸ்ரீஸ்கந்தராசா இராசமலர் தம்பதியரின் புத்திரி சிந்துஜா அவர்களின் பூப்புனித நீராட்டு விழா நிகழ்வு எதிர்வரும் (18.03.2012) ஞாயிற்றுக்கிழமை நடைபெற இருந்தது. தவிர்க்க முடியாத காரணத்தால் அந்த நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது.*

சு.ஸ்ரீஸ்கந்தராசா, 021 4904739, 0750398121



**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**
**VACANCY**
**POST OF WORKS ENGINEER [ON ASSIGNMENT]**

Applications are invited by me up to 26.03.2012 from suitably qualified persons for the post of Works Engineer [Civil] (On Assignment) for six months.

Candidates, who are interested to apply for the post are requested to forwarded their CV addressed to Senior Assistant Registrar/ Establishments [Non-Academic]on or before 26.03.2012. Candidate may also forward their CV to the E. Mail: estna@jfn.ac.lk

**QUALIFICATIONS**

(A) Should possess a B.Sc Engineering Degree specializing in Civil Engineering from a recognized University / Higher Educational Institution or an Associate Member of a recognized Institute of Engineers and

(B) A minimum of five (05) years of experience in the design, construction and Maintenance of Buildings, water supplies, drainage, road and electrical installation. Should also possess experience in handling contracts as well as managing direct labour

**Method of Recruitment** : Selection by a structured interview.

**Salary Scale**:Fixed Salary Rs.40,000.00.

**REGISTRAR,**
**University of Jaffna,**
**15.03.2012.**

(C/9160) (2-6)

TCT MULTI TRADE CENTRE

# ரீசிரீ (TCT) பல்பொருள் விற்பனை நிலையம் வாடிக்கையாளர்களுக்கு ஓர் இனிய செய்தி!!!...

"TIME IS GOLD"

**யாழ் மாவட்டத்தின் முதன் முறையாக நாம் உங்களின் நலன் கருதி வீட்டுக்கு (Home Delivery) பொருள்களை விநியோகம் செய்யும் சேவையினை ஆரம்பிக்கின்றோம்.**

காலை 7மணிமுதல் இரவு 10 மணிவரை 7 நாள்களும் திறந்திருக்கும் ஒரே ஒரு வியாபர நிறுவனம்

- "உங்கள் வீட்டிலிருந்த படியே நேர சிரமமின்றி மலிவானதும், தரமானதுமான பொருள் களைக் கொள்வனவு செய்ய ஓர் சிறந்த தெரிவு.
- நாங்கள் கடையில் விற்கும் அதே விலையில் உங்கள் வீட்டு விநியோகப் பொருள்களும் இருக் கும் என்பதை உறுதிப்படுத்துகின்றோம்.
- உங்களுக்கு தேவையான பொருள்களின் விவரங்களை நேரிலோ அல்லது 021-7451895, 0777511285 என்னும் தொலைபேசிகள் மூலமாகவோ அல்லது SMS மூலமாகவே அல்லது 021-222-8025 என்ற தொலை நகல் (Fax) மூலமோ அல்லது tctmc@dialognet.lk என்ற மின்னஞ்சல் மூலமாகவோ எமக்கு உங்கள் கொள்வனவு கட்டளைகளை இடமுடியும்.
- உங்களுடைய கொள்வனவு கட்டளைகளை எமது ஊழியர் மூலமாக உங்களுடன் தொலைபேசி மூலமாகவோ அல்லது நேரிலோ தொடர்பு கொண்டு உறுதிப்படுத்தப் பட்ட பின்பே பொருள்கள் விநியோகிக்கப்படும்.
- 15,000/- - 30,000/- வரையான கொள்வனவுக்கு 2 Km வரை இலவச வாகன சேவை.
- 30,000/- க்கு மேற்பட்ட கொள்வனவுக்கு 4Km வரை இலவச வாகன சேவை.
- மேற்குறிப்பிட்ட தூரத்தை விட அதிக தூரமாயின் மேலதிக தூரத்திற்கு மட்டும் குறைந்த சேவைக்கட்டணம்.

**எமது நிறுவனத்தால் வாடிக்கயைாளர் நலன் கருதி பல பொருள்கள் தொடர்ச்சியாக குறித்த விலையில் இருந்து குறைவாக விற்கப்பட்டு வருகின்றது.** (நிபந்தனைக்குட்பட்டது)

## Full Cream Milk Powder
பால்மா வகைகள்

| | (குறித்த விலை) | (எங்கள் விலை) |
|---|---|---|
| Anchor-Full Cream-1Kg | 647/= | 635/= |
| Anchor-Full Cream-400g | 264/= | 255/= |
| Anchor-Instant-Full Cream-400g | 264/= | 260/= |
| Nespray Full Cream- Enriched 400g(Box) | 264/= | 255/= |
| Nespray Full Cream-Enriched-400g(Pkt) | 259/= | 255/= |
| Nespray-Full Cream-(Everyday)400g(Pkt) | 254= | 250/= |
| Nespray Full Cream-Everyday-1Kg | 625/= | 615/= |
| Nespray-Full Cream-Enriched1Kg(Pkt) | 647/= | 635/= |
| Milgro-Instand-Full Cream-1Kg(Pkt) | 629/= | 615/= |
| Milgro-Instant-Full Cream-(Box)1Kg | 644/= | 635/= |
| Milgro-Full Cream-Instant-400g(Pkt) | 258/= | 250/= |
| Milgro-Instant-Full Cream-400g | 262/= | 255/= |
| Milgro-Creamy-Full Cream-400g | 258/= | 255/= |
| Lakspray-Full Cream-1Kg(Box) | 640/= | 625/= |
| Lakspray-Full Cream-1Kg(Pkt) | 635/= | 620/= |
| Lakspray-Full Cream-400g(Box) | 260/= | 255/= |
| Lakspray-Full Cream-400g(Pkt) | 260/= | 255/= |
| Maliban Kiri-Full Cream-1Kg(Pkt) | 639/= | 625/= |
| Maliban Kiri-Full Cream-1Kg(Box) | 647/= | 635/= |
| Maliban Kiri-Full Cream-400g(Pkt) | 260/= | 255/= |
| Maliban Kiri-Full Cream-400g(Box) | 264/= | 260/ |

**Low Fat Item** கொழுப்புச் சத்துக் குறைவான பால்மா வகைகள்

| | | |
|---|---|---|
| Anchor (Shap up)1Kg | 875/= | 860/= |
| Anchor (Shap up)400g | 360/= | 350/= |
| Anlene- 400g | 375/= | 370/= |
| Maliban(Slender)-400g | 295/= | 290/= |

**Baby Milk Powder** குழந்தைகளுக்கான பால்மா வகைகள்

| | | |
|---|---|---|
| Lactogen-(1)-350g | 390/= | 385/= |
| Lactogen-(2)-350g | 330/= | 325/= |
| Lactogen-(3)-350g | 330/= | 325/= |
| Nespray-(1+)-400g | 340/= | 335/= |
| Anchor-(1+)-400g | 350/= | 345/= |
| Nespray(3+)-400g | 335/= | 330/= |
| Anchor-(3+)-400g | 350/= | 345/= |
| Cerelac-Mixed Fruit-300g | 370/= | 365/= |
| Cerelac-Dhal+Mixed Vegetables-300g | 340/= | 335/= |
| Cerelac-Apple-375g | 330/= | 325/= |
| Cerelac-Rice-375g | 330/= | 325/= |
| Cerelac-Red Rice-375g | 330/= | 325/= |
| Cerelac-Apple+Cherry & Wheat-300g | 330/= | 325/= |
| Cerelac-Mango-300g | 340/= | 335/= |
| Cerelac-Vegetable & Rice 375g | 330/= | 325/= |

**சொர்ணாம்பிகை மண்டபம்**
**527, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்**

திருமணவைபவம், பூப்புனித நீராட்டு விழா, பிறந்த நாள் கொண்டாட்டம், வரவேற்பு உபசாரவிழா, கருத்தரங்குகள், பயிற்சிப்பட் டறைகள், கலை நிகழ்ச்சிகள் போன்ற வைபவங்களுக்கு நவீன முறையில் ஒழுங் கமைக்கப்பட்ட முற்று முழுதாக குளிரூட்டப்பட்ட அல்லது குளிரூட்டப்படாத மண்டப வசதிகளுக்கும், ஏனைய சோடனை, உணவு, மென்பானம், சிற்றுண்டி வகைகளுக்கும் நாட வேண்டிய சிறந்த இடம் சொர்ணாம்பிகை மண்டபம். கட்டணங்கள் பேசித்தீர் மானிக்கப்படும் அத்துடன் Off Season சலுகைக் கட்டண அடிப்படையில் மண்டபங்கள் வழங்கப்படும். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல.

**021-222-8025**

**TCT GUEST HOUSE**
**ரிசிரி கெஸ்ற் கவுஸ்**
No.46, Aseervatham Lane,
Hospital Road,
Jaffna.

யாழ். நகரத்திற்கு அண்மையில் A/C Single Room, A/C Double Room, Non A/C Single Room, Non A/C Double Room and Special Family Packages என்பவற்றை தரமான வசதிகளுடன் குறைந்த கட்டணத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விருந்தினர் பாவிக்கும் வாகன சாரதிக்கு அதே இடத் தில் தனியான அறை இலவசமாக வழங்கப்படும்.

T.P NO – 021-222-1191

**Baby Milk Powder (Tin)** குழந்தைகளுக்கான பால்மா வகைகள்

| | (குறித்த விலை) | (எங்கள் விலை) |
|---|---|---|
| Nan-(i)-400g | 1020/= | 960/= |
| Nan-(ii)-400g | 1000/= | 940/= |
| Nan-(iii)-400g | 980/= | 920/= |
| Nan-Lactose Free Formula-400g | 920/= | 860/= |
| Nan-Pre-400g | 990/= | 850/= |
| Sma Gold-(i)-400g | 975/= | 880/= |
| Sma Gold-(ii)-400g | 975/= | 880/= |
| Sma Gold-(iii)-400g | 925/= | 880/= |
| Enfagrow-A+-Vanilla (Stage 03)400g | 900/= | 860/= |
| Enfagrow-A+-Vanilla (Stage 03)850g | 1875/= | 1770/= |
| Enfakid-A+-Vanilla (Stage 04)400g | 840/= | 810/= |
| Enfakid-A+-Vanilla (Stage 04)850g | 1650/= | 1570/= |
| Enfalac A+(Stage 01)400g | 940/= | 900/= |
| Enfalac A+(Stage 01)900g | 2000/= | 1950/= |
| Enfapro-A+(Stage 02)-400g | 1020/= | 970/= |
| Enfapro-A+(Stage 02)-900g | 1910/= | 1820/= |
| Cow & Gate-Premium- 400g(i) | 910/= | 860/= |
| Cow & Gate-Blue- 400g (ii) | 910/= | 860/= |
| Cow & Gate-Premium- 400g (iii) | 930/= | 880/= |
| Cow & Gate-Nutrica- 400g (iv) | 890/= | 840/= |
| Pedia Plus (1-7Years) 350g | 675/= | 640/= |
| Anchor-Pediapro- 400g (1-3years) | 480/= | 470/= |
| Anchor-Pediapro- 400g (3year) | 480/= | 470/= |
| Neslac Excella-Nestle-1+(1-3Years)-400g | 500/= | 490/= |

**Sunflower Oil** (சூரியகாந்தி எண்ணெய்)

| | (குறித்த விலை) | (எங்கள் விலை) |
|---|---|---|
| Fortune Sun Flower -2l | 890/= | 800/= |
| Fortune Sun Flower -1l | 450/= | 410/= |
| Fortune Sun Flower -500ml | 240/= | 230/= |
| Turkey Sun Flower-3L | 1790/= | 1750/= |
| Turkey Sun Flower-2L | 1195/= | 1160/= |
| Turkey Sun Flower-1L | 615/= | 550/= |
| Turkey Sun Flower-500ml | 45/= | 310/= |
| Tastyy Sun Flower-2L | 1096/= | 830/= |
| Tastyy Sun Flower-1L | 491/= | 420/= |
| Tastyy Sun Flower-500ml | 230/= | 190/= |

**Vegetable Oil** (மரக்கறி எண்ணெய்)

| | (குறித்த விலை) | (எங்கள் விலை) |
|---|---|---|
| Turkey Vegetable Oil-3L | 1000/= | 920/= |
| Turkey Vegetable Oil-1L | 425/= | 400/= |
| Turkey Vegetable Oil-500ml | 225/= | 210/= |
| Fortune Vegetable Oil-5L | 2000/= | 1790/= |
| Fortune Vegetable Oil-3L | 990/= | 830/= |
| Fortune Vegetable Oil-2L | 825/= | 720/= |
| Fortune Vegetable Oil-1L | 450/= | 420/= |
| Fortune Vegetable Oil-500ml | 225/= | 210/= |
| Tastyy Vegetable Oil-3L | 893/= | 810/= |
| Tastyy Vegetable Oil-1L | 383/= | 350/= |
| Tastyy Vegetable Oil-500ml | 196/= | 185/= |

- தங்களுக்கு தேவையான வீட்டுத்தளபாடங்கள், பான்சிப் பொருள்கள், அன்பளிப்பு பொருள்கள், பிளாஸ்ரிக் பொருள்கள், புடைவைகள், அத்தியவசியப் பொருள்கள் அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் தரமானதாகவும், நியாயமான விலையி லும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய நிறுவனம் T.C.T பல் பொருள் நிலையம் மட்டுமே.
- இரண்டு மாதங்களுக்குள் 25,000 ரூபா பெறுமதியான பொருள்களினை கொள்வனவு செய்வதன் மூலம் 500 ரூபா பெறுமதியான இலவச கொள்வனவு கூப்பன் ஒன்றினை பெற் றுக் கொள்ளுங்கள்.
- மேலும் மலரப்போகும் புதுவருடத்தினை முன்னிட்டு தெரிவு செய்யப்பட்ட புடைவை வகைகளுக்கு 10 - 20% வரையிலான விலைக்கழிவினையும் வழங்கவுள்ளோம்.

**ஜோன்ஸ்சன் (Johnson's) பொருள்களை கொள்வனவு செய்து 5% விலைக்கழிவுகளினையும் பெற்றுக் கொள்ளுங்கள்.**

*உங்கள் கொள்வனவின் மூலம் நீங்களும் எமது அறப்பணியின் பங்காளர் ஆகுங்கள்...*

**உங்கள் வீடு வரை சேவை புரிய நாம் காத்திருக்கின்றோம்**




# இலங்கைக்கு அடுத்த அடி





## இலங்கை எதிர் பாகிஸ்தான்

மிர்பூர் மைதானம்

இலங்கை 188/10 (45.4) பாகிஸ்தான் 189/4 (39.5)

பாகிஸ்தான் அணிக்கு 6 விக்கெட்டுக்களால் வெற்றி

*ஆட்ட நாயகன்: ஐசஸ் சீமா*

**இலங்கை**

| பெயர் | ஆட்டமிழப்பு | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| ஜெயவர்த்தன | c மொஹமட் ஹபீஸ் b ஐசஸ் சீமா | 12 | 15 | 1 | 0 |
| டில்ஷான் | c சயீட் அஜ்மல் b ஐசஸ் சீமா | 20 | 20 | 4 | 0 |
| சங்கக்கார | b ஐசஸ் சீமா | 71 | 92 | 4 | 1 |
| சந்திமால் | c யூனிஸ்கான் b உமர்குல் | 0 | 4 | 0 | 0 |
| திருமன்னே | c உமர் அக்மல் b ஹமாட் அசாம் | 7 | 18 | 0 | 0 |
| தரங்க | b சயீட் அஜ்மல் | 57 | 74 | 4 | 0 |
| மஹரூப் | c மிஸ்பா உல்ஹக் b சயீட் அஜ்மல் | 2 | 8 | 0 | 0 |
| குலசேகா | c சப்ரஸ் அகமத் b உமர்குல் | 4 | 16 | 1 | 0 |
| பிரசன்ன | (ஆட்டமிழக்காமல்) | 5 | 17 | 0 | 0 |
| மலிங்க | b ஐசஸ் சீமா | 1 | 6 | 0 | 0 |
| லக்மல் | c நசீர் ஜேம்ஸ்ட் b சயீட் அஜ்மல் | 0 | 4 | 0 | 0 |
| *உதிரிகள்* | | 9 | | | |
| **மொத்த ஓட்டங்கள்** | | 188 | | | |

*இலக்கு இழப்பு: 1-33, 2-43, 3-47, 4-65, 5-161, 6-165, 7-172, 8-182, 9-187, 10-188*

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| உமர்குல் | 8 | 1 | 20 | 2 |
| ஐசஸ் சீமா | 9 | 0 | 43 | 4 |
| மொஹமட் ஹபீஸ் | 10 | 0 | 40 | 0 |
| ஹமாட் அசாம் | 4 | 0 | 21 | 1 |
| சயீட் அஜ்மல் | 8.4 | 1 | 27 | 3 |
| சயீட் அப்ரிடி | 6 | 0 | 32 | 0 |

Sri Lanka Cricket

**பாகிஸ்தான்**

| பெயர் | ஆட்டமிழப்பு | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| மொஹமட் ஹபீஸ் | c சந்திமால் b பிரசன்னா | 11 | 35 | 1 | 0 |
| நசீர் ஜேம்ஸ்ட் | c தரங்க b லக்மல் | 18 | 25 | 3 | 0 |
| யூனிஸ்கான் | c மஹரூப் b லக்மல் | 2 | 11 | 0 | 0 |
| மிஸ்பா உல்ஹக் | (ஆட்டமிழக்காமல்) | 72 | 93 | 9 | 1 |
| உமர் அக்மல் | c தரங்க b மஹரூப் | 77 | 72 | 7 | 2 |
| ஹமிட் அசாம் | (ஆட்டமிழக்காமல்) | 4 | 5 | 1 | 0 |
| *உதிரிகள்* | | 5 | | | |
| **மொத்த ஓட்டங்கள்** | | 189 | | | |

*இலக்கு இழப்பு: 1-29, 2-31, 3-33, 4-185*

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| மலிங்க | 8 | 1 | 44 | 0 |
| குலசேகர | 7 | 2 | 22 | 0 |
| லக்மல் | 8 | 1 | 37 | 2 |
| பிரசன்ன | 7.5 | 1 | 49 | 1 |
| மஹரூப் | 7 | 0 | 23 | 1 |
| டில்சான் | 2 | 0 | 13 | 0 |

ஆசியக் கிண்ணத் தொடரில் பாகிஸ்தானுடனான நேற்றைய ஆட்டத்தில் இலங்கை அணி தோல்வியைத் தழுவியதன் மூலம் தொடரின் இறுதியாட்டத்தில் பங்குபெறும் வாய்ப்பை இழந்தது. அத்துடன் பாகிஸ்தான் அணி 12 வருடங்களின் பின்னர் இறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற்றது.

ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடர் பங்களாதேஷில் இடம்பெற்று வருகின்றது. இதில் இலங்கை, பாகிஸ்தான் அணிகள் நேற்று மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணியின் தலைவர் மஹேல ஜெயவர்தன முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார். இலங்கை அணியில் மலிங்க நேற்றைய தினம் உள்வாங்கப்பட்டிருந்தார்.

மஹேல, டில்ஷான் ஜோடி இலங்கைக்கான ஆரம்பத்தை அதிரடியாக வழங்கியது. இருப்பினும் அந்த அதிரடியான ஆட்டம் நீண்ட நேரம் நீடித்து நிலைக்கவில்லை. ஆரம்பத்தில் இலங்கைக்கு ஓட்டங்களை வாரிவழங்கிய ஷீமா ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் இருவரையும் அடுத்தடுத்த பந்து பரிமாற்றங்களில் பவிலியனுக்கு அனுப்பி வைத்தார்.

சடுதியான இலக்கு இழப்பின் பின்னர் களம்புகுந்த இளம் வீரர்களான சந்திமால், திரிமன்னே இருவரும் ஒற்றை ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பி ஏமாற்றினர். 87 பந்துகளில் 65 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை இழந்து இலங்கை தடுமாறிக் கொண்டிருந்தது. தடுமாற்றத்திலிருந்து சிறப்பாக கரைசேர்க்கும் வகையில் சங்ககார, தரங்க இருவரும் இணைந்து துடுப்பெடுத்தாடினர். பந்து வீச்சு பவர்பிளேயில் வெறுமனே 11 ஓட்டங்கள் மட்டுமே பெறப்பட்டது.

சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய தரங்க 66 பந்துகளில் தனது 26 ஆவது அரைச்சதத்தையும் சங்ககார 75 பந்துகளில் 72 ஆவது அரைச்சதத்தையும் பூர்த்தி செய்தனர். மிகச் சிறப்பாக 96 ஓட்டங்கள் இருவரிடையேயும் ஐந்தாவது இலக்குக்காக பகிரப்பட்ட நிலையில் துடுப்பாட்ட பவர்பிளே எடுக்கப்பட்டது. துடுப்பாட்ட பவர்பிளேயின் முதலாவது பந்து பரிமாற்றத்தை அஜ்மல் பந்து வீச நிலைத்து அணிக்கு தூணாக நின்ற தரங்க ஆட்டமிழந்தார். தொடர்ந்து மஹரூப்பும் துடுப்பாட்ட பவர்பிளேயில் ஆட்டமிழக்க இலங்கையின் போக்கு ஆட்டம்காணத் தொடங்கியது.

அதன் பின்னர் சங்ககார தனித்து அதிரடியாக ஆடத் தொடங்கினார். 42 ஆவது பந்து பரிமாற்றத்தின் கடைசிப் பந்தில் ஆறு ஓட்டம் விளாசினார். அடுத்த பந்திலேயே ஆட்டமிழந்து சங்காவும் வெளியேற பின்வரிசை வீரர்கள் ஒற்றை இலக்க ஓட்டத்தையே கஷ்டப்பட்டு பெற்றுக் கொண்டனர். இறுதியில் 188 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்து சுருண்டு கொண்டது. இலங்கையின் முக்கிய இலக்குகளை கொய்த ஷீமா ஒரு நாள் கிரிக்கெட் தொடரில் தனது மிகச் சிறந்த பந்துவீச்சுப் பெறுமதியை நேற்றுப் பதிவு செய்தார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய பாகிஸ்தான் அணியின் ஹபீஸ், நஷீர் இருவரும் ஆரம்பத்திலிருந்து ஆமை வேகத்தில் ஓட்ட எண்ணிக்கையை நகர்த்தினர். இருப்பினும் இலங்கை அணி வென்றாக வேண்டிய கட்டாயத்தில் விளையாடியதால் 188 ஓட்டங்களுக்கு பாகிஸ்தான் அணியை கட்டுப்படுத்தும் வகையில் களத்தடுப்பு வியூகம், பந்து வீச்சு என்பவற்றை அமைத்தது. இலங்கையின் வியூகத்தில் சிக்கிய பாகிஸ்தானின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் விரைவாக வெளியேற 12.5 பந்து பரிமாற்றங்களில் 33 ஓட்டங்களுக்கு 3 இலக்குகள் இழக்கப்பட்டது.

பாகிஸ்தானின் வெற்றி கேள்விக்குறியான சந்தர்பத்தில் இணைந்த உமர் அக்மல், மிஷ்பா உல் ஹக் இருவரும் ஆரம்பத்தில் நிதானமாக ஓட்டங்களைக் குவித்தனர். பின்னர் களத்தில் இலங்கையின் பந்து வீச்சை தாக்குப் பிடித்த பின்னர் சுமாராக ஓட்டங்களைக் குவித்தனர். மிஷ்பா 78 பந்துகளில் தனது 19 ஆவது அரைச்சதத்தை பூர்த்தியாக்கினார், மிஷ்பா 40 ஓட்டங்களை கடந்து துடுப்பெடுத்தாடிய சந்தர்பங்களில் 10 தடவைகள் மாத்திரமே பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றிருக்கின்றது.

மறுமுனையில் அதிரடியாக ஆடிய அக்மல் 46 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சுரங்க லக்மல் வீசிய ஷோட் பிச் பந்தை டீப் பக்வேட் ஸ்குயார்லெக் திசையில் அடிக்க அங்கே களத்தடுப்பிலிருந்து திரிமன்னே அதனை கோட்டை விட்டார். பின்னர் 54 பந்துகளில் அக்மல் தனது 14 ஆவது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார்.

இவர்களது இணைப்பாட்டமாக 152 ஓட்டங்களைப் பகிர்ந்ததன் மூலம் ஆசியக் கிண்ணத் தொடரில் பாகிஸ்தான் அணி நான்காவது இலக்குக்காக பகிர்ந்த சிறப்பான இணைப்பாட்டமாக இது பதிவானது. வெற்றிக்கு நான்கு ஓட்டங்கள் தேவையான நிலையில் மஹரூப்பின் பந்தை ஓங்கி அடித்த அக்மல் தரங்கவின் சிறப்பான பிடியெடுப்பினால் ஆட்டமிழந்தார்.

போனஸ் புள்ளியுடன் வெற்றி பெறுவதற்காக போராடிய பாகிஸ்தான் இறுதியில் அதனை ஒரு பந்து மீதமிருக்கையில் எட்டியது. இந்த வெற்றிக்கு காரணமான ஷீமா ஆட்டநாயகனாக தெரிவானார். (5)

## அமைச்சுப் பதவிகளை ராஜினாமா செய்வோம்

01 வருமாறு -

இந்திய அரசின் நிலைப்பாடு தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா வெளியிட்ட அறிக்கைக்கு நாடாளுமன்றத்தில் தி.மு.க. உறுப்பினர்கள் கனிமொழி மற்றும் திருச்சி சிவா ஆகியோர் பதிலளித்துள்ளனர்.

எமது கேள்விக்கு மத்திய அரசு இன்னமும் சரியாகப் பதிலளிக்கவில்லை.

இந்தப் பிரேரணையை மத்திய அரசு ஆதரிக்காவிட்டால் தமிழர்களுக்கு மத்திய அரசு இழைத்த துரோகமாகவே கருதப்படும்.

ஜெனிவாப் பிரேரணையை இந்தியா ஆதரிக்கத் தவறினால், அமைச்சரவையில் இருந்து விலகுவது குறித்து முடிவெடுக்கப்படும். - என்றார்.

மத்திய அரசுக்கான ஆதரவை விலக்கிக் கொள்வீர்களா என்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்துள்ள மு.கருணாநிதி, அதுபற்றி தான் தனியாக முடிவெடுக்க முடியாது என்றும் மத்திய குழுவில் முடிவு செய்யப்படும் என்றும் கூறியுள்ளார்.

அதேவேளை மத்திய அரசில் இடம்பெற்றுள்ள தி.மு.க. அமைச்சர்களான நெப்போலியன், பழனிமாணிக்கம், மு.க.அழகிரி, காந்திசெல்வன், ஜெகத்ரட்சகன் ஆகியோர் வார இறுதியில் மு.கருணாநிதியைச் சந்தித்து தமது பதவிவிலகல் கடிதங்களை முன்கூட்டியே அவரிடம் கையளிக்கவுள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (த-சி)

## கண்ணீர் அஞ்சலி



யூனியன் அசூரன்ஸ்
உத்தியோகத்தர் V.துவாரகனின்
அன்புத்தாய்
திருமதி வேல்முருகானந்தன்
ஈஸ்வரநாயகி

எமது நிறுவனத்தின் உத்தியோகத்தரான V.துவாரகனின் அன்புத் தாய் திருமதி வேல்முருகானந்தன்- ஈஸ்வரநாயகி அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!சாந்தி!சாந்தி

முகாமையாளர்கள், உத்தியோகத்தர்கள்
(யூனியன் அசூரன்ஸ்- பருத்தித்துறைக்கிளை)

## மரண அறிவித்தல்

### திருமதி கோமதி ஜெகன்மோகன்



காரைநகர் களபூமி, கொம்பாவோடையைப் பிறப்பிடமாகவும், 217/1, கடையிற் சுவாமி வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கோமதி ஜெகன்மோகன் நேற்று மாலை (15.03.2012) இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை ஜெகன்மோகனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சின்னத்தம்பி முருகேசு (பேப்பர்)- பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் சீதாமலர் தம்பதியரின் அன்பு மருமகளும், தர்சினி, தாரணி (கலைப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயும், சிவக்கொழுந்து, தவமணிதேவியின் பெறாமகளும், கோபால கிருஸ்ணன், கமலாதேவி, தவபாலன், ஜெயபாலன், காலஞ்சென்ற விமலாதேவி மற்றும் தவசுதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், யோசினி கோபாலகிருஸ்ணன், வதனா ஜெயபாலன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், ரதிக்குமாரின் அன்பு மச்சாளும், நிறோசன், கஜனா, கஜீபன், துர்க்கா ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.03.2012) வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணியளவில் 75/10, பிறவுண் வீதி, இல்லத்தில் நடைபெற்று, அவரின் பூதவுடல் கோம்பயன் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*75/10, பிறவுண் விதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
பரமேஸ்வரி *(தாய்)*

## உவகையுடன் வாழ்த்துகின்றோம்

### பா.செந்தில்நந்தனன்

(SLAS -Special)
பிரதேச செயலர் நல்லூர்



நல்லூரின் நல்லரசை பாங்குடன்
கோலோச்சும் செந்தில் வேலவனின்
கிருபை நிறைசெம்மையராம்
நந்தனன் - நிர்வாகசேவையின்
அதிசிறந்த மகுடம் சூடி நற்பேறு
பெற்றதனால் - ஊழியர் நாம்
ஒன்று கூடி நிகரில் ஏற்றங்காண
உவகையுடன் வாழ்த்துகின்றோம்.

உத்தியோகத்தர்கள் நலன்புரிசங்கம்
பிரதேச செயலகம்
நல்லூர்.

## மனம் மயங்கி அழ செந்நீரால் கொதிப்புற்ற கண்ணீர்ப் பூக்கள்

### திருமதி லலிதா சண்முகலிங்கம்



(ஓய்வுபெற்ற உபஅதிபர், யா/ நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம்)

முன்னாள் வடமாகாண துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளரும் எமது பாடசாலையின் விளையாட்டுத்துறை ஆலோசகரும் பயிற்றுவிப்பாளருமான வி.கே. சண்முகலிங்கம் அவர்களின் அன்பு மனைவி

திருமதி லலிதா சண்முகலிங்கம்

அவர்கள் காலமானதையிட்டு அவரது பிரிவால் அகமுருகி கண்ணீரோடு வாழ்கின்ற குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

நவீல்ட் பாடசாலை சமூகம்.

## மரண அறிவித்தல்கள்

### மார்க்கண்டு நாகையா



(முன்னாள் கிராம சபை உறுப்பினர் உடுவில் - இலங்கை தமிழரசுக் கட்சி)

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு நாகையா (15.03.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - நாகமணி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லையா - சீனிக்குட்டி தம்பதியரின் அருமை மருமகனும், மனோன்மணியின் பாசமிகு கணவரும் நவரத்தினம் காலஞ்சென்றவர்களான யோகநாதன் நல்லையா (முன்னாள் ப.நோ.கூ.ச. முகாமையாளர்), செல்வராணி ஆகியோரின் அருமைச் சகோதரனும், கிருபாகரன் (மதுவரித்திணைக்களம்), சந்திரவதனா (பிரான்ஸ்), கலையரசன் (இந்தியா), கலையரசி (கொழும்பு), ரவிச்சந்திரன் (விவசாயப்போதனாசிரியர் - வவுனியா), செந்தில்நாதன் (ஆசிரியர் - கோண்டாவில் இராமகிருஷ்ணா வித்தியாலயம்), அபிராமி ஆகியோரின் அன்புத் தந்தையும், விஜியா, தயாபரன் (பிரான்ஸ்), சுதர்சினி, ரவீந்திரகுமார், கலைவாணி (பிரதேச செயலகம் - வவுனியா), தயாளினி (ஆசிரியர்) ஆகியோரின் மாம னும் சரவணன், சேந்தன், கௌசிகன், ஆதித்தியன், சாகித்தியன், நாதங்கி ஆகியோரின் அன்புமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கௌசிசேந்தகம்,
பாப்பாதோட்டம் வீதி,
இணுவில் மேற்கு, இணுவில்.

தகவல்:
நா. கிருபாகரன் (மகன் - மதுவரித்திணைக்களம்)

### திருமதி தேவமனோகரி மார்க்கண்டேசகர்

கோணாவளை வீதி கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தேவமனோகரி மார்க்கண்டேசகர் நேற்று (15.03.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - தங்கலெட்சுமி தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவலிங்கம் மற்றும் பரமேஸ்வரி, மகாலிங்கம், காலஞ்சென்ற அருமைநாயகம், மற்றும் சோதிமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும் மாலதி, மகாதேவன், மோகனதாஸ், ஜெயமோகன் ஆகியோரின் அன்புத்தாயும், மாதுளன், சகானா, எழிலன், அபிநயன், திவ்வியன், ஹர்சினி, ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் சிவகுமார், சுகந்தினி, நிஷாந்தினி, தர்ஷா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.03.2012) வெள்ளிக்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'கோணாவளை வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்

### மகாலட்சுமி விட்ணசிங்கம்



பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், சோமராந்தோட்டம், உடுவில் வடக்கு, சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகாலட்சுமி விட்ணசிங்கம் நேற்று(15.03.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுச்சாமி - சோதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற விட்ணசிங்கத்தின் (C.T.B.) அன்பு மனைவியும், ராஜ்குமார், தீபா, ரவிசங்கர் (Union Assurance காப்புறுதி நிறுவனம்), சீலன் ஆகியோரின் அன்புத் தாயும், மகாதேவா, மங்கயர்க்கரசி, ரவீந்திரன் (சுவிஸ்), ரதிமோகன் (சுவிஸ்), ஜெயபாலன் (சுவிஸ்) ஆகியோரின் சகோதரியும், தர்சினியின் அன்பு மாமியும், ரஜீவ், தர்சிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.03.2012) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பி.ப. ஒரு மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சோமராந்தோட்டம்,
உடுவில் வடக்கு, சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## தேர்தல் ஒத்திவைப்பு 19 ஆம் திகதியே முடிவு

01 அவர்கள் தரப்பில், தேர்தலை ஒத்திவைப்பதற்கு மூன்று பூர்வாங்க ஆட்சேபனைகள் முன்வைக்கப்பட்டன.

* மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் மட்டுமே எதிர்மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். அதில் அனைத்து வேட்பாளர்களின் பெயர்களும் உள்ளடக்கப்படவேண்டும்.
* வாக்காளர்களுக்கு உரிய வாக்களிக்கும் உரிமையை நீதிமன்றம் தடுக்கக்கூடாது.
* தேர்தலில் வாக்காளர்கள் வாக்களிக்காவிட்டால் தேர்தலின் பின் அதனை ஆட்சேபித்து வழக்குத் தொடர முடியும்.

ஆகிய மூன்று ஆட்சேபனைகளையும் தெரிவித்தனர்.

தேர்தலில் வாக்காளர்கள் வாக்களிக்க மாட்டார்கள் என்ற ஊகத்தின் அடிப்படையில் மக்களின் வாக்களிக்கும் உரிமையை நீதிமன்றம் தடுக்கக் கூடாது என்றும் அவர்கள் வாதிட்டனர்.

குறிப்பிட்ட இரு சபைகளுக்குமான தேர்தல்கள் ஏற்கனவே மூன்று தடவைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில் தற்போதும் அதனை ஒத்தி வைப்பது அவர்களின் மனித உரிமை மீறல் என்றும் கூட்டமைப்பு சட்டத்தரணிகள் மன்றில் சுட்டிக்காட்டினர்.

இதனை அடுத்து விசாரணையை எதிர்வரும் 19ஆம் திகதிக்கு ஒத்தி வைத்த நீதியரசர் அன்றைய தினமே தீர்ப்பும் வழங்கப்படும் என்று அறிவித்தார். எதிர்வரும் 24ஆம் திகதி தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-02)

## மரண அறிவித்தல்

### நாகமணி சகாயநாதன்



கரந்தன் நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், மத்தியூஸ் வீதி, சுண்டுக்குழியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட நாகமணி சகாயநாதன் (15.03.2012) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சின்னையா- நாகமணி காலஞ்சென்ற நாகமணி தவமணி ஆகியோரின் மகனும், காலஞ்சென்ற பிரான்ஸிஸ் மரியதாஸ் மற்றும் சொர்ணம்மா தம்பதியரின் மருமகனும், இராசநாயகம் (சமூக சேவைத் திணைக்களம்), உதயகுமார், கீதபொன்கலன் (ஆசிரியர்), காலஞ்சென்ற ஜீவகுமார் மற்றும் ஜெயபாலன், குணபாலன், சிவபாலன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், மரியசீலன், டொறினா, நிக்ஷன், Rev.fr மக்மிலன் (செபமாலை தாசர்சபை) காலஞ்சென்ற டினேஷ், சாந்தன், மாலினி (லண்டன்), ஜான்ஸன் (டோகா) ஆகியோரின் மைத்துனரும், மதுரநாயகியின் அன்புக் கணவரும், சுபதர்சினி (உள்ளகப் பயிற்சி ஆசிரியர்), சசீகரன், சதீபன், பிரசோபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (16.03.2012) வெள்ளிக்கிழமை பி.ப 3 மணியளவில் யாழ். மரியன்னைப் பேராலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு நல்லடக்கத்துக்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இ.41, மத்தியூஸ் வீதி,
சுண்டுக்குழி தெற்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## ஆசிரியர்கள் தேவை

தரம்-10,11 ICT கற்பித்தல் முன் அனுபவம் அவசியம். தகுதியானவர்கள் தொடர்பு கொள்ளவும்.
T.P:0779122918
Mathuram Institute, Ducth Road, Kopay.
(15717) (12,14)

## மணமகள் தேவை

கனேடிய குடியுரிமையுடைய Computer Engineer ஆக தொழில் பார்க்கும் மணமகன் தற்போது யாழ்ப்பாணத்திலுள்ளார் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 30 வயதுக்குட்பட்ட அழகான ஆங்கிலம் நன்கு தெரிந்த பட்டதாரி மணமகள் தேவை.
தொடர்பு: 0771286724
Email: SUGATHARMA@Yahoo.Com (15715) (7,12,14)

## வீடு வாடகைக்கு

பனிக்கர் ஒழுங்கை திருநெல்வேலியில் வீடு வாடகைக்கு உண்டு. அரச/அரசசார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
(15798) (7,12,14) தொடர்பு: 0776183205

## உடனடி வேலைவாய்ப்பு

01. சாரதி - பாரஊர்தி / பிக்கப்வகை வாகனங்கள்
02. தொழில்நுட்பவியலாளர் -
குளிர்சாதனப்பெட்டி (Refrigetrator)
வளிப்பதனாக்கி (Airconditioner)

சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும். உரிய ஆவணங்களுடன் நேரில் வரவும்.

**Jaffna Electrical - Showroom**
(Authorized Dealer for Abans Ltd)
141, Power House Road, Jaffna. T.P. 021 222 5766

## பார்மசி விற்பனைக்கு

வடமராட்சியில் தற்போது நன்கு இயங்கிக் கொண்டிருக்கும் பார்மசி & குறோசரி விற்பனைக்குண்டு.
தொடர்பு - 0721380869

## கனரக வாகனச் சாரதிக்கான வெற்றிடம்

எமது இல்லத்திலுள்ள பேருந்துக்கு சாரதி தேவையாகவுள்ளது.
அனுபவமுடையவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.
வாகன அனுமதிப்பத்திரப் பிரதியுடன் விண்ணப்பிக்கவும்.
விண்ணப்ப முடிவுத் திகதி 22.03.2012.
ஊதியம் பேசித் தீர்மானிக்கவும்.

ஸ்ரீ பரமானந்த சிறுவர் முதியோர் இல்லம்
வதிரி, கரவெட்டி.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மார்க்கண்டு சின்னம்மா

புத்தூர் கிழக்கைப் பிறப்பிடமாகவும், புத்தூர் மேற்கை வசிப்பிடமாகவும், கொண்ட திருமதி மார்க்கண்டு சின்னம்மா நேற்று (15.03.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பர் - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்ற தாமோதரம்பிள்ளை - மார்க்கண்டுவின் அன்பு மனைவியும் அருணகிரிநாதன் (ஜேர்மனி), காலஞ்சென்ற உதயகுமார், பராசக்தி ஆகியோரின் அன் புத் தாயும், சந்திராதேவி (ஜேர்மனி), காலஞ்சென்ற வசந்திமாலா மற்றும் மகேஸ்வரன் (பிரதி கல்விப் பணிப்பாளர், சாவகச்சேரி) ஆகியோரின் அன்பு மாமியும், ஈழவாணி (ஜேர்மனி), ஈழவேந்தன் (ஜேர்மனி), ஈழமானுஜன் (ஜேர்மனி), ஈழலோ ஜினி (ஜேர்மனி), செந் தூரன் (பிரான்ஸ்), குகதீபன், சங்கீதன் (கனடா), கோபிகா, துர்க்கா, அச்சுதன் (பிரான்ஸ்), ஞானரதன் ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான இராமநாதன், செல்லத்துரை, அன்னபூரணி (வள்ளிப் பிள்ளை) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.03.2012) வெள்ளிக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகப் புத்தூர் கிந்திட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுன்னாகம் வீதி,
புத்தூர் மேற்கு,புத்தூர்.

தகவல்:
சி.மகேஸ்வரன்
(மருமகன்)

### யாக்கோப்பு ஜெலஸ்ரீன் ஜீவா



(மாபிள் பதிப்பாளர்)

6ஆம் வட்டாரம், நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், இல. 432/8, மடம்வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட யாக்கோப்பு ஜெலஸ்ரீன் ஜீவா நேற்று (15.03.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யாக்கோப்பு - றோசலீன் தம்பதியரின் அன்பு மகனும், மரியதாசன், அகத்தம்மாவின் பெறாமகனும், ஜெயா (கொழும்பு), ராணி, ஜெலின், பொலின் ஆகியோரின் சகோதரரும், அன்ரனிற்றாவின் அன்புக் கணவரும், அலன்ராஜ், சதன்ராஜ், ரனுஷியா, டல்சியா, சிம்ராஜ், பிரகாஷ்ராஜ் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (17.03.2012) சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், வெளிநாட்டில் வசிக்கும் உறவுகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

432/8, மடம்வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## இந்தியாவிடம் மன்னிப்புக் கோரிய இலங்கைத் தூதர்

01↘ நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் கருத்துத் தெரிவித்திருந்ததிற்காக அவருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. அழைப்பாணையைப் பெற்றுக் கொண்ட பிரசாத் காரியவசம் நேற்று நேரில் ஆஜராகி தனது கருத்துக்கு மன்னிப்புக் கோரியுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபை மாநாட்டில் இலங்கைக்கு எதிரான அமெரிக்கப் பிரேரணைக்கு இந்தியா ஆதரவு தெரிவிக்க வேண்டும் என்று ஒட்டுமொத்த தமிழகமும் போர்க்கொடி உயர்த்தியுள்ளது. இதுதொடர்பாக நாடாளுமன்றத்தைத் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் முடக்கிப் போட்டனர்.

இந்த நிலையிலேயே இந்தியாவில் உள்ள (தமிழகத்தில்) ஒருபகுதியினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே தொடர்பு இருக்கிறது என இந்தியாவுக்கான இலங்கைத் தூதர் பேசியிருந்தார்.

இதுகுறித்து உடனடியாக மத்திய வெளிவிவகார அமைச்சு அவருக்கு அழைப்பாணை அனுப்பியது. இதையடுத்து தூதர் பிரசாத் காரியவசம் நேரில் சென்று மன்னிப்புக்கேட்டார். (த-சி)

## மேனனைச் சந்திக்க மறுத்து ஜெயலலிதா திடீர் அதிரடி

01↘ அதிகாரிகளுடனோ நேரடிப்பேச்சு நடத்துவதை முதல்வர் விரும்பவில்லை'' என்று தமிழக அரசின் மூத்த அமைச்சர் ஒருவர் நேற்றிரவு உதயனி'டம் தெரிவித்தார்.

''ஜெனிவாவில் இலங்கை விவகாரம் குறித்தும், அது தொடர்பான தமிழக மக்களின் உணர்வுகள் பற்றியும் விளக்கி அம்மா (ஜெயலலிதா) இரண்டு கடிதங்களை பிரதமர் மன்மோகனுக்கு அனுப்பினார். அந்த இரண்டு கடிதங்களுக்கும் உரிய பதில் அனுப்பப்படவில்லை. அவற்றை கிஞ்சித்தும் மத்திய அரசு கவனிக்கவில்லை. இந்த நிலையில், அதிகாரிகளைச் சந்திப்பது அர்த்தமற்ற செயல். இதனால்தான் மேனனின் கோரிக்கையை நிராகரித்தார் முதல்வர்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கிடையில் தமிழக முதலமைச்சரின் இந்த நிராகரிப்பால் அதிர்ச்சியடைந்துள்ள மத்திய அரசு, மூத்த அமைச்சர் ஒருவரை தமிழ்நாட்டுக்கு அனுப்புவது குறித்து தீவிரமாக ஆராய்ந்ததாக அறியமுடிகின்றது. (உ-சி)

## 'தண்டிக்கப்படாத போர்க் குற்றங்கள்' சனல் – 4 ஆவணப்படம் வெளிவந்தது

01↘ ளது. 50 நிமிடங்களை அது கொண்டிருக்கிறது.

இலங்கையில் நிகழ்ந்த போர்க் குற்றங்கள் தொடர்பாக வெளியிட்ட 'சிறிலாங்காவின் கொலைக் களங்கள்' என்ற முதல் ஆவணப்படத்தில் தெரிவிக்கப்பட்ட போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இதுவரையில் எந்த விதமான விசாரணைகளும் நடத்தப்படவில்லை என்பதைக் குறிப்பிட்டுக் காட்டியுள்ள 'சனல்-4', இந்த ஆவணப்படத்தில் போர்க் குற்றங்களுக்கான மேலும் ஆதாரங்களைத் தான் வெளியிடுவதாகக் குறிப்பிடுகிறது.

மிகத் தெளிவான நான்கு சம்பவங்களின் அடிப்படையில் இலங்கை அரச படைகள் மேற்கொண்ட போர்க் குற்றங்கள் இந்த ஆவணப் படத்தில் ஆராயப்பட்டுள்ளன. அதற்குப் பொறுப்பானவர்களையும் இந்தப் படம் இனங்காட்டி உள்ளது. அப்போதைய இராணுவத்தின் தளபதியாக இருந்த சரத் பொன்சேகா, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரே போர்க் குற்றங்களுக்குப் பொறுப்பானவர்கள் என்று இந்த ஆவணப்படத்தின் மூலம் 'சனல்-4' தொலைக்காட்சி நிறுவுகிறது.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தினைச் சேர்ந்த சர்வதேசப் பணியாளர்கள் இருவரை உள்ளடக்கிய குழு உடையார்கட்டுப் பகுதியில் 2009ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23ஆம் திகதி தற்காலிக தங்குமிடம் ஒன்றை அமைக்க முயற்சித்துக் கொண்டிருந்த சம்பவத்துடன் இந்த ஆவணப்படம் போர்க் குற்றங்களை ஆராயத் தொடங்குகிறது.

இலங்கை அரசு கூறியது போன்று இல்லாமல் சூனியப் பிரதேசங்கள் அல்லது தாக்குதல் தவிர்ப்பு வலயங்கள் மீது இலங்கை இராணுவத்தினர் தொடர்ச்சியான தாக்குதல்களை மேற்கொண்டனர் என்கிற முதலாவது போர்க் குற்றச்சாட்டை ஆவணப்படம் முன்வைக்கிறது.

போர் வலயத்துக்குள் அகப்பட்ட மக்களின் எண்ணிக்கையை வேண்டும் என்றே குறைத்துக் காட்டி, உண்மையான மக்கள் எண்ணிக்கைக்கு வேண்டிய உணவு மற்றும் மருந்துப் பொருள்களை அனுப்பி வைக்காமல் தடையை ஏற்படுத்தியமை அரசின் இரண்டாவது போர்க் குற்றம் என்றும் நிறுவப்படுகிறது.

அரசு உலக நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் உறுதி அளித்தது போன்று போரின் இறுதி நாள்களில் கனரக ஆயுதங்களின் பாவனையை நிறுத்தவில்லை என்றும் மோதல் தவிர்ப்பு வலயங்கள் மீது கனரக ஆயுதங்கள் கொண்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்றும் ஆதாரங்களுடன் நிறுவும் இந்த ஆவணப்படம் மூன்றாவது போர்க் குற்றச்சாட்டாக அதனை முன்வைக்கிறது.

நான்காவது போர்க் குற்றச்சாட்டு தேசியத் தலைவர் பிரபாகரனின் மூன்றாவது மகன் பாலச்சந்திரன் சரணடைந்த பின்னர் கொல்லப்பட்டமையை ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டுகிறது. உடல் ரீதியாக பாலச்சந்திரன் சித்திரவதை செய்யப்படவில்லை என்றாலும் உளவியல் ரீதியாகக் கடுமையான சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டார் என்று பேராசிரியர் ஒருவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

தலைவர் பிரபாகரன் கொல்லப்பட்டதாகக் குறிப்பிட்டு அரசு வெளியிட்ட காணொலிக் காட்சிகளில் காட்டப்படும் நபரும் போரில் கொல்லப்பட்டமைக்கான சான்றுகள் இல்லை என்றும் அருகில் இருந்து அதிகூடிய விசையுள்ள துப்பாக்கியால் சுட்டப்பட்டதாலேயே அந்த மனிதரின் தலையில் காணப்பட்ட காயம் ஏற்பட்டிருக்க முடியும் என்றும் சில செக்கன்களில் அடங்கும் காட்சிகளில் கூறப்பட்டுள்ளது.

இந்தப் படத்தில் கூறப்பட்டுள்ள விடயங்களுக்குப் பின்னராவது இலங்கையில் நிகழ்ந்த போர்க் குற்றங்களுக்கு நீதி கிடைக்குமா என்று கேள்வி எழுப்புவதுடன் படம் நிறைவுபெறுகிறது.

http://www.youtube.-com இணைய முகவரியில் Srilanka's killing fields 2 - unpunished war crimes என்று தேடினால் ஆவணப் படத்தைப் பார்வையிடலாம். (உ-01)

## வடக்கின் வைத்தியசாலைப் பணிகள் இன்று முதல் முற்றாக முடங்கும் அபாயம்

01↘ சிகிச்சை பெற முடியாத அவல நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த மூன்று தினங்களாக இந்த அவல நிலை தொடர்வதால் ஏராளமான நோயாளிகள் ஏமாற்றத்தோடு திரும்பிச்செல்கின்றனர்.

எனினும் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்ததைத் தொடர்ந்து மனிதாபிமான ரீதியில் அவசர நோயாளர்களுக்காக மேற்கொண்டு வந்த பணிகளையும் நிறுத்தப் போவதாக யாழ். மாவட்ட நிறைவுகாண் மருத்துவவியல் தொழில் வல்லுநர்கள் ஒன்றியத்தின் தலைவர் என். ஜெயபாஸ்கரன் அறிவித்துள்ளார். இதனால் தற்போது உள்ள நிலையை விட நிலமை இன்னும் மோசமாகும் என்றும் நோயாளர்கள் தமக்குரிய சிகிச்சைகளை அரச வைத்தியாசாலைகளில் பெற்றுக் கொள்ளமுடியாத நிலை ஏற்படுமென்றும் அஞ்சப்படுகின்றது.

[illegible]க்கிலும் இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தால் அரச வைத்தியசாலைகளின் வழமையான பணிகள் கடந்த மூன்று தினங்களாகப் பாதிப்படைந்துள்ளன. வேலைநிறுத்தப் போராட்டம் பற்றி அறிந்திராத மக்கள் சிகிச்சை பெறுவதற்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு சென்றுள்ளனர். எனினும் அவர்கள் அங்கு ஆய்வுகூடப் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கோ, எக்ஸ்றே படம் எடுப்பதற்கோ முடியவில்லை. இதனால் ஆய்வுகூடப் பரிசோதனை அறிக்கைகளோ, எக்ஸ்றே படமோ இல்லாமல் மேலதிக சிகிச்சைகளை மேற்கொள்ள முடியாது என்று வைத்தியர்கள் கைவிரித்து விடுகின்றனர். இதனால் நோய்க்கு உரிய சிகிச்சை பெற்றுக்கொள்ள முடியாமலேயே பெருமளவானோர் திரும்பிச் செல்லவேண்டியுள்ளது.

இதேவேளை, நோயாளர்களுக்கு மருந்துச் சிட்டைகளை வைத்தியர்கள் எழுதிக் கொடுத்த போதும் மருந்தாளர்களும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளதால், சிட்டைகளில் எழுதப்பட்ட மருந்துகளையும் பெறமுடியாதுள்ளது. எனவே பெருமளவு பணத்தைச் செலவிட்டு தனியார் மருந்தகங்களிலேயே அவர்கள் தமக்குரிய மருந்து வகைகளைக் கொள்வனவு செய்யவேண்டியுள்ளது. நேற்றைய தினம் வெளி நோயாளர் பிரிவில் குறித்த சில மணித்தியாலயங்கள் மருந்தாளர்கள் மூலம் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மருந்துகள் வழங்கப்பட்டன. எனினும் அவற்றைப் பெற நோயாளர்கள் நான்கு, ஐந்து மணித்தியாலயங்கள் கால் கடுக்க நீண்ட வரிசையில் காத்திருந்தனர். அவ்வாறு காத்திருந்தாலும் சில வேளைகளில் மருந்து கிடைக்காமற் போன அனுபவங்களும் நோயாளர்களுக்குக் கிடைத்துள்ளன. எனினும் கிளினிக் நோயாளர்களுக்கு மருந்துகள் வழங்கப்படவில்லை.

இதேவேளை தென்னிலங்கையில் அரச மருந்துக் கூட்டுத்தாபனத்தின் "ஒசுசல" நிலையங்களில் அரச வைத்தியசாலைகளில் கொடுக்கப்படும் மருந்துச் சிட்டைகளுக்கு இலவசமாக மருந்துகள் வழங்கப்படுவதால் அங்கு பெரியளவில் பாதிப்பு இதுவரை ஏற்படவில்லை. ஆயினும் வடக்குப் பகுதியில் 'ஒசுசல' நிறுவனத்தின் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதால், இங்குள்ள நோயாளர்கள் பெருமளவு பணத்தைக் கொடுத்து தனியார் மருந்தகங்களிலேயே தமக்குரிய மருந்துகளைக் கொள்வனவு செய்ய வேண்டிய இக்கட்டான நிலை தோன்றியுள்ளது.

இந்த நிலையில் அவசர நோயாளர்களுக்கான பணிகளையும் மருத்துவ உதவியாளர்கள் இடைநிறுத்தவுள்ளதால் வெறுமனே வைத்திய ஆலோசனையை மாத்திரமே பெறக்கூடிய நிலை வடக்குப் பகுதியில் ஏற்பட்டுள்ளது.(ங-14-148)

# ஐ.நா. முறையாகச் செயற்படத் தவறின் இலங்கை பொறுப்புக் கூறாமல் தப்பிவிடும்

01↘ இலங்கையின் அரசமைப்பைப் பாதுகாப்போம் என்று அரச அதிகாரிகள், நீதித்துறை உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட போதிலும், அந்த அமைப்பின் ஒரு பகுதியான 13 ஆம் திருத்தச் சட்டம் இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதில் உள்ள காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களைப் பரவலாக்கும் ஏற்பாடுகளும் வேண்டுமென்றே மீறப்பட்டன.

அரசியல் தீர்வு, மனித உரிமைகள் மற்றும் அரசின் பொறுப்புக்கூறல் தொடர்பாக உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் எடுக்கப்பட்ட முயற்சிகள் 13 ஆம் திருத்தச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும், இலங்கையில் நிலையான சமாதானத்தையும் அபிவிருத்தியையும் ஏற்படுத்த அனைத்துத் தமிழ்க் கட்சிகளுடனும் விரிவான பேச்சுகள் நடத்தப்படும் என்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 2009 மே 26 ஆம் திகதி ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ - மூனுடனான சந்திப்பின்போது வாக்குறுதியளித்தார். அவர்கள் இருவரும் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையில் இது குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசியல் தீர்வு யோசனையைத் தயாரிப்பதற்காக ஜனாதிபதியால் அமைக்கப்பட்ட சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு மூன்று வருடங்களாக 128 தடவைகள் கூடி ஆராய்ந்து தீர்வு யோசனை ஒன்றைத் தயாரித்து ஜனாதிபதியிடம் ஒப்படைத்தது. அந்த அறிக்கை வெளிப்படுத்தப்படவில்லை. சர்வகட்சிப் பிரதிநிதிகள் கூட்டங்களுக்கு நாம் அழைக்கப்படவுமில்லை.

2011 மே மாதம் இந்தியாவுக்கு பயணம்செய்த இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் 13 ஆம் திருத்தச்சட்டத்தின் அடிப்படையில் அதிகாரப்பகிர்வு வழங்கும் நடவடிக்கையில் இலங்கை அரசு ஈடுபட்டுள்ளது என்று இந்திய அரசிடம் கூறினார்.

2012 இலும் இந்திய அரசுக்கு இலங்கை இதுபோன்றதொரு வாக்குறுதியை மீண்டும் அளித்தது. இணைத்தலைமை நாடுகளுக்கும் இந்த உறுதி வழங்கப்பட்டுள்ளது.

அரசியல் தீர்வு தொடர்பாக அரசும் தமிழ்க் கட்சிகளும் பேச்சுகளில் ஈடுபட்டுள்ளன என்று அமைச்சர் மஹிந்த சமரசிங்க இப்போது தெரிவித்துள்ளார். எமது கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசுக்குமிடையில் 2011 ஜனவரியில் ஆரம்பிக்கப்பட்ட பேச்சு எந்தவித முன்னேற்றமுமின்றி ஒருவருடமாகத் தொடர்ந்தது.

இந்தப் பேச்சுகளில் எட்டப்படும் இணக்கப்பாடுகள் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு சமர்ப்பிப்பது என்றும், அந்த இணக்கப்பாடு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் கலந்து கொள்வது என்றும் இருதரப்புகளுக்குமிடையிலான கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டது.

பேச்சைத் தொடர்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது பிரதிநிதிகளை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு நியமிக்கவேண்டும் என்று முன்நிபந்தனை ஒன்றை விதித்து அரசு ஏற்கனவே எட்டப்பட்ட இணக்கப்பாட்டை மீறி ஜனவரி 2012 இல் பேச்சில் இருந்து பின்வாங்கியது.

மேற்கொள்ளப்பட்ட அரசின் ஒட்டுமொத்த நடவடிக்கைகளையும் பார்க்கும் போது அரசு அர்த்தமுள்ள எந்தவொரு நிலையான அரசியல் தீர்வையும் முன்வைப்பதற்கு முயற்சிக்கவில்லை என்பது தெரிகின்றது.

ஆகவே, அரசியல் தீர்வை முன்வைப்பதற்காக இலங்கை அரசு அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது என்று அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்திருப்பதில் எந்தவொரு உண்மையுமில்லை. இக்கூற்று சர்வதேச சமூகத்தைப் பிழையாக இட்டுச்செல்கின்றது.

அதேபோல், மனித உரிமைகளைக் காப்பது தொடர்பிலான அரசின் உறுதிமொழியும் அவ்வாறேதான் உள்ளது.

திருகோணமலையில் 5 தமிழ் மாணவர்கள் கொல்லப்பட்டமை மற்றும் மூதூரில் தொண்டு நிறுவனப் பணிப்பாளர்கள் 17 பேர் கொல்லப்பட்டமை தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக 'உதலாகம' ஆணைக்குழுவொன்று அமைக்கப்பட்டது.

அனைத்துவிதமான மனித உரிமை மீறல்களும் பாரபட்சமின்றி விசாரிக்கப்பட்டு குற்றவாளிகள் நீதிமன்றில் நிறுத்தப்படுவார்கள் என்று சட்டமா அதிபர் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரியும், ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கான இலங்கைப் பிரதிநிதிகள் குழுவின் உறுப்பினருமான கயந்த கொடகொட 2008ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி மனித உரிமைகள் சபையிடம் உறுதியளித்தார்.

ஆனால், இந்த விசாரணை முடிவுகள் பகிரங்கப்படுத்தப்படவோ, குற்றவாளிகள் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படவோ இல்லை. அத்தோடு, அந்த ஆணைக்குழுவின் விசாரணைகள் முழுமை பெறாது முடிவுக்கு வந்தது. அந்த விசாரணை அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டதா இல்லையா என்றும் தெரியாது.

2006இல் கொழும்பில் தமிழர்கள் கடத்தப்படுவதும் கப்பம் பெறுவதும் அதிகரித்திருந்தது. இதை விசாரணை செய்வதற்காக மஹானாம திலகரட்ன ஆணைக்குழுவொன்று அமைக்கப்பட்டது. அந்த ஆணைக்குழுவின் அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவிருந்தது. அந்த அறிக்கை பகிரங்கப்படுத்தப்படவுமில்லை. குற்றவாளிகள் ஒருவரேனும் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படவுமில்லை.

நல்லிணக்க ஆணைக்குழுவின் இடைக்கால சிபாரிசுகள் நடைமுறைப்படுத்தப்படும் என்று ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் 17 மற்றும் 18ஆவது கூட்டங்களில் இலங்கை அரசு உறுதியளித்தது. அந்த வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படவில்லை.

இந்நிலையில், கடந்த 5 மாதங்களாக 32 பேர் காணாமற் போயுள்ளனர் அல்லது கடத்தப்பட்டுள்ளனர். பத்து சடலங்கள் பொது இடங்களிலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளன. வடக்கில் அதிகமான பெண்கள் துணை ஆயுதக்குழுக்களால் நடத்தப்படும் விபசாரத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு, கிழக்கின் மொழி மற்றும் கலாசாரம் ஆகியவற்றை மாற்றியமைக்கும் நடவடிக்கைகளில் அரசும், அரச படையும் ஈடுபட்டுள்ளன. இந்து ஆலயங்கள் அழிக்கப்பட்டு புத்தரின் சிலைகள் எழுப்பப்படுகின்றன.

இந்நிலையில், நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்த அரசுக்குப் போதிய கால அவகாசம் வழங்கப்படவில்லை என்று அரசு கூறுகின்றது. அரசு போதிய கால அவகாசத்தைக் கோருவது வடக்கு, கிழக்கின் ஜனநாயக நிலைமையை இல்லாது செய்யும் நிகழ்ச்சிநிரலை நடத்திச்செல்வதற்கே தவிர, நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கு அல்ல.

ஆகவே, ஐ.நா. மனித உரிமைகள் சபை இந்த விடயத்தில் சரியாகச் செயற்படத் தவறின், இலங்கை தமது பொறுப்பிலிருந்து மிக இலகுவாகத் தப்பித்துவிடும். இலங்கையில் நீதி, நல்லிணக்கம் மற்றும் சமாதானத்தை நிலைநாட்ட மனித உரிமைப் பேரவையில் தனது 19ஆவது கூட்டத்தொடரில் எடுக்கும் நடவடிக்கைக்கு எமது கூட்டமைப்பு முழுமையான ஆதரவை வழங்கும் - எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

New Science Hall & College
2014 Batch
**Mechanics**
சனி, ஞாயிறு - 12.30 - 1.30
ஆரம்பம் - 17.03.2012
By - R. குகன்

புதிய பிரிவுகள் ஆரம்பம்
**Chartered Accountancy**
CAB-I & CAB-II
Minimum Requirement :- GCE A/L 3 Passes
விரிவுரைகள் ஆரம்பம் - 17-03-2012 சனி
BATCH 1- sat & Sun 10.00-2.00pm TAMIL MEDIUM
BATCH 11- sat & Sun 8.00-1.00pm ENGLISH MEDIUM

வங்கியியல் கற்கைநெறிகள்
**CBF & DBF**
BATCH 1- sat & Sun 07.00-2.00pm TAMIL MEDIUM
BATCH 11- sat & Sun 07.00-2.00pm ENGLISH MEDIUM
BATCH 111- sat & Sun 11.00-5.00pm TAMIL MEDIUM
அடிப்படைத்தகமைகள்
G.C.E.( O/L) 06 PASSES with 05 Credits including
Maths/Commerce & Accounts and Language (Tamil/English)
விரிவுரைகள் ஆரம்பம் 24-03-2012
Further Detail, Director
Jaffna College Undergraduate Dept.
464, Hospital Road.
Jaffna.
0212223382/0212229149

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

## கிளி/எடிசன் கல்லூரியின் அழைப்பிதழ்

* கல்வியாளர்களின் சேவை நலன் பாராட்டு விழா
உயர்திரு குருகுல ராஜா
[கிளி. கல்விப்பணிப்பாளர்]
உயர் திரு.சின்னராசா
[கிளி. பிரதிக்கல்விப்பணிப்பாளர்]
* தாய்தந்தை இருவரையும் இழந்த 110 மாணவர்களுக்கான கல்வி ஊக்குவிப்பு நிகழ்வு
* S.R.J சுதன் ஆசிரியரின்
தரம்-11 வரலாற்று நூல் வெளியீட்டு விழா
காலம் - 17.03.2012
நேரம் - 2.15 மணி
இடம் - டிப்போ சந்தி அருகில்
கூட்டுறவு மண்டபம் கிளிநொச்சி
பிரதம விருந்தினர்
பேராசிரியர் பரமு. புஸ்பரட்ணம்
[வரலாற்று துறைத்தலைவர், யாழ் பல்கலைக்கழகம்.]
சிறப்பு விருந்தினர்
★ திருமதி றூபாவதி கேதீஸ்வரன்
[அரச அதிபர், கிளிநொச்சி]
★ திரு.ச.முருகவேல்
[வலயக்கல்வி பணிப்பாளர், கிளிநொச்சி]
திரு ப.அரியரத்தினம்
[முன்னாள் கிளிநொச்சிவலய மேலதிக மாகாணக்கல்விப்பணிப்பாளர்]
அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றோம்.
கல்லூரிச் சமூகம்.

## மன்மோகன்சிங்கின் உருவப் பொம்மை எரிப்பு

01 சர் பிரணாப் முகர்ஜி தனிப்பட்ட எந்த நாட்டுக்கு எதிராகவும் கொண்டு வரப்படும் தீர்மானத்தை இந்தியா ஆதரிப்பதில்லை என்று தெரிவித்தார்.

இதனையடுத்து நேற்று முன்தினம் காலை திருவில்லிபுத்தூர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிப் பேரவை உறுப்பினர் பொன்னுப்பாண்டியன், முன்னாள் பேரவை உறுப்பினர் ராமசாமி, அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற நிர்வாகிகள் வேதநாயகம், இசக்கி, சுரேந்திரன் உள்ளிட்டோர் பஸ் நிலையப் பகுதியில் குவிந்தனர். பின்னர் பிரதமர் மன்மோகன்சிங்குக்கு எதிராக கோஷம் எழுப்பினர். திடீரென பஸ் நிலையம் முன்பாகப் பிரதமரின் உருவப்பொம்மையை எரித்தனர்.

இதையடுத்து பொலிஸார் உருவப் பொம்மையைக் கைப்பற்றி பேரவை உறுப்பினர் பொன்னுப்பாண்டியன் உள்பட அனைவரையும் கைது செய்தனர்.

கட்டடவேலைகள் செய்து கொடுக்கப்படும்
கட்டடங்கள் கட்டுதல், வீடு கட்டுதல், பழைய வீடுகளைத் திருத்துதல், மாபிள் பதித்தல், குளியலறை கட்டுதல், சுற்றுமதில் கட்டுதல் மற்றும் தச்சுவேலை Plumbing, Electrical, Painting, Grillwork அனைத்தும் தரமாகவும் குறைந்த விலையிலும் குறித்த காலத்தில் செய்து கொடுக்கப்படும்.
AXSHAYA CONSTRUCTION, JAFFNA.
தொடர்புகளுக்கு: 0776679564

மணல் விற்பனைக்குண்டு
நாற்பது வருடங்களாக கட்டிட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்ததெனும் நாமத்தைப் பெற்ற உப்புத் தன்மையற்ற மணல் 26 வருடங்களின் பின் இப்போது யாழ்ப்பாணத்தில்.
4 டிரக்டர் - 24000/-
அரிந்த கல்லும் விற்பனைக்குண்டு.
(கல்லு 1 -38/-)
தொடர்புகளுக்கு
கண்ணா
0776766499

### மத்தியஸ்தர் தொடர்புகொள்க

யாழ்.மாவட்டத்தில் இலங்கை கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தால் நடத்தப்பட்ட கிரிக்கெட் மத்தியஸ்தர் பரீட்சையில் சித்தியடைந்த அனைத்து மத்தியஸ்தர்களையும் இன்று முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாண கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு சங்கச் செயலாளர் கேட்டுள்ளார்.

(ம-14)

O/L ? நீங்களும் தகவல்தொழில்நுட்ப, வணிக துறையில் சாதனை படைக்கலாம். International Passport- in Education
Pass / Fail
CIMA-UK 50% off Course fee
Software Engineering
BIT University of Colombo Sem 1,2,4,6 & Project
Multimedia Adobe

SMS your name & course to 772395895 & Get Schol.
USA, UK, பல்கலைக்கழகங்களில் Master Degree
Closing Date 17.03.2012
Government Scholarship.
MCS Supported By UNDP/JRRP
புலமைப் பரிசிலுக்கும் மேலதிக விபரங்களுக்கும் நேரில், 324, Palaly Road,Campus Junction,Jaffna.
Free : BCS-UK, IELTS / TOEFL, CISCO-CCNA , Diploma courses..

# மரண அறிவித்தல்

## திருமதி குலசேகரம்பிள்ளை சிவபாக்கியம்



பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும், உடுவில் தெற்கு யாமாச்சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட குலசேகரம்பிள்ளை சிவபாக்கியம் நேற்று (15.03.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற குலசேகரம்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வினாயகமூர்த்தி - பறுபதம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான தெய்வானைப்பிள்ளை, ஆனந்தகுமாரசாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவஜோதி, தர்மகுலரட்ணம் (குலசேகரம்பிள்ளை அன் சன்ஸ்), யோகேஸ்வரன், ஜெகசோதி, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயும், பத்மநாதன், பிரேமா, கலாவதி, கணேசரட்ணம், சிவசுத்தானந்தன் (சிவன் ஸ்ரோர்ஸ், கோண்டாவில்) ஆகியோரின் அன்பு மாமியும், ஐங்கரன் (இத்தாலி), பத்மஜோதி (சுவிஸ்), வர்ஷினி (மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்), கஜாகரன் (பிரான்ஸ்), பிரதீபா (கனடா), பிரதீபன் (கனடா), பிரவீனா, சயானா, சாயிறா, கோமதி, சிவாகர் (கனடா), பிரியதர்சன் (இத்தாலி), சிவதர்சினி (பிரான்ஸ்), பிரியதர்சினி (நுண்கலைப்பீடம் நான்காம் வருடம்), ரேணுகா, சிவானுஜன், சாருஜன், நந்தகுமார் (சுவிஸ்), பிரணவன் (Kevilton Electrical Product (Pvt) Ltd.), சயந்தன் (கனடா), தினேசன் (Upalli Food & (Pvt) Ltd.), முருகதாஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், நயனிகா (சுவிஸ்), நந்தனா (சுவிஸ்), சிவப்பிரஹா, மிதுஷன் (கனடா), சமிக்கா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.03.2012) வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

யாமா சந்தி,
உடுவில் தெற்கு, மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.03.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.